உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 07 திங்கட்கிழமை (23.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 270

# அரசுக்கு எதிரான பலமிக்க கூட்டணி அமைக்க முஸ்தீபு

## ஐக்கிய தேசியக்கட்சி அழைக்கிறது



கொழும்பு, ஒகஸ்ட் 23

அரசின் ஒவ்வாத ஆட்சிக்கு எதிராக பலமிக்க கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க எதிர்க் கட்சிகள் யாவும் அரசியல் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

நாட்டில் தலைவிரித்தாடும் பொருளாதார நெருக்கடி, சட்டமின்மை, தனிக்குடும்பத்திடம் அதிகாரப்பிடி ஆகியன நிறைந்த அரசின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக அணி திரண்டு செயற்பட முன்வருமாறு ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் நேற்று அழைப்பு விடுத்திருக்கிறார்.

இதுதொடர்பாக அவர் நேற்று ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போதைய கொடுங்கோல் ஆட்சியில் இருந்து இந்நாட்டைக் காப்பாற்றத் துடிக்கும் இலங்கையின் அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான காலம் வந்துவிட்டது.

யுத்த வெற்றியைக் காட்டி தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடி, சட்டமின்மை, ஒரு தனிக்குடும்பத்தின் அதிகாரப்பிடி போன்றவற்றைத் தணிக்க முடியாது. யுத்தத்திற்குப் பொறுப்பானவர்கூட இப்போது ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

எமது ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற தன்மையால் எமது பொருளாதாரம் பலவீனமடைந்துள்ளது. ஆடைத் தொழிற்றுறை, மட்பாண்டக் கைத்தொழில் உள்ளி

(28ஆம் பக்கம் பார்க்க)

## சந்நிதி முருகனின் தேர்ப்பவனி இன்று

யாழ்ப்பாணம், ஒக. 23

பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய பெருந்திருவிழாவில் இரதோற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முருகப்பெருமான் 9 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்காட்சி வழங்குவார்.

நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை மௌனத்திருவிழாவும் நடைபெறும்.

உற்சவத்தை ஒட்டி ஆலயத்தை சூழவுள்ள மடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டுவருகின்றது. (ஒ-ஐ)

(உள்ளே சிறப்பு மலர்)

## பிரிட்டனின் இலங்கைத் தூதராக முன்னாள் கடற்படைத் தளபதி

### புலிகளுடனான இறுதிப் போரில் பங்குபற்றியவர்



கொழும்பு, ஒக. 23

முன்னாள் கடற்படைத் தளபதியும், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருமான அட்மிரல் வசந்த கரன்னகொடவை பிரிட்டனுக்கான தூதுவராக இலங்கை அரசு நியமிக்கவுள்ளது.

பிரிட்டனில் தூதுவராகப் பணியாற்றிய நிஹால் ஜெய சிங்க தமது பதவிக்காலம் முடிவடைந்து நாடு திரும்பியுள்ளார்.

இதையடுத்தே அட்மிரல் வசந்த கரன்னகொட அங்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

எனினும், இதற்கான அனுமதியை இன்னமும் இலங்கை அரசு பிரிட்டனிடம் இருந்து பெறவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய படை அதிகாரிகளில் அட்மிரல் வசந்த கரன்னகொடவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-01)

## இணைந்து கொள்வது குறித்து ஜே.வி.பி. பரிசீலனை செய்யும்

கொழும்பு, ஒக. 23

பலமான எதிர்க்கட்சிக் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு முன்வருமாறு ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜய சூரியவிடுத்த அழைப்பு குறித்து ஜே.வி.பி. அதன் அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்றுக் கூறினார்.

தமது அரசியல் உயர்பீடக் கூட்டம் ஒரு வாரத்துக்குள் இடம்பெறும் என்றும் கூட்டத்துக்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் சோமவன்ஸ மேலும் கூறினார்.

அரசின் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க முன்வருமாறு கரு ஜயசூரிய

(28ஆம் பக்கம் பார்க்க)

## தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும்

### கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 23

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டில் இலங்கையும் இந்தியாவும் விரைவில் கையெழுத்திடவுள்ளன - என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான உடன்பாட்டு ஆவணம் வரையப்பட்டு விட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை தூத்துக்குடி - கொழும்பு கப்பல்சேவையை ஆரம்பிப்பதற்கும் இரு நாடுகளும் இணங்கியுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் விக்ரம் மிஸ்ரி இது குறித்து தெரிவிக்கையில்-

இந்தக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான மரபுவழித் தொடர்புகளை மீள உருவாக்க முடியும். ஆயினும் கப்பல் சேவையை நிர்வகிப்பது யார், பயணக் கட்டண விவரங்கள் உள்ளிட்டவை தொடர்பாக புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-சி)

## ஐ.நா. பிரதிநிதிப் பதவிக்கு ஜெனரல் சவேந்திர சில்வா?

கொழும்பு, ஒக. 23

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கான துணை நிரந்தரப் பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரின்போது 58 ஆம் படையணியை சவேந்திர சில்வா வழிநடத்தியிருந்தார்.

நந்திக்கடலில் இடம்பெற்ற இறுதிக் கட்ட மோதல்களின் போதும் ஜெனரல் சவேந்திர சில்வா படையினரை வழிநடத்தியிருந்தார்.

ஐ.நாவில் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியாக இதுவரை பணியாற்றிய றோஜித பாலித ஹோகண்ண அந்தப் பதவியிலிருந்து ஏற்கனவே நீக்கப்பட்டார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் நிரந்தரத் துணைப் பிரதிநிதியாக கடமையாற்றிய

(28ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்படிக்கையின் மூலப்பிரதியைக் காணவில்லையாம்

கொழும்பு, ஒக. 23

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் மூலப் பிரதி காணாமல் போயுள்ளது என வெளிவிவகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த உடன்படிக்கையின் மூலப்பிரதிகள் கலைக்கப்பட்ட சமாதான செயலத்திலோ, பாதுகாப்பு அமைச்சிடம் இல்லை என்றும் தெரியவந்துள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இந்த போர் நிறுத்த

(28ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் வசிக்கும் யாழ். இளைஞனுடன் 'பேஸ் புக்' கில் மலர்ந்த காதல் முறிந்ததால் வத்தளைத் தமிழ் மாணவி தற்கொலை

கொழும்பு, ஒக. 23

லண்டனில் வசிக்கும் இலங்கைத் தமிழ் இளைஞன் ஒருவருடன் பேஸ்புக் மூலம் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட வத்தளைத் தமிழ் மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுப் பாடசாலை மாணவி ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வெள்ளவத்தையில் அமைந்துள்ள பிர

(28ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுக் கடவுச்சீட்டுள்ளோர் தரைவழியாக யாழ். வரத்தடை

### கட்டுப்பாடு தொடர்வதாக பாதுகாப்பு அமைச்சுத் தகவல்

யாழ்ப்பாணம், ஒக. 23

சுற்றுலாப் பயணிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட வெளிநாட்டுக் கடவுச் சீட்டு வைத்திருப்போர் வடபகுதிக்கு தரை வழியாகப் பயணம் செய்வதற்கான தடை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கிறது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் அனைவரும் விமா


(28ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தேர்த் திரு விழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. துர்க்கை அம்மன் தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளுவதை முதல் இரு படங்களிலும் உற்சவத்தில் கலந்து கொண்ட பக்தர்களில் ஒரு தொகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.
தேரில் அம்மன் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட் காட்சி வழங்குவதையும் அடியழிக்கும் பெண்களையும் அங்கப்பிரதிட்டை செய்யும் அடியார்களையும் இறுதி இரு படங்களிலும் காணலாம்.
*(படங்கள்: நேசன்)*

## குடத்தனை விநாயகனுக்கு இன்று கும்பாபிஷேகம்

வடமராட்சி கிழக்கு, குடத்தனை காளிவயல் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோயில் புனராவர்த்தன சம்புரோஷண அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ கும்பாபிஷேகப் பெருவிழா இன்று காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான கிரியைகள் பூர்த்தியாகி இன்று கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

(சிறப்பிதழ் 21 ஆம் பக்கத்தில்)

### சுன்னாகம், கந்தரோடை வீட்டில்

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவனின் சடலம் சுருக்கிட்ட நிலையில் நேற்று மீட்பு

சுன்னாகம், ஓக. 23

சுன்னாகம், கந்தரோடையில் வீடு ஒன்றின் சமையல் அறையில் இருந்து பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது. சுன்னாகம் சுப்பிரமணியம் வீதியில் உள்ள வீட்டில் துர்நாற்றம் வீசியதை அடுத்து பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் சடலம் சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் மாவிட்டபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து மேற்படி வீட்டில் வசித்துவந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் வைத்தீஸ்வரன் சாரங்கன் (வயது 30) என்பவருடையது என அடையாளங் காணப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டில் குறித்த இளைஞன் தாயாருடன் வசித்துவந்ததாகவும், தாயார் லண்டனுக்குச் சென்றதைத் தொடர்ந்து தனியாகவே வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர் திருமண மானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞன் வெள்ளியன்று இரவு உணவைத் தனது உறவினர் வீட்டிலிருந்து பெற்றுவந்த பின்னர் அவரைக் காணவில்லை எனவும், நேற்றுக்காலை சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்துக்கு வந்த சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன், மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன் சடலத்தைப் பார்வையிட்டார். அத்துடன் சட்ட வைத்திய அதிகாரியைப் பிரேத பரிசோதனை செய்து சடலத்தைத் தாயார் லண்டனில் இருந்து திரும்பியதும் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-38-86)

## ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 23

இடமாற்றம் தொடர்பாக அறிவுறுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் உள்ள சயன்ஸ் ஹோல் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பான மேம்முறையீடுகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் நியாயபூர்வமான கோரிக்கைகளை எழுத்துமூலம் சமர்ப்பிப்பதோடு அதற்கான வலுவான காரணங்களையும் ஆவணம் மூலம் உறுதிப்படுத்திக்கொண்டுவருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நாளை மறுதினம் புதன்கிழமை வடக்கு மாகாண சபையில் கூடுகின்ற இடமாற்ற சபைக் கூட்டத்தில் மேற்படி ஆசிரியர்களின் நிலைப்பாடுகள் தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் கலந்துரையாடி நியாயப்பாடுகளை முன்வைக்கவுள்ளனர்.

இதற்கு ஏற்றால்போல் ஆசிரியர்கள் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலைத் தொடர்ந்து ஆசிரியர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலும் நடைபெற இருப்பதால் சங்க உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. (ஒ-10)

## துர்க்காதேவிக்கு இன்று தீர்த்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 23

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பெருந்திருவிழாவில் இன்று தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

காலை வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று அம்பாள் வீதி உலா வந்து தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் 11 ஆம் பக்கத்தில்)


**நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு அதிரடி மலிவு விற்பனையில்...**

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறைச் சாதனங்கள், பல மாபிள் வகைகள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கால்மிதிபேசின்கள் போன்றவற்றை தரமாக, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

**ஸ்ரார் செராமிக்ஸ்**
**இல.05, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.** தொ.பே: 0215672061, 077 7578277.


## கண்ணீர்க் காணிக்கை



எமது பீடத்தின் 24ஆம் அணி மாணவன்

*வைத்தீஸ்வரன் சாரங்கன்*

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவ மாணவர் ஒன்றியம் (102343)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபுண்ணியம் பாக்கியம்



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபுண்ணியம் பாக்கியம் நேற்று (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் சிவபுண்ணியத்தின் அன்பு மனைவியும் மன்மதராசா, சந்திரவதனா (ஆசிரியை, மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி), திருமதி யோகலிங்கம் மோகனா, திருமதி சபேசராசா நாகதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில். தகவல் :
தொ.பே.: 0775382205 (102344) பேரன் - மன்மதராசா பேரன்


**தொடர்புகொள்ளவும்**

UP-QQ-2850 இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் அல்லது சாரதி

தொடர்பு கொள்ளவும் :- தாசன்
T.P. : 0772179443

**சாரதி தேவை**

அனுபவமுள்ள ஆட்டோச் சாரதி உடனடியாகத் தேவைப்படுகின்றார். 0777729019 / 0779909711 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**வீடு தேவை**

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து 1½ கிலோ மீற்றர் சுற்றாடலில் அரசாங்க உத்தியோகத்தர் மூன்றுபேர் வசிப்பதற்கு எல்லா வசதிகளும் அடங்கிய சிறிய அல்லது பகுதி வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு :- 0772728539

**தவறிவிட்டது**

நெல்லியடிக்கும் கோப்பாய்க்கும் இடையில் அருமைநாதன் அசோகத் என்னும் பெயருடைய (83239141 V) இலக்கமுடைய அடையாள அட்டை 16.08.2010 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளவும்.

தொ.பே.இல.: 0778332928


## மரண அறிவித்தல்கள்

### இராமசாமி விஜேந்திரன்

(3ஆம் வருட மாணவன், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்)



குமாரபுரம், முள்ளியவளை, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமசாமி விஜேந்திரன் (3ஆம் வருட மாணவன், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்) நேற்று முன்தினம் (21.08.2010) சனிக்கிழமை மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கில் உள்ள அவரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,* தகவல் :
*திருநெல்வேலி மேற்கு.* (சி/570112) குடும்பத்தினர்.

### திருமதி ஜெகதீஸ்வரி கிருஸ்ணமூர்த்திக்குருக்கள்

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரி கிருஸ்ணமூர்த்திக்குருக்கள் நேற்றுமுன்தினம் (21.08.2010) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கிருஸ்ணமூர்த்திக்குருக்கள் (B.A. ஆசிரியர், ம/தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கல்வயல் பஞ்சாட்சரக்குருக்கள் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான வறுத்தலைவிளான் சோமசுந்தரசர்மா - அமிர்தாம்பிகை தம்பதிகளின் மகளும் பிருந்தாவனின் அன்புத் தாயாரும் ரவிச்சந்திரசர்மா (யாழ்ப்பாணம்), ஜெயராமசர்மா (சுதுமலை), தீபதர்சனசர்மா (பொலிகண்டி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை வேம்பிராய் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வயல்,* தகவல்: ப.கிருஸ்ணமூர்த்திக்குருக்கள்
*சாவகச்சேரி.* (சி/570113) (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வளைந்து கொடுக்கப்போவது எந்தத்தரப்பு?

இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகள் வழங்கும் ஜி.எஸ்.பி.+ வரிச் சலுகையை மீண்டும் வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மீள் பரிசீலனை செய்வதற்கு தயார் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்து இருக்கின்றது.

இந்தத் தகவலைக் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகத் துறை அதிகாரி றொஷான் லைமன் தெரிவித்திருக்கிறார். இதற்கு முன்னதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஒன்றியத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான பிரமாணங்களின் அடிப்படையில் பேசுவதானால், இலங்கை அரசாங்கம் அதற்குத் தயார் என்று கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அந்த வகையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்து இருக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் வரையான ஒழுங்கு விதிகளின் கீழேயே இதுவரை இலங்கைக்கு ஜி.எஸ்.பி + வரிச்சலுகை வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2011 டிசெம்பர் வரையான காலப்பகுதிக்கென புதிய (723/2008) ஒழுங்குவிதிகளை ஐரோப்பிய ஒன்றியம் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

புதிய ஒழுங்கு விதிகளில் உள்ள குறிப்பிட்ட பதினைந்து அலகுகளையும் (நிபந்தனைகளையும்) இலங்கை அரசு நிறைவேற்றினால் மட்டுமே, ஜி.எஸ்.பி + வரிச்சலுகை வழங்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது. அதன் பொருட்டு சுமார் ஒரு வருட கால அவகாசமும் வழங்கியது.

ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட அவகாச காலத்திலும் குறிப்பிட்ட பதினைந்து நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதில் இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை. பதிலுக்கு அத்தகைய நிபந்தனைகளை, விதிகளை ஐரோப்பிய ஒன்றியம் வேண்டும் என்றே புதிதாக புகுத்தி உள்ளதென இலங்கை அரசும் அதன் மந்திரிப் பிரதானிகளும் ஆவேசம் கொண்டு எழுந்தனர். புலம்பெயர்ந்த தமிழர்களின் தூண்டுதலிலேயே ஐரோப்பிய ஒன்றியம் அவ்வாறு செய்துது என்றும் குற்றம் சுமத்தி இருந்தது. அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று வீறாப்புப் பேசினார் அப்போதைய பிரதமர் உட்பட்ட அரச பிரதானிகள்

* அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது சரத்தைத் திருத்த வேண்டும்.
* அவசர காலச் சட்டத்தை வில்க்க வேண்டும்.
* பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் 8 ஆம், 9ஆம் இலக்கச் சரத்துக்களை நீக்க வேண்டும்.
* ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு தனிநபர் எவரும் அரசின் மனித உரிமை மீறல் குறித்து முறைப்பாடு செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.
* ஐ.நா.சபையின் விசேட செயல்முறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
* தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.
* கண்காணிப்புப் பணிகளின் பொருட்டு தடுப்பு முகாம்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.
* பூரண ஊடக சுதந்திரத்தை செயற்பாட்டில் உறுதி செய்ய வேண்டும்.

ஜி.எஸ்.பி+ வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்த பதினைந்து அம்சங்களில் (அரசு இவற்றை நிபந்தனை என்றே சொல்லும்) மேற்கண்ட ஒன்பதும் உள்ளடங்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பதினைந்து அம்ச நிபந்தனைகளையும் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் கேட்டதும் அரசுக்கு மனம் பதறியது; உடலில் இரத்த அழுத்தம் ஏறியது; இரத்தத்தில் சீனியின் அளவும் உயர்ந்தது. அவற்றின் விளைவு கோபாவேசமானது.

நாள்கள் செல்லச் செல்ல வீறாப்பும் வீராவேசமும் எகிறின. ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிராக அரசியல் முக்கியஸ்தர்கள் எல்லாம் கொடுக்கை இழுத்துக் கட்டினர். ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் எதிராக சதி செய்கிறது எனத் திட்டினர்.

ஜி.எஸ்.பி + வரிச்சலுகை கிடைக்காவிடில் இலங்கை அரசும் மக்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் காலில் விழமாட்டார்கள் என்றும் அரசு கர்ச்சித்தது. எட்டாப் பழம் புளிக்கும் என்ற சுரத்தில் இராகங்களை வாசித்தது.

இத்தனையும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளை சமாளிக்கச் சென்று தோல்வியுடன் திரும்பிய பின்னர் அரங்கேறியவை.

ஆனால் இப்போது-

ஐரோப்பிய ஒன்றியத்தின் 2005 ஆம் ஆண்டின் பிரமாணத்தின் கீழ் பேசுவதற்கு தயார் என்ற நிலைக்கு வந்திருக்கிறது இந்நாட்டு அரசு. ஜி.எஸ்.பி + சலுகை நீக்கப்பட்டதால் உண்டான விளைவுகளைத் தலைப்பாரமாக ஏற்றிக் கொள்ள முடியாத நிலையில், அது விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற நிலைக்கு வந்திருக்கிறது.

இத்தனைக்கும், ஒன்றியத்தின் 2005 ஆம் ஆண்டின் பிரமாணத்தின் மேலே குறிப்பிட்ட பதினைந்து அம்சங்களும் உள்ளடங்கி இருந்ததாகக் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக அதிகாரி றொஷான் லைமன் தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய ஒரு பின்னணியில், இலங்கை அரசு ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடத்தவுள்ள பேச்சுக்கள் எந்தப் பக்கத்துக்கு வெற்றியாக அமையும், எந்தத் தரப்பு விட்டுக் கொடுக்கப் போகிறது என்பது போகப் போகத்தான் தெரியும்.இலங்கை அரசு தனக்கு முன்னால் நெளிந்ததும், அதன் பக்கத்தில் முன்னேற்றம் இல்லாவிடினும் ஐரோப்பிய ஒன்றியம் வளைந்து கொடுக்குமா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# பொன்சேகா முறைப்படி விண்ணப்பித்தால் மன்னிப்பு வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும்

நேற்று 22.08.2010 அன்று சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி

கடந்த செவ்வாய்க்கிழமை கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்ற நான்கு அதிகாரிகள் முன்னாள் ராணுவ ஜெனரல் காவலில் வைக்கப்பட்டுள்ள பகுதிக்குள் நுழைந்தார்கள். அங்கே கேணல் சன்னாஎட்டி பொல பொன்சேகாவிடம் கடிதம் ஒன்றைக் கையளித்தார். ஓகஸ்ட் 13 ஆம் திகதி பொது இராணுவ நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பளித்ததன் விவரம் அதில் அடங்கியிருந்தது. ராணுவ மேஜர் பிரதீப் விதானகே, கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் பி.பி.சந்திரசிறி, சிறை அதிகாரி டபிள்யூ. டபிள்யூ.எவ்.பி. வர்ணகுலசூரிய மற்றும் சிறைக் காவலர் ஒருவரும் சென்றிருந்தனர்.

பொன்சேகா இருந்த பகுதியின் கதவில் கேணல் எட்டிப்பொல தட்டினார். பொன்சேகா கதவைத் திறந்து கேட்டார் 'இது என்ன' மற்றவர் சொன்னார் 'எனக்குத் தெரியாது' பின்னர் பொன்சேகா கடிதத்தைத் திறந்து வாசித்தார்.

'எனது மெடல்களை எடுக்கப் போகிறார்கள். அவையெல்லாம் மலசல கூட குழிக்குள்' என்று கூறினார் பொன்சேகா. அவரது பதக்கங்கள் யாவும் பறிக்கப்பட்டுவிட்டமை பற்றி அவர் அறியாது இருந்தார் போலும். என்றாலும் அவை குறித்த பொருள்கள் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கை எதுவும் விடுக்கப்பட்டிருக்கவில்லை. அவர் மேலும் சொன்னார், 'என்னுடைய பென்ஷனுக்கு அடித்து விட்டார்கள்' பின்னர் தற்போது தனது எரிபொருளுக்கான கட்டணமாக ரூ.15 ஆயிரம் செலவழித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அதுதான் முன்னாள் ராணுவ தளபதியும் பின்னர் பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதியாக நியமிக்கப்பட்டவருமான சரத் பொன்சேகாவுக்கு அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருந்த தகவல். அவர் வகித்த பதவிகள், பட்டங்கள்யாவும் பறிக்கப்பட்டு விட்டன. இனிமேல் அவர் தளபதி (ஜெனரல்) என்று அழைக்கப்படமாட்டார். கௌரவ பட்ட, பதக்கங்களை அவர் இனிமேல் அணிய முடியாது. இனி அவருக்கு ஓய்வூதியமும் வழங்கப்படமாட்டாது. புகழின் உச்சியிலிருந்து அவமானத்தின் அடித்தளத்துக்கு அவர் தள்ளப்பட்டுவிட்ட நிலை.

இதேசமயம் இன்னுமொரு ராணுவ நீதிமன்ற விசாரணை யொன்றை அவர் எதிர்கொள்ள விருக்கிறார். இதிலும் குற்றவாளியாகக் காணப்பட்டால் சிறைத்தண்டனையொன்று விதிக்கப்படலாம்.

கார்திகேவாகே சரத் சந்திரலால் பொன்சேகா 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி 5 ஆம் திகதி இலங்கை இராணுவத்தில் இரண்டாம் லெப்டினன்டாக பதவி ஏற்றார். அவரது 40 வருடகால சேவையில் பல்வேறு சர்ச்சைகளை எதிர் கொண்டு முன்னேறினார். சேவை யில் இறங்கி நான்கு வருடங்களே ஆகியிருந்த வேளையில் தியத்தலாவை இராணுவ பயிற்சி நிலையத்தில் பணியாற்றிய போது ஒரு முறை பட்டம், பதவிகளை இழக்கும் நிலையை எதிர்கொண்டார். இந்த படைப்பிரிவில் இருந்தபோது வசிப்பிட பிரிவிலிருந்த அடுத்தவர் ஒருவரின் வீட்டு உதவியாளர் ஒருவருடன் முறை கேடாக நடந்து கொண்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. குற்றவாளியாகக் காணப்பட்ட அவர் மீது ராணுவ சட்டத்தை முழுமையாக செயல்படுத்துவதில்லையென்று அவரது கட்டளை அதிகாரி கேணல் சிறில் ரணதுங்க தீர்மானித்தார். அதனால் பெரிதாக தண்டனை விதிக்காமல் ராணுவத்தில் தொடர்ந்து பணி புரிய அனுமதித்தார். அதன் மீது பொன்சேகா ராணுவத்தில் மிக உயர் பதவிகளுக்கு உயர்ந்தார்.

இந்த வருடம் ஜனவரியில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து களத்தில் நின்ற போட்டியாளராவார் அவர்.

பொன்சேகாவின் முன்னைய தவறான நடத்தைகள் யாவும் சமீப காலத்தில் மறக்கப்பட்டுவிட்டன. இலங்கையின் ராணுவத்துறையில் மிகப் பிரசித்தமான அதிகாரியாக அவர் உயர்ந்தார். கடந்த மே மாதம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னின்று நடத்தும் ராணுவத் தளபதியென்ற நிலையில் அவர் பணியாற்றியிருந்தார். அரசியல் மட்டத்தில் அந்தப் போருக்கு தலைமை வகித்த ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் ராணுவ மட்டத்தில் அவர் தலைமையைப்பகிர்ந்து கொண்டார். இந்தப் போரில் இவர்களுடன் சமாந்தரமான பங்காளியாக விளங்கியவர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆவார். ராணுவத்துக்கு தேவையான வளங்களைப் பொலிஸ் மற்றும் சிவில் ஆதாரங்களை அவர் வழங்கி உதவினார். போரினைத் தடுத்து நிறுத்துவதற்கு முயன்ற வெளியார் அழுத்தங்களுக்கு ஒரு தடுப்புப் பாறையாக நின்று செயல்பட்டவர் ஆவார்.

## மல்வத்தை மகாநாயக்கருக்கு ஜனாதிபதி மஹிந்தா கடிதம்

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் பொன்சேகா பொதுவேட்பாளராக நின்று போட்டியிட ஆதரவளித்த முக்கிய எதிர்க்கட்சி ஐ.தே.கவாகும். அதே சமயம் பொன்சேகாவுக்கு எதிராக ராணுவ நீதிமன்றத்தில் சாட்சியமளித்த இருவர் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது ஒரு விசித்திர நிலைப்பாடாகும். இவர்களின் சாட்சியத்தின் மீதே பொன்சேகா குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தம் சாட்சியத்தின் போது பத்திரிகையாளரான ருவான் வீரக்கூன் என்பவர் சி.டி.எம்.ஏ தொலைபேசிக் கருவியொன்றை பல இடங்களுக்கு கொண்டு வந்து தங்களை ஜெனரல் பொன்சேகாவுடன் உரையாடும்படி செய்தார் என்பது பற்றி அவர்கள் தம் சாட்சியத்தில் தெரி வித்திருந்தார்கள். வீரக்கூன் ராணுவ நீதி மன்றில் சாட்சியமளிக்காது போனாலும் புலன் விசாரணை அதிகாரிகளிடம் இவர்களின் கூற்றினை மறுத்திருந்தார்.

சாட்சியமளித்தவர்களில் ஜோன்சன் பெர்னாண்டோ (குருநாகல் மாவட்டம்) இப்பொழுது ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் சேர்ந்து அமைச்சராகிவிட்டார்.

லக்ஷ்மன் செனவிரட்ண ராணுவ நீதிமன்றில் அளித்திருந்த சாட்சியம் தொடர்பாக ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற குழுக் கூட்டம் நடந்தபோது சில கேள்விகளை எழுப்பியிருந்தார். பொன்சேகாவுடன் பல தடவைகள் சந்திப்புக்களை நடத்தியிருந்தார் என்று ராணுவ நீதிமன்றில் கூறினாரா என்று ரணில் அவரிடம் கேட்டார். அப்படி ஒன்றுமில்லையென அவர் பதில் சொல்லியிருந்தார்.

ஆனால் ராணுவ நீதிமன்ற அதிகாரப் பூர்வ ஆவணங்களில் விடயம் வேறு விதமாக உள்ளது.

அதில் ஒரு பகுதி வருமாறு:-

கேள்வி:- ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் ஐ.தே.கட்சி அவரை ஆதரிப்பதென எந்த காலகட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதென்பது உமக்கு நினைவிருக்கின்றதா?

பதில்:- சரியான திகதி நினைவில்லை. ஆனால் அது ஒக்டோபர் அல்லது நவம்பரில் தேர்தலுக்கு ஒரு மூன்று வாரத்துக்கு முன் இருக்கலாம்.

கேள்வி:- ஆனால் அந்தத் தீர்மானம் எடுப்பதற்கு முன்பதாக, ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகா போட்டியிடுவாரானால் ஐ.தே.க வின் நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும் என்பது குறித்து விவாதம் ஏதும் நடக்கவில்லையா?

பதில்:- ஆம்- நாங்கள் விவாதித் தோம்.

கேள்வி:- இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு எவ்வளவு காலத்துக்கு முன்னர் இந்த விவாதம் இடம் பெற்றது?

பதில்:- சிலவாரங்கள் - குறுகிய காலத்தில்.

கேள்வி:- பொன்சேகா போட்டி யிட்டால் அவரை ஆதரிப்பதா இல்லையா என்று நீங்கள் விவாதித்தீர்களா?

பதில்:- ஆம்

கேள்வி:- இதன் பொருள் என்னவென்றால் உங்கள் சாட்சியத்தின் படி ஜனாதிபதித் தேர்தலில் பொன் சேகா போட்டியிடப் போகிறார் என் பதை நீங்கள் அனைவரும் அறிந் திருந்தீர்கள்?

பதில்: அது சரியாகும்.

விக்கிரமசிங்க வேறு ஒரு கதையை நாடாளுமன்றத்தில் இந்தவாறு கூறினார்.

ஐ.தே.க.அப்படி ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கவில்லை, ராணுவநீதிமன்றத்தின் அரசுதரப்பு சட்டத்தரணி புவனேக அலுவிகார வேண்டுமென்றே ராணுவ நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தியுள்ளார். சரத் பொன்சேகாவை வேட்பாளராக நிறுத்துவதாக ஐ.தே.க சிறிகோதாவில் விவாதித்தது என்று. அப்படி ஒன்றும் நடைபெறவில்லை என்று நாடாளுமன்றில் கூறினார். ஐ.தே.கவின் செயல் குழுவில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. செயல் குழுவேட்பாளர் 'குறித்து விவாதிப்பதில்லை. நியமனங்களுக்கான சபைதான் அதனை விவாதிக்கும் என்றார் அவர்.

செயற்குழுவின் 2009 நவம்பர் 19 ஆம் திகதிய நிகழ்ச்சி நிரலிலிருந்து மேற்கோள் காட்டிய அவர் செயல் குழுவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அரசு இன்னமும் தீர்மானிக்கவில்லை. எனவே இப்போதைக்கு நாமும் அதுபற்றிய தீர்மானத்துக்கு வர வேண்டிய அவசியம் இல்லை யென்று தாம் கூறியதாக அவர் சொன்னார். அவர் மேலும் கூறுகையில், அந்த காலகட்டத்தில் ராணுவ சேவையிலிருந்து பொன்சேகா விலகியிருந்தார். நவம்பர் 12 ஆம் திகதிதான் அவர் பதவி விலகும் கடிதத்தை. சமர்ப்பித்திருந்தார். நவம்பர் 14 ஆம் திகதி ஜனாதிபதி அதை ஏற்றுக் கொண்டிருந்தார். நவம்பர் 26 ஆம் திகதியே பொன்சேகாவை ஆதரிப்பதற்கு சம்மதிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

**தமிழில்: கோகுலன்**

ராணுவ பொது நீதிமன்றம் ஓகஸ்ட் 11 ஆம் திகதி அதன் கடைசி அமர்வை நடத்தியபோது பொன்சேகாவுக்குக் கைத்தொலைபேசி ஒன்று கொடுக்கப்பட்டது. தமது சட்டத்தரணிகளை அழைத்துக் கொள்வதற்கு. அதை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

'சட்டத்தரணிகள் இருக்கும் போதுதான் நான் அவர்கள் மூலமாக தகவல் வெளியிடுவேன்' என்ற நீதிவான் அட்வகேட் நாயகம் (Judge Advocate General) கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் போது அவர் கூறினார்,

அவருடைய சட்டத்தரணிகள் வந்திருக்கவில்லை. அதற்குக் காரணம் நீதிமன்றங்களுக்கு (சாதாரண நீதிமன்றங்களுக்கு) அன்றைய தினம் விடு முறையாகும் என்பதே. அதன் பின் அரச சட்டத்தரணி இறுதி உரையை நிகழ்த்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. நீதிவான் சட்ட வல்லுநர் சட்டம் தொடர்பான விடயங்களை தொகுத்துக் கூறினார். அப்போது சட்ட கொள்கையாதெனில் ஒரு மனிதன் குற்றவாளி என்று நிரூபிக்கப்படும் வரை அவர் குற்றம் புரியாதவராகவே கருதப்பட வேண்டும். தற்காப்புத் தரப்பு எதனையும் நிரூபிக்க வேண்டும் என்பதில்லை என்றார்.

சந்தேகம் எதுவும் இருக்குமானால் ஜெனரல் விடுதலை செய்யப்பட்டாக வேண்டும் என்று. முடிவில் நீதிமன்றம் மீண்டும் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் என்பதை அறிவிக்கக்கூடியது. அதன்பின் தீர்ப்புப் பற்றி ஆலோசிப்பதற்காக நீதிமன்றம் கலைந்தது. இந்த விவரம் ராணுவ தளபதி மூலமாக பிரதம தளபதியான ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது. ஓகஸ்ட் 13 ஆம்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 08 | 24.08.2010 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | பூரணைவிரதம் |
| | மு.இ.10.04 வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | மு.இ. 10.44 வரை |
| சுபநேரம் | 10.35-12.05 வரை |
| ராகுகாலம் | 03.05-04.35 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மோசமான ஆட்டம்; இறுதிக்கு நுழைந்தது இலங்கை



கொழும்பு, ஒக.23

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று பகல் - இரவு ஆட்டமாக தம்புள்ளை, ரன்கிரி சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடந்தது. இந்திய அணி 103 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அடுத்து களமிறங்கிய இலங்கை அணி 104 ஓட்டங்களை எடுத்து இந்திய அணியை 8 விக்கெட்டுக்கள் மற்றும் 209 பந்துகள் வித்தியாசத்தில் தோற்கடித்து, வெற்றியை தன்வசப்படுத்தியது.

இந்தியா, இலங்கை, நியூஸிலாந்து ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்றுள்ள 'மைக்ரோமாக்ஸ்' கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் இலங்கை, தம்புள்ளையில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா 2 முறை மோதவேண்டும். 'லீக்' முடிவில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.

இதுவரை 5 'லீக்' ஆட்டங்கள் முடிந்து விட்டன. இதில் இலங்கை அணி 2 வெற்றியையும் ஒரு தோல்வியையும், இந்தியா ஒரு வெற்றி இரண்டு தோல்வியையும், நியூஸிலாந்து ஒரு வெற்றி ஒரு தோல்வியையும் கண்டுள்ளது. இலங்கை - நியூஸிலாந்துக்கிடையிலான மற்றொரு ஆட்டம் மழையால் பாதியில் கைவிடப்பட்டதால் இரு அணிகளும் தலா 2 புள்ளிகளை பகிர்ந்து கொண்டன. தற்போது நியூஸிலாந்து அணி 7 புள்ளிகளும் (3 ஆட்டம்), இலங்கை 11 புள்ளிகளும் (4 ஆட்டம்), இந்தியா 5 புள்ளிகளும் (3 ஆட்டம்) பெற்றிருக்கின்றன.

இந்தியாவும், நியூஸிலாந்தும் தாங்கள் வெற்றிபெற்ற ஆட்டங்களில் வெற்றிக்கான 4 புள்ளியுடன், ஒரு 'போனஸ்' புள்ளியையும் சேர்த்து பெற்றன. ஆனால் இலங்கை அணிக்கு இதுவரை கிடைக்காத 'போனஸ்' புள்ளி நேற்றைய ஆட்டத்தின் மூலம் கிடைத்தது.

முதலாவது 'லீக்' போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கையை தோற்கடித்திருந்தது. ஷேவாக்கின் அதிரடியான ஆட்டமும் (99 ஓட்டங்கள்), சிறப்பான பந்துவீச்சும் இந்திய அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தது. இந்த ஆட்டத்தின்போது இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரந்தீவ், ஷேவாக்குக்கு வேண்டுமேன்றே முறையற்ற பந்து வீச்சின் மூலம் சதத்தை எட்டுவதைத் தந்திரமாகத் தடுத்ததால் சர்ச்சை கிளம்பியது. விளையாட்டு விதிமுறைகளுக்கு மாறாக நடந்து கொண்ட ரந்தீவுக்கு இலங்கை கிரிக்கெட் சபை ஒரு ஆட்டத்தில் விளையாடத் தடை விதித்தது. பெரும் சலசலப்பை உருவாக்கிய அந்தச் சம்பவத்திற்கு பின்னர், இவ்விரு அணிகளும் மீண்டும் நேற்றுச் சந்தித்தன.

நேற்று நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் டோணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். இதன்படி இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களான கார்த்திக் - ஷேவாக் களம் புகுந்தனர்.

ஷேவாக் 12 ஓட்டங்களுடன் வெளியேற அவரைத் தொடர்ந்து இந்திய அணி வீரர்களின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரியத் தொடங்கின. இந்திய அணியின் துடுப்பாட்டக்காரர்கள் வரிசையில் கார்த்திக் (9), ரேகித் சர்மா (11), யுவராஜ்சிங் (38) ரெய்னா (8), டோனி (10), ஜடையா (0), குமார் (0), நெய்ரா (2), சர்மா (3), ஓஜா (2) என்று அனைத்து வீரர்களும் குறுகிய ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினர். துடுப்பாட்டக்காரர்கள் ஏமாற்றம் அளிக்க, இந்திய அணி 33.4 ஓவர்களில் 103 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் வரிசையில், மலிங்க (2), குலசேகர (2), மத்தியூஸ் (1), பெரேரா (5) விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

104 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கியது இலங்கை. ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களாக ஜெவர்த்தன - டில்ஷான் களம் புகுந்தனர். டில்ஷான் (35), ஜெயர்த்தன (33) ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்துக் களமிறங்கிய தரங்க (12), சங்கார (13) ஓட்டங்களையும் எடுக்க இலங்கை அணி வெற்றிபெற்றது.

15.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களை எடுத்து, 8 விக்கெட்டுக்கள் மற்றும் 209 பந்துகள் வித்தியாசத்தில் இந்திய அணியை தோற்கடித்தது.

இதன் மூலம் இறுதிப் போட்டிக்கு இலங்கை தகுதி பெற்றது.

## விளையாட்டு அரங்குகளில்

# அமெரிக்க ஓபனில் இருந்து செரீனா வில்லியம்ஸ் விலகல்

நியூயோர்க், ஒக.23



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகளிலிருந்து செரீனா வில்லியம்ஸ் விலகியிருக்கிறார்.

உலகின் முதல் நிலை டென்னிஸ் வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ். 28 வயதான அவர் காயம் காரணமாக, எதிர்வரும் 30ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகும் அமெரிக்க ஓபன் 'கிராண்ட்ஸ்லாம்' டென்னிஸ் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். 35 ஆண்டுகால பெண்கள் டென்னிஸ் தரவரிசை வரலாற்றில், முதல் நிலை வீராங்கனை ஒருவர் அமெரிக்க ஓபனில் விளையாட முடியாமல் போவது இதுவே முதல் முறையாகும்.

செரீனா வில்லியம்ஸ் கடந்த மாதம் ஹோட்டல் ஒன்றுக்கு விருந்துக்கு சென்றிருந்த போது, கண்ணாடி 'கிளாஸ்' உடைந்து அவரது வலது காலில் கிழிவு ஏற்பட்டது. இதற்கு சிறிய சத்திரசிகிச்சை செய்துகொண்ட செரீனா அதன் பின்னர் சர்வதேச போட்டிகளில் பங்கேற்காமல் ஓய்வெடுத்து வருகிறார். அமெரிக்க ஓபன் போட்டிக்குள் உடல் தகுதியை எட்டிவிடும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தார். ஆனால் காயத்தில் இருந்து இன்னும் மீளவில்லை. முழுமையாக குணமாகும்வரை டென்னிஸ் போட்டியில் ஆடமுடியாது என்று டாக்டர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து இப்போட்டியில் இருந்து விலகியுள்ளார். இது குறித்து செரீனா விடுத்துள்ள அறிக்கையில், ''அமெரிக்க ஓபனில் விலகுவது மிகுந்த ஏமாற்றத்தையும், வேதனையையும் அளிக்கிறது. எனது டென்னிஸ் வாழ்க்கையில் மோசமான தருணங்களில் இதுவும் ஒன்று'' - என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 13 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைக் கைப்பற்றிருக்கும் செரீனா 1999, 2002, 2008ஆம் ஆண்டுகளில் அமெரிக்க ஓபனையும் வென்றிருந்தார். கடந்த முறை அரையிறுதியில் கிம்கிலிஸ்டர்சிடம் தோல்வியடைந்து வெளியேறினார் என்பது குறிப்படத்தக்கது.

# இங்கிலாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான்



இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணியின் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பாகிஸ்தான் அணி பந்துவீச்சாளர் முகமது ஆமிர் விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில்....

லண்டன், ஒக.23

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் கடந்த 18ஆம் திகதி தொடங்கியது. முதல் இன்னிங்ஸில் முறையே இங்கிலாந்து 233 ஓட்டங்களும், பாகிஸ்தான் 308 ஓட்டங்களும் எடுத்தன. 75 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 3ஆவது நாள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்த நிலையில் 4ஆவது நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 222 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் வரிசையில் முகமது ஆமிர் 5 விக்கெட்டுக்கள், சயித் அஜ்மல் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் பாகிஸ்தானுக்கு 148 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்ஸை ஆடிய பாகிஸ்தானுக்கு விக்கெட்டுகள் வேகமாக சரிந்தாலும், பரபரப்புக்கு மத்தியில் வெற்றி இலக்கை எட்டியது. 41.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்கள் சேர்த்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. அணித் தலைவர் சல்மான் பட் 48 ஓட்டங்களும், முகமது யூசுப், இம்ரான் பர்கத் தலா 33 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் வரிசையில் ஸ்வான் 3 விக்கெட்டுகள், ஆண்டர்ஸன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

முன்னதாக முதல் 2 டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது. 4 டெஸ்ட் கொண்ட தொடரில் பாகிஸ்தான் 1:2 என்ற கணக்கில் தொடர்ந்து பின்தங்கி இருக்கிறது. கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி லார்ட்சில் ஆரம்பமாகிறது.

# தண்டனையிலிருந்து தப்பினார் அணித் தலைவர் சங்கக்கார



கொழும்பு, ஒக. 23

இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் கொழும்பில் நடந்து வருகிறது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான ஆட்டம் மழை காரணமாக பாதியில் கைவிடப்பட்டது.

இந்தப் போட்டியின்போது இலங்கை அணித்தலைவர் சங்கக்கர 'ரன்' ஓடும் போது (27ஆவது ஓவர்), தனது காலால் நியூஸிலாந்து பந்துவீச்சாளர் நாதன் மக்கல்லத்தின் காலை இடித்தார். போட்டியின் போது இப்படி நடந்துகொள்வது, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) வீரர்கள் நடத்தை விதிமுறைகளை மீறிய செயலாகும். இதனால் சங்கக்கரா மீது 2.2.4 சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப் பட்டது.

இது குறித்து போட்டி நடுவர் ஆலன் ஹார்ஸ்ட் விசாரணை நடத்தினார். வீடியோ காட்சிகளையும் பார்வையிட்டார். இதில் சங்கக்கர வேண்டுமென்றே இவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்பது தெரியவந்தது. அவரது செயல் வீரர்களின் நடத்தை விதிமுறைகளை மீறவில்லை என்று நடுவர் அறிவித்தார். இதன் காரணமாக தண்டனையில் இருந்து சங்கக்கர தப்பினார்.

இந்தச் சம்பவம் குறித்து சங்கக்கர கூறுகையில், ''முதலாவது ஓட்டத்திற்கு ஓடும் போது, 2ஆவது ஓட்டத்தையும் எடுக்க முடியும் என்பது தெரியும். ஆனால் முதலாவது ஓட்டத்தை ஓடும்போது கடைசி 2 அடி எடுத்து வைத்தபோது, பந்துவீச்சாளர் மக்கல்லம் திடீரென எனது வழியை மறித்து விட்டார். இதனால் அவர் மீது இடிக்க வேண்டியதாகிவிட்டது. அவர் வேண்டுமென்றே இவ்வாறு நடந்து கொண்டாரா என்பது எனக்கு தெரியாது. ஆனால் நான் எந்தத் தவறும் செய்யவில்லை. அவர் மீது இடித்த பின்னர், என் மீது தான் தவறு, மக்கல்லம் மீது தவறில்லை என்று இலங்கை நடுவர்கள் விஜேவர்த்தனா, ரன்.மோர் மார்ட்டினஸ், காமினி திஸநாயக்க ஆகியோர் போட்டி நடுவரிடம் கூறினார்கள். ஆனால் போட்டி நடுவர் வீடியோக் காட்சிகளைப் பார்த்துவிட்டு, என்மீது தவறில்லை என்று அறிவித்திருக்கிறார்'' - என்றார்.

# 'சம்பியன்ஸ் லீக்' கிரிக்கெட் போட்டி வர்ணனையாளராக சைமண்ட்ஸ்

சென்னை, ஒக.23

தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடக்கும் 'ஏயா ரெல்' இரண்டாவது 'சம்பியன்ஸ் லீக்' 20 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் 10 அணிகளில் ஒன்றாக டெக்கான் சார்ஜர்ஸ் அணி தகுதி பெறாததால் அந்த அணியின் அதிரடி வீரர் சைமண்ட்ஸ் வர்ணனையாளராக பணியாற்றவிருக்கிறார்.

இது பற்றி அவர் கூறும் போது,

''இந்த ஆண்டுக்கான 'சம்பியன்ஸ் லீக்' போட்டியில் விளையாடத் தகுதி பெறாமல் போனது எனக்கும், நான் விளையாடும் டெக்கான் அணிக்கும் மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

இதனால் 'சம்பியன்ஸ் லீக்' போட்டியில் சவால் நிறைந்த வர்ணனையாளர் பொறுப்பை ஏற்றுள்ளேன். இப்படி வர்ணனையாளராகப் பணியாற்றுவது எனக்கு முதல் முறை. ஆட்டத்தின்போது வீரர்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதை ரசிகர்களுக்குப் புரிய வைக்க முயற்சிப்பேன். எதிர்காலத்தில் 'சம்பியன்ஸ் லீக்' கோப்பையை வெல்லவேண்டும் என்ற லட்சியம் எனக்கு உள்ளது'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் நிகழும் திருட்டுக்களை குறைக்கப் பொலிஸார் தீவிர நடவடிக்கையில்

## யாழ்.பிராந்தியப் பொலிஸ் அத்தியட்சகர் தகவல்



யாழ்ப்பாணம்,ஓக.23

நல்லூர்ப் பெரும் திருவிழாக் காலங்களில் பெறுமதியான தங்க நகைகளின் திருட்டுக்களைத் தடுக்கும் வகையில் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக யாழ் - பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் யாழ்.மாவட்டத்திலுள்ள ஒன்பது பொலிஸ் பிரிவுகளின் மூலமும் அங்குள்ள பகுதி மக்களுக்கு ஒலிபெருக்கிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பிரசாரங்கள் இன்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதுமட்டுமல்லாது இன்றுமுதல் யாழ்.அரசடி வீதியில் விசேட அலுவலகமொன்று நிறுவப்பட்டு ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு தினமும் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

இதுதொடர்பாகப் பொலிஸார் பின்வரும் அறிவுறுத்தல்களைப் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளனர்.

அவையாவன -

* பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே செல்வதானால் வீட்டைச் சரியாகப்பூட்டி விட்டு சரியாகச் சோதனை செய்து பார்த்துவிட்டு வெளியே செல்லவும்.
* வீட்டைவிட்டு தினமும் வெளியில் செல்வதானால் வீட்டில் ஒருவரைப் பாதுகாப்புக்கு வைத்துவிட்டுச் செல்லவும்.
* யாழ்.நகருக்கு வரும்போது நீங்கள் ஓட்டிக் கொண்டு வரும் எந்த வாகனங்களாக இருந்தாலும் அந்த வாகனத்தை யாழ்.மாநகர சபையினால் நடத்தப்படும் வாகனத் தரிப்பிட இடங்களில் நிறுத்தி பூட்டிவிட்டுச் செல்லவும். மற்றும் அந்த வாகனத்தின் பாதுகாப்புக்கருதி வேறு ஏதாவது பாதுகாப்பு முறையைக் கையாளவும்.
* தனிப்பட்ட விடயங்களுக்காக வீட்டில் இருந்து நகருக்கு வருவதானால் நீங்கள் அணிந்து கொண்டு வரும் தங்க நகைகள் மற்றும் பணம் வேறு பொருள்களை பஸ்களில் பயணிக்கும் போது மிகவும் அவதானமாக வைத்திருக்கவும்.
* வீட்டில் இருக்கும் தங்க நகைகள் மற்றும் பணம் என்பவைகளைக் திருடர்கள் வந்து எடுத்துச் செல்லாமல் பத்திரமாகப் பாதுகாப்பான இடங்களில் வைக்கவும்.
* யாழ்ப்பாண நகரில் அதிகமாக மக்கள் நடமாடும் இடங்களில் உங்களாலே நடத்தப்படும் தங்க நகை வியாபார நிலையங்கள் மற்றும் வேறு வியாபார நிலையங்களில் உள்ள பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துக் கதவுகளைப் பூட்டிவிட்டு மற்றும் இரவு நேரங்களில் யாழ்.மாநகர சபையின் மூலம் போடப்பட்டிருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் அறிவித்துவிட்டுச் செல்லவும்.
* நீங்கள் ஏதாவது ஒரு விடயத்துக்கு யாழ்.நகருக்கு வந்து மீண்டும் வீட்டுக்குச் செல்லும்போது நீங்கள் அணிந்திருக்கும் தங்க நகைகள் மற்றும் பணம், பொருள்களைக் கொண்டு செல்லும் போது மிகவும் அவதானமாக இருக்கவும்.

மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத வீதிகளில் பயணிப்பதைத் தவிர்க்கவும்.

இதன் மூலம் நல்லூர் ஆலயத்துக்கு வரும் வழியிலும், வீடுகளிலும் ஏற்படும் திருட்டுச் சம்ப வங்களைக் குறைக்க முடியும் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-16)

# கால்நடைகள் இங்கே இளைப்பாறலாம்



சுப்பிரமணிய பூங்காவுக்கு முன்பாகவுள்ள யாழ்.மாநகர சபையின் சுற்றுச் சூழல் முகாமைத்துவப் பிரிவுக் கட்டடம் கால்நடைகளின் இளைப்பாற்று மண்டபமாக மாறியுள்ளது.

இந்தக் கட்டடம் கடந்த பல வருடங்களாக இயங்காமல் முடங்கிய நிலையில் காணப்படுகின்றது.

மாநகர சபையின் வளாகத்தில் அமைக்கப்பட்ட இக்கட்டடம் கவனிப்பாரின்றிக் காணப்படுவதால் இப்பகுதிகளில் மேய்ச்சலுக்காகத் திரியும் கால் நடைகள் தாமாவது இதனைப் பயன்படுத்துவோமென்று எண்ணி, தமது இளைப்பாற்று மண்டபமாக இதனைப் பயன்படுத்தி வருகின்றன. இதனால் இக்கட்டடம் எங்கும் கால்நடைகளின் எச்சம் நிறைந்து காணப்படுகின்றது. (எ-21)

# திடீர் மழையால் பெருவெள்ளம்; நல்லூரில் வியாபாரிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.23

கடந்த சனிக்கிழமை திடீரெனப் பெய்த மழையினால் நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள நடைபாதை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

ஆலயச் சுற்றாடலில் பொருள்களை விற்றுக்கொண்டிருந்த சமயம் திடீரென மழை கொட்டித் தீர்த்ததால் வியாபாரிகள் தமது பொருள்களை அகற்ற முடியாது சிரமப்பட்டனர்.

அதனைவிட வியாபாரிகள் விற்பனைக்காக வைத்திருந்த பெறுமதி வாய்ந்த உடுபுடைவைகள் மற்றும் இதர பொருள்கள் மழையில் நனைந்து நாசமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இடைவெளியின்றி தொடர்ச்சியாக மழைகொட்டித் தீர்த்ததால் ஆலயத்தின் மேற்கு வீதியில் வெள்ளமும் ஏற்பட்டுள்ளது. (எ-26)

# கொட்டும் மழையிலிருந்தும் தப்ப கை கொடுத்த நடைபாதைக் கடைகள்

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த தென்னிலங்கை பயணிகள் திடீர் மழையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

போதிய விடுதி வசதி யாழ்ப்பாணத்தில் இல்லாததால் நூற்றுக்கணக்கான பயணிகள் முற்றவெளிப் பகுதியைத் தமது தங்குமிட மையமாகப் பயன்படுத்தி வந்தனர். அவ்வாறு முற்றவெளியில் தங்கியிருந்த பயணிகளே மழை காரணமாக எங்கு தங்குவது, என்ன செய்வது என்று தெரியாது தவித்தனர்.

கடைசியாக யாழ்.மாநகர சபையினால் புல்லுக்குளத்துக்கு முன்பாக நடைபாதை கடைகளுக்கென அமைக்கப்பட்ட கொட்டகைகளில் இந்த பயணிகள் தங்கியதைக்காண முடிந்தது. (எ-26)

# வெள்ளத்தால் வெளிக்கிளம்பும் கற்கள் பாதையில் பயணிப்போர் நிலை பரிதாபம்!

யாழ்ப்பாணம்,ஓக.23

திருநெல்வேலி பரவைக்குளம் வீதி நேற்று முன்தினம் பெய்த பெருமழையை அடுத்து மழைநீர் தேங்கிச் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

வீதியில் போடப்பட்டிருந்த கற்கள் வெளிக்கிளம்பியுள்ளதால் பாதசாரிகளும், வாகனங்களும் இந்தப் பாதையால் போக்குவரத்துச் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் எனினும் திருத்த வேலைகள் எதுவும் இடம்பெறாத நிலையில் தொடரவுள்ள மழையினால் மக்கள் பெரும் சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனக் கூறப்படுகிறது. (எ-111)




'நொதேர்ன் சென்ரல் ஹொஸ்பிற்றல்' கட்டடத்தின் அடிக்கல் நடும் வைபவம் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சமய சடங்குகளில் இந்து மத குருமார் ஈடுபடுவதை முதலாவது படத்திலும், குறித்த வைத்தியசாலையின் நிர்வாக இயக்குநர் எஸ்.பி.சாமி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என். ரவிராஜ் ஆகியோர் கட்டடத்துக்கான அடிக்கல் நடுவதை அடுத்துள்ள நான்கு படங்களிலும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வைத்தியசாலையின் ஆலோசகர் டாக்டர்.கீர்த்திசிறி எதிரிசிங்க ஆகியோர் உரையாற்றுவதையும் இறுதிப் படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: டிலீப்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரோடும் வீதியெங்கும் இராணுவ முள்வேலி; தமிழர் கோயில்களும், நிலங்களும் ஆக்கிரமிக்கப்படுகின்றனவா?

யாழ்ப்பாணம் கோயில் நிலம் என்றழைக்க தக்க வகையில் கோயில்கள் நிறைந்திருக்கின்றன. யாழ்ப்பாணக் கோயில்கள் யாழ்ப்பாண மக்களின் இந்து சமய பற்றையும் பொருளாதார நிலையையும் காட்டுகின்றன. ஆங்கிலேயரின் வருகையின் பொழுது சுதேச மதம் மற்றும் மொழி குறித்தான போராட்ட குறியீடாகவும் திகழ்ந்தன. அத்தோடு யாழ் சமூகம் இந்து மையவாதம் கொண்டது என்ற எதிர்க் கருத்தையும் உண்டு பண்ணியது. யாழ்ப்பாணத்தோடு ஒப்பிடும் பொழுது வன்னியில் குறைவான கோயில்களே உள்ளன. உருத்திரபுரீச்சரம் என்ற உருத்திரபுரம் சிவன் கோயில் உட்பட பொறிக்கடவை அம்மன் கோயில், வற்றாப்பளை அம்மன் கோயில், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில், புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோயில், புத்தூர் நாகதம்பிரான் கோயில், கிளிநொச்சி கந்தசாமி கோயில், இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோயில் என முக்கியத்துவம் வாய்ந்த பல கோயில்கள் உள்ளன.

ஆலமரங்களுக்கும் அரச மரங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் வலுப்பெறுகின்றன என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பு எம்.பி சரவணபவன் தெரிவித்திருந்தார். அரச மரங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் புத்தர் சிலைகளை படையினர் வைத்திருக்கின்றனர். வன்னியை கைப்பற்றிய பிறகு தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதில் காட்டிய ஆர்வத்தை போலவே புத்தர் சிலைகளை நாட்டி தமிழர்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் அபாய நிலமையையும் படைகள் உருவாக்கின. வன்னி நிலத்தை கைப்பற்றிய பிறகு நீண்ட கால நோக்கில் வன்னி நிலத்தை கையகப்படுத்தும் தமிழர்களின் பண்பாட்டை சிதைக்கும் எண்ணம் கொண்ட அரசின் நவீன படைகளாக புத்தர் சிலைகள் வன்னிக்கு படையெடுக்கின்றன.

துறவையும் அமைதியையும் தியானத்தையும் குறிக்கும் புத்தர் ஏன் ஈழ மக்களிடம் வேண்டப்படாதவரானார்? ஆக்கிரமிப்பாளர் என்ற முகத்தை வைத்திருப்பவர் போலானார்.

ஆக்கிரமிக்க நினைக்கும் பொழுது புத்தர் சிலைகளை தமிழர் நிலங்களில் நடக்க விட்டார்கள். கந்தரோடை போன்ற இடங்களில் கிடைத்த புத்தர் சிலைகள் தமிழர்கள் புத்த மதத்தை வழிபட்டார்கள் என்பதையும் ஈழத்தில் தமிழ் பௌத்தம் சிறியளவில் இருந்தது என்பதை சொல்கின்றன. அதையும் சிங்கள பௌத்த தொல் பொருள்களாகக் காட்டி சிங்கள நிலமாக தமிழ பேசும் மக்களின் தாயகத்தை சோடிக்க சிங்கள ஆட்சியாளர் களர்களும் பேரினவாத புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து திட்டமிட்டு தற்பொழுது செயல்படுகின்றனர்.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக இந்து ஆலயங்களை இலக்கு வைத்து புத்தர் சிலைகள் நகரத் தொடங்கியதோடு இந்து ஆலய பரிபாலனங்கள் அரச உடமையாக்கப்பட்டுள்ளன. அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி சிறிதரனுடன் இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோயிலுககுச் சென்றிருந்தேன். அந்தக் கோயிலுக்கு நினைவு தெரிந்த காலம் முதல் போய் வருகிறேன். எனது ஐந்தாறு வயது முதல் போயிருக் கிறேன். கோயிலின் ஆலய வாசல் மறிக்கப்பட்டு முட்கம்பி வேலி போடப்பட்டிருக்கிறது. இப்படி பின்புற வாசலால் கோயில் ஒரு காலத்திலும் இருந்ததில்லை. ஆலய வாசலில் இப்பொழுது இராணுவ முகாமிருக கிறது. இராணுவ முகாமைச் சுற்றி கோயிலின் பின் வீதியில் உள்ள காணியை இராணுவம் முகாம் அமைப்பதற்காக முட்கம்பி அடித்து அடைத்து வைத்திருக்கிறது.

இரணைமடு கனகாம்பிகை அம்மன் பெருங்கோவில் என்றழைக்கப்படும் அந்த ஆலயத்தில்தான் முதன் முதலில் சித்திரத் தேர் ஓடியதாக குறிப்பிடப்படுகிறது. அதுவும் மூன்று தேர்கள் சமநேரத்தில் செல்லும் கோயில் என்ற பெருமையும் இந்த அம்மன் பெருங்கோவிலுக்கு இருக்கிறது. 1950களில் கிளிநொச்சியில் பரவலாக குடியேற்றங்கள் ஏற்பட்டன. பல கிராமங்கள் உருவாகின. அந்தக் காலத்தில் வாழ்ந்த ஈழத்து ஞானியான யோகர் சுவாமிகளின் வாக்கும் ஆலோசனையும் இந்த ஆலயத்தை



உருவாக்கியதாக சொல்லப்படுகிறது. வேப்பமரத்தின் கீழ் சிறிய ஓலைக் கொட்டிலில் இந்த ஆலயம் முதன் முதலில் அமைக்கப்பட்டது. இரணைமடுக்குளத்து நீர் நிரம்பி பெருக்கெடுத்து உடைக்கும் பொழுது இந்த ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெறும். உடைக்கும் நிலையிலிருந்த குளம் வற்றிய அதிசயம் நடந்ததை பார்த்ததாக பக்தர்கள் குறிப்பிடுகிறார்கள். இரணைமடுக்குளம் கிளிநொச்சி மக்களுக்கு எந்தளவு விவசாயத்திற்கு கைகொடுக்கிறதோ அந்தளவுக்கு இரணைமடு அம்மன் கோயில் மக்களிடம் முக்கியம் பெறுகிறது.

இதுவரையில் மூன்று குடமுழுக்குகளை கண்டுள்ள இந்த ஆலயம் முதல் குடமுழுக்கை அறுபதுகளிலும் இரண்டாவது குடமுழுக்கை 1981இலும் மூன்றாவது குடமுழுக்கை 1996இலும் கண்டது. சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று தேர்த் திருவிழா நடைபெறும். ஆயிரம் பானைகள் வைத்து பொங்கல் நடைபெறும். இரணைமடுக்குளத் தின் நலன் குறித்த நம்பிக்கையியையும் வன்னி மக்களின் பொருளாதார செழிப்பை யும் ஆயிரம்



பானைப் பொங்கல் வெளிப்ப டுத்துகிறது. பல விசேட உற்சவங்களும் இங்கு நடைபெறுகின்றன.

கிளிநொச்சியின் வளர்ச்சியுடன் காலத்தியில் இக்கோயில் வளர்ச்சி பெற்று பெருங் கோவிலாக மாறியது. ஆனால் வன்னியில் நடந்த யுத்தம் இந்தக் கோயிலை தாக்கியதுடன் அதன் வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. யுத்தம் காரணமாக கூரைகள் சிதைவடைந்து வளாகம் சிதைவடைந்து சுவர்களில் காயங்களுடன் இருக்கிறது. தை மாதம் 29ஆம் திகதியிலிருந்து மீண்டும் பூசைகளை தொடங்கியிருக்கும் இந்த ஆலயம் தற்பொழுது எதிர்கொள்ளும் பிரச்சினை தேரோடும் வீதியை இழந்ததுதான்.

மக்களிடையியே எந்த வேறுபாடு அற்ற வகையில் மூன்று தேர்களும் இழுத்துச் செல்லப்படுவதை பார்த்திருக்கிறேன். உழைக்கும் மக்களின் ஆலயமாகவும் நம்பிக்கைக்குரிய கோவிலாகவும் திகழ்ந்திருக்கிறது. பிள்ளை வரம், திருமண வரம் என்று இந்தக் கோயிலை நாடி பலரும் வந்து செல்லுவதை நீண்டகாலமாக பார்ப்பதாக கோயிலின் பரிபாலனசபை உறுப்பினர் செல்வராஜா குறிப்பிட்டார். இந்த மக்களது தெய்வத்தின் வழி தரப்படுமா என்பதுதான் இப்பொழுது உள்ள பிரச்சினை.

மக்கள் தங்களுக்கு வழி கிடைக்கவில்லை. என்று கோயிலுக்குச் செல்வார்கள். அப்படியிருக்க கோயிலுக்குச் செல்லும் வழியே தெய்வம் நடமாடும் வழியே தடுக்கப்பட்டிருப்பதுதான் ஈழத்து மக்களின் துர்பாக்கிய நிலமையாகும். கடவுளின் சக்தியும் மக்களின் நம்பிக்கையும் உரசுகின்றன. ஏன் கோயில் வளாகத்தை முகாமுக்காக அபரித்துள்ளார்கள்? அங்கிருந்துதான் ஆக்கிரமிப்பும் இராணுவமயமாக்கலும் தொடங்குகின்றன. ஆகம முறைப்படி முன்புறமாக வரவேண்டிய கோயிலுக்கு பின்புறமாக பக்தர்கள் வருவதாக செல்வராஜா குறிப்பிட்டார். மக்களின் சமய நம்பிக்கையோடு அமைதி அறம் பற்றிய கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் சமூக நிறுவனமாகவும் இநதக் கோயில் முக்கியம் பெறுவதாக அவா தெரிவித்தார்.

தேரோடும் வீதியை தடுத்து முள் வேலி அமைத்திருக்கிறார்கள் என்பதுதான் வன்னிக் கோயில்களின் அபாய நிலமையை சொல்கின்றன. இரணைமடுக்குளத்தின் முன் மூலையில் ஒரு புத்தர் சிலையும் வைக்கப்பட்டிருக்கிறது. குளத்திற்கு வரும் பெரும்பான்மையினப் பிரயாணிகள் வணங்கிச் செல்லுவதற்காகத் தான் அந்த சிலை வைக்கப்பட்டிருப்பதாக படைத்தரப்பு கூறுகின்றது.



புத்தர் சிலை இப்படி பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. குளங்கள் தெருக்கள் சந்திகள் என்று வடக்கு கிழக்கில் புத்தர் சிலைகள் நிலத்தை ஆக்கிரமித்துக் கிடக்கின்றன. படையினர் நிலங்களை கைப்பற்றிய பிறகு தாம் தங்கும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகளை வைக்கின்றனர். அல்லாரைத் தடுப்பு முகாமினுள் இந்து கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. கிளிநொச்சி நகரத்தில் பாரிய புத்தர் கோவில் அமைக்கப்பட்டிருக் கிறது. சமாதான காலத்தில் திருமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டது. கிழக்கில் பல இடங்களில் இப்படி புத்தர் முளைத்திருக்கிறார்.

இதைப்போல நெருக்கடிக்கு உள்ளாகி

**நவராஜ் பார்த்தீபன்**

யிருக்கும் மற்றொரு கோயில் முறிகண்டி. தெரு முறிகண்டி ஆலயம் என்பது பின்னர் மருவி திருமுறிகண்டி ஆலயம் என அழைக்கப்படுகிறது. 200 வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்த கோயில் என்று கூறப்படும் இந்த ஆலயம் தெருவில் ஆறிச் செல்லும் பொழுது வணங்கப்பட்டு வந்த நிலையில் தோற்றம் பெற்றிருக்கிறது. பாலை மரத்தின் கீழ் வைக்கப்பட்ட ஒரு கல் பின்னர் இந்த ஆலயமாக வளர்ச்சி பெற்றது. ஏ-9 பாதை முக்கியத்துவம் மிக்க பாதையாக மாறும் காலத்தில் முக்கியத்துவம் பெறும் இந்த ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்தது.

ஈழத்து போர் காரணமாக இந்த ஆலயததிற்கு வருபவர்களின் எண்ணிக்கை அடிக்கடி பாதிக்கப்பட்டுள்ளது. முறிகண்டி பகுதி மக்கள் இந்த ஆலயத்தில் கச்சான் விற்றல், தேநீரகம் மற்றும் உணவகம் நடத்தல், பூசைப் பொருட்கள் விற்றல் போன்ற தொழில்களை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். தற்பொழுது காலம் காலமாக முறிகண்டி ஆலயத்தை நம்பி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு கடைகள் மறுக்கப்பட்டு கூட்டறவுச் சங்கங்கள் கடைகளை நடத்துவதாக அந்த வர்த்தகர்கள் விசனம் தெரிவித்திருக்கிறார்கள். அத்தோடு வர்த்தக நடவடிக்கைகள் பறிபோகும் அபாயம் தெரிவதாகவும் அவர்கள் சொல்கிறார்கள்.

இந்த ஆலயம் அரச உடமையாக மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் எப்பொழுது பொதுமக்களின் பரிபாலனசபைக்கு கையளிக்கப்படும் என்று தெரியவில்லை. நாட்டில் சுமுகமான சூழல் தோன்றியதும் கையளிக்கப்படும் என்று அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் சுமுக நிலை தோன்றி விட்டதாக அரசு தானே சொல்கிறது என்றும் மக்களே முறிகண்டி ஆலயத்தை பரிபாலிக்க வேண்டும் என்றும் வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றார்கள். அரசு முறிகண்டி ஆலய அதிகாரத்தை நீண்ட கால நோக்கில் கையகப்படுத்துவதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆலயத்தின் உரிமையாளர் இந்த ஆலயம் மற்றும் காணி நிலம் தொடர்பில் வழக்கு தொடர்ந்து கொண்டிருக்கிறார். ஆலயத்தை உருவாக்கியவரின் பெயரில் ஒரு மண்டபம் அமைக்கப்படும் என்றும் தனிநபருக்கு இந்த ஆலயம் உரித்துடையது அல்ல என்றும் அரச அறிவிப்பு தெரிவிக்கிறது. இந்த ஆலயம் அரச உடமையாக்கப்படுவது வியப்பாக அல்லது அதிசயமாக இருப்பதாக தெரிவிக்கும் பக்தர் ஒருவர் அது அந்த கிராம மக்களிடமே கையளிக்கப்பட வேண்டும் எனவும் சொல்கிறார்.

முறிகண்டி கச்சான் மிகவும் பிரபல்யமாக விரும்பி சாப்பிடப்படுவது. 'முறிகண்டியானே' என பக்தி பெருக அழைக்கப்படும் இந்த ஆலயம் பின்னர் நேத்தி வைக்கும் ஆலயமாகவும் மாறியது. யுத்தம் காரணமாக இந்த ஆலயம் சேதத்திற்கு உள்ளானது. மடங்கள் பாதிக்கப்பட்டன. தெருவால் செல்லும் மக்கள் தங்கியிருந்து ஆறிச் செல்லுவதற்காக அந்த மடங்கள் அமைககப்பட்டுள்ளன. மடங்களின் மேலால் குளிர்மையான மரங்கள் நிற்கின்றன. மடங்கள் இப்பொழுது மக்கள் தங்கியிருக்க முடியாத நிலையில் உள்ளன.


முறிகண்டிப் பகுதியில் உள்ள காணிகள் அபரிக்கப்படும் அபாயம் அந்தப் பகுதிக்குரிய மக்களை கடும் அச்சத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. தடுப்பு முகாம்களில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முறிகண்டி மக்களின் மீள்குடியேற்றம் எப்பொழுது எப்படி நடக்கப் போகிறது? என்ற கேள்விகளுடன் நிறைவேறாத நிலையில் இருக்கின்றன. முறிகண்டிப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறப்போவதாக வெளிவந்த கருத்துக்களை அரசு மறுத்து அங்கு இராணுவ குடியிருப்புக்களையே அமைக்கப் போவதாக தெரிவிக்கிறது. சுமார் 4611 ஏக்கர் காணிகள் இப்படி அபகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காணி விடயத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராக அப்பொழுதிருந்த இமெல்டா சுகுமார் மற்றும் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் முரளிதரன் போன்றோர் தெரிவித்த கருத்துக்கள் காணிகள் பறிபோகும் நிலமையை உறுதி செய்வதாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

நஷ்டஈடு கொடுக்கப்பட்டு குடியிருப்பு வேறு இடத்திற்கு அகற்றப்படுவதை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? என்பதுதான் முக்கியமானது. மக்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்கள்.

காலம் காலமாக மக்கள் வாழ்ந்து வந்த முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களை கைபற்றும் திட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கும் மக்கள் அதற்காக இறுதிவரை போராடுவோம் எனவும் சொல்கிறார்கள். வீடு திரும்ப வேண்டும் என்ற கனவுடன் திரும்பியே தீருவோம்

(8ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இதில் மாணவர்களை ஆசிரியரொருவர் வாழ்த்தி வழியனுப்புவதை முதற்படத்திலும், பரீட்சையின் முதற்பகுதி நிறைவுற்றதும் மாணவர்கள் அது தொடர்பாக ஆசிரியரொருவருடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும்-
மாணவர்களைப் பரீட்சைக்கு அனுப்பிவிட்டு காத்திருக்கும் பெற்றோரை மூன்றாவது படத்திலும் பரீட்சை முடிந்து வெளியேறும் மாணவர்களிடம் அது தொடர்பாகப் பெற்றோர்கள் ஆர்வத்துடன் வினாவுவதையும் அழைத்துச் செல்வதையும் இறுதி இரு படங்களிலும் காணலாம். *(படங்கள்: சுகந்தன், பிரணவன்)*

# மீனவர் நீண்டகாலம் தங்கியிருந்து தொழில்புரிய நவீன வசதிகள் கொண்ட படகுகள் வழங்கப்படும்

## -மத்திய வங்கி அதிகாரிகள் குழுவுடனான சந்திப்பில் தீர்மானம்-

யாழ்ப்பாணம்,ஓக.23

கடற்றொழிலாளர்களுக்கு நீண்ட நாள்கள் தங்கியிருக்கக்கூடிய நவீன வசதிகள் கொண்ட படகுகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இலங்கை மத்திய வங்கி பிரதி ஆளுநர் டபிள்யூ.எம்.கருணாரத்ன தலைமையிலான குழுவினருக்கும் கடற்றொழில் சமாசங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்றது.

யாழ்.குடாநாட்டின் பிரதான பொருளாதாரத் துறைகளாக விளங்கும் கடற்றொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு என்பவற்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு இலங்கை மத்திய வங்கியினால் யாழ்ப்பாணம் ''கிறீன் கிராஸ்'' விடுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் மிகச்சிறிய வள்ளங்களையே பயன்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கு கடலில் நீண்டகாலம் தங்கி நின்று தொழில்புரியும் வகையில் பல நாள்கள் தங்கியிருக்கக்கூடிய படகுகளை (மல்ரி போர்ட்ஸ்) வழங்குவதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை அதிகரிக்க முடியும் என மத்திய வங்கி இனங்கண்டுள்ளது. அதனடிப்படையில் கடற்றொழில் சமாசங்கள் குறித்த படகுகளைப் பெறுவதற்கு மிகத் தகுதியானவர்களின் பெயர் விவரங்களை மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டம் அரசாங்க வங்கிகளூடாக வழங்கப்படும் அந்தக் கடன் வழங்குவதற்கு ஒருங்கிணைப்பாளராக இலங்கை மத்திய வங்கி செயற்படும்.

இவ்வாறான கடன் திட்டங்களுக்கான வட்டி வீதமும் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளன. முன்னர் 12 வீதமாக இருந்த கடன் வட்டி வீதம் தற்போது 9 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது பயனாளிகளுக்குப் பேருதவியாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-319)

# போன் அடித்தால் வரும் 'பொலிஸ்கார்'; குற்றச் செயல்களைத் தடுக்க புதுயுக்தி!

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.குடாநாட்டில் சேவையில் ஈடுபடுவதற்கென 'அவசர சேவைப் பொலிஸ் கார்'ஒன்று கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்.குடாநாடு பூராகவும் இடம்பெறும் பெரியளவிலான குற்றச்செயல்கள் தொடர்பாகத் தகவல்கள் கிடைக்குமிடத்து உடனடியாகவே சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்து சென்று நடவடிக்கை எடுக்க வசதியாகவே இச்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே எந்த இடத்தில் குற்றச் செயல்கள் இடம்பெற்றாலும் பொதுமக்கள் 021 321 0827 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு அறிவித்தால், உடனடியாகப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இது போன்ற அவசர சேவை பொலிஸ் கார்கள் சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் யாழ்.மாவட்டத்துக்கு இப்போதுதான் ஒரு கார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-16)

## கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ்.கொக்குவில் இராமகிருஷ்ணன் வித்தியாலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் வீதியைக் கடந்து செல்லும்போது விபத்துக்களுக்கு உள்ளாவதாகவும், வாகனங்களைச் செலுத்த முடியாமல் இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத இவ்வீதியைத் திருத்தித் தருமாறு பலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது இதனைக் கருத்திற்கொண்டு குறித்த வீதியினைச் சீர்செய்து தருமாறு அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

(எ-313-317)

## பொதுக்கூட்டம்

வடமராட்சி, ஓக.23

கரவெட்டிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் நா.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இப்பிரதேசத்தின் கால்நடை வளர்ப்பை மக்கள் மத்தியில் ஊக்குவிப்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

(எ-236)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# குடாநாட்டில் பெய்த மழையால் வெங்காயச் செய்கைக்கு பாதிப்பு

கடந்த சனிக்கிழமை குடாநாட்டில் பெய்த மழையினால் விவசாயக் காணிகளில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தாழ்ந்த நிலப் பிரதேசங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்களே இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை மழை தொடர்ந்து பெய்தால் பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள வெங்காயப் பயிர்களில் மழைநீர் கூடுதலாகத் தேங்கும் பட்சத்தில் அவையும் அழுகிவிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஓக.23

தென்புலோலி சாந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த அபிஷேகம் கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 27 ஆம் திகதி மகா சங்காபிஷேகம் இடம்பெறுவதுடன் வருடாந்த அபிஷேகம் நிறைவுறும். (எ-236)

* * *

கோப்பாய், ஓக.23

வடகோவை சக்கராழ்வார் ஆலய வருடாந்தபெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 நாள்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழா, உறியடி உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (201-72)

* * *

நவாலி,ஓக. 23

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிக்ன விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

இன்று முற்பகல் 9 மணிக்கு வசந்த மண்டப்பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு விநாயகர் தேரில் ஆரோகணிப்பர். (16-100)

* * *

நவாலி,ஓக.23

நவாலி அந்திரான் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப்பூஜையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு இறைவன் தேரில் ஆரோகணிப்பார். (16-100)

# கைதடி முதியோர் இல்லத்தின் சுற்றாடலில் தினசரி சிரமதானம்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சிரமதானப் பணிகள் தினசரி இடம்பெற்று வருகின்றன.

பொது நிறுவனங்கள் மற்றும் தொண்டர்கள் இணைந்து இல்லத்தின் சுற்றாடலை சிரமதானம் மூலம் தினமும் துப்புரவு செய்து வருகின்றனர்.

இதன்மூலம் இல்லத்தின் சுற்றாடல் பகுதியில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் மற்றும் செடிகள் போன்றவை வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு அகற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் வளாகத்தில் பெருகிக் காணப்படும் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு கிருமிநாசினிகளும் விசிறப்பட்டு வருகின்றன.

(எ-26)

# காரைநகர் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்துக்கென 'பவுஸர்' கையளிப்பு

காரைநகர், ஓக.23

பிரித்தானியாவில் இயங்கும் காரை நலன்புரி சங்கம் காரைநகர் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக 'பவுஸர்' ஒன்றினை வழங்க உள்ளது.

பிரித்தானியாவில் இருந்து தருவிக்கப்பட்ட 13 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவைக் கொண்ட இந்த 'பவுஸர்' கையளிப்பு வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் இடம்பெற உள்ளது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னரும் பிரித்தானியாவிலுள்ள காரை நலன்புரி சங்கத்தினால் வழங்கப்பட்ட 'பவுஸர்' மூலமே தற்போதும் வெளியிடத்தில் இருந்து குடிதண்ணீர் எடுத்து வரப்பட்டு காரைநகர் பிரதேச மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-250)

# பாம்பாட்டிகள் மீண்டும் பிரசன்னம்

தென்பகுதியில் இருந்து பாம்பாட்டிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் களமிறங்கியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதமளவில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பாம்பாட்டிகள் குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று தமது வளர்ப்புப் பிராணிகளான [illegible] பாம்புகளை வைத்து மக்களுக்கு வித்தைகாட்டி மகிழ்வித்தனர். அத்துடன் நிறைந்த வருமானத்தையும் பெற்றிருந்தனர்.

பின்னர் சில மாதங்களாக அவர்களின் பிரசன்னம் நின்று போயிருந்தது. தற்போது இந்தப் பாம்பாட்டிகள் சிலர் மீண்டும் யாழ்ப்பாணம் வருகைதந்து பழையபடி பல்வேறு இடங்களுக்கும் சென்று மகுடிகளை வாசித்து பாம்புகளை வைத்து வித்தை காண்பித்து வருகின்றனர். இந்தப் பாம்பாட்டிகளை நல்லூர் ஆலய சுற்றாடலில் அடிக்கடி காணமுடிகின்றது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இணுவில் கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தியின் கலைப்பணியைக் கௌரவித்து பாராட்டு விழா சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் சார்பில் பொன்னாடை போர்த்தி பதக்கம் அணிவிப்பதை முதலிரு படங்களிலும், சுழிபுரம் ஓடையம்பதி ஸ்ரீ பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர தேவஸ்தானத்தினர் 'இசைச்சக்கரவர்த்தி' பட்டம் வழங்கி வாழ்த்துப்பா வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்
(ஐ)


**வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு**

யாழ்ப்பாணம் கண்டுக்குளி விதானையார் வீதியில் மேல்மாடி வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். நிறுவனம்/NGO போன்றன விரும்பத்தக்கது.
தொடர்பு:0777115378,0757131027,
0718475656, 011-2360325

**House for Rent**

13 Rooms and 2 Large Living Rooms with a kitchen. 60 am 3 phs Electric Capacity Close to Kachcheri. Good for NGO.
Call - 0771329214

**காணி விற்பனைக்கு உண்டு**

கோண்டாவில் கிழக்கு ஆணித் தொழிற்சாலை ஒழுங்கையில் 13 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 0213218432, 0776621699
இ.சின்னத்துரை

**PERSONAL CLASS**

தரம் 3- A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கு (Noagelimit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை) தொடர்பு:- ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
T.P:.0773957273


# தேரோடும் வீதியெங்கும்...

*(6ஆம் பக்கத் தொடர்ச்சி)*


என்ற உறுதியுடன் முகாங்களில் காத்திருப்பதாக முறிகண்டி மக்கள் தெரிவிக்கிறார்கள். மக்களை ஏமாற்றி காணிகளை அபகரிக்கும் திட்டத்திற்கு உடன்படப் போவதில்லை என சில அரச அதிகாரிகள் உறுதிபடத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. மக்களது முழுமையான அனுமதியில்லாமல் காணிகளை வழங்க முடியாது என குறித்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கும் திட்டத்தை நிதானமாக கையாண்டு மக்களை தோல்வியிலிருந்து காப்பாற்ற இவ்வாறான நடவடிக்கைகளே தேவைப்படுகின்றன.

ஆனாலும் அரசு அந்தக் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்தவில்லை என்று கூறப்படுகிறது. பல்லாயிரம் தற்காலிக குளிர் வீடுகளை அமைப்பதற்கான தளபாடங்களை முறிகண்டி வீதியில் பார்க்க முடிகிறது. அத்தோடு முறிகண்டியில் இரணைமடுவை அண்டிய பகுதிகளில் அரை கிலோ மீற்றர் தூரத்திற்கொரு வீதி காடுகளை பிரித்து உள்ளே செல்கிறது. உள்ளே சீனக்கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவை சிங்கள குடியேற்றங்களுக்காகவே அமைக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் அச்சத்துடன் குறிப்பிடுகிறார்கள்.

வியாபார வர்த்தக நோக்கில் முக்கியம் பெறும் முறிகண்டியை அரசு சிங்களமயப்படுத்த முயற்சிக்கிறது. ஆலய நிர்வாகத்தை பறித்து அரச சொத்தாக்கியதுடன் அந்தப் பகுதியில் வியாபார உரிமையையும் தனது கண்காணிப்பில் கொண்டு வந்திருக்கிறது. இராணுவ பாதுகாப்பு அதிகரிக்கப்பட்ட அந்தப் பகுதியில் பெரும் விடுதி ஒன்று கட்டப்படுகிறது. ஆலயத்தின் புனிதத்தை விடுதிகள் அசுத்தப்படுத்தி விடும் என மக்கள் சொல்கிறார்கள். மடப் பாரம்பரியம் இல்லாதொழிக்கப்பட்டு விடுதிகள் ஆலயத்திற்கு மிக அருகில் கட்டப்படுகின்றன. வடக்கில் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக மாங்குளம் உருவாக்கப்படவுள்ள நிலையில் அந்தப் பகுதியை சிங்கள மயமாக்கி வடக்கை சிங்கள அதிகாரத்தின் கீழ் கொண்டு வர அரசு தொடங்கிய இந்த நடவடிக்கைகள் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன.

ஈழத் தமிழர்களின் இருப்பை சிதைக்க குறித்த இரண்டு கோயில்களை இராணுவமயப்படுத்தி அதிகாரங்களை அரசு கைப்பற்றியிருக்கிறது. தமிழர் தாயகமெங்கும் உள்ள மக்களின் காணிகளை பிடுங்கும் இந்த நடவடிக்கை ஒட்டு மொத்த தாயகத்தையும் தமிழர்களின் கைகளிலிருந்து பிடுங்கி எடுக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த விடயத்தில் அனைவரும் மிகவிழிப்பாக இருக்க வேண்டியதுடன் பொறுப்பிலிருப்பவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். * *

# 31ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில்
06.04.1941

விண்ணில்
24.07.2010

## அமரர் சிவகுரு தேவராசலிங்கம் (தவம்)

24.07.2010 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுகேட்டு நேரடியாக அனுதாபம் செலுத்தியோருக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபச் செய்திகளை கடிதங்கள், தந்திகள், தொலைபேசிகள் மூலம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் இரங்கலுரை ஆற்றியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (23.08.2010) திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.


தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர், பிள்ளைகள்,
மயூரன் (லண்டன்), கோகிலா, சங்கர் (கனடா)

(102335)

# மரண அறிவித்தல்

## பத்தன் சின்னத்தம்பி *(சங்கானை)*



அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்தன் சின்னத்தம்பி 21.08.2010 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்தன்-சின்னன் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அருமைக் கணவரும் சுவிற்சலாந்தை வசிப்பிடமாகக் கொண்ட சிவபாதம், ரவீந்திரபாதம், குஞ்சிதபாதம், உமாபாதம், சிவநந்தினி மற்றும் ஈஸ்வரபாதம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுவிற்சலாந்தை வசிப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ் அனுரா, மதிவதினி, ஜெயசுதா, ஜனிதா, சிறிதரன் மற்றும் இந்திரா (கனடா), சிவன்-யோகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகி, சின்னப்பிள்ளை, சீதை, நாகம்மா, சுப்பிரமணியம் மற்றும் இலக்சுமி ஆகியோரின் சகோதரரும் சுவிற்சலாந்தை வசிப்பிடமாகக் கொண்ட சிவதரன், கீர்த்தனா, யசோதரன், சஞ்சீவன், சிந்துயா, ஆர்த்திகா, கபில், வீபியா கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட பிரியதர்சினி, நிதர்சினி, நிதர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2010) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்மார்,
பேரப்பிள்ளைகள்.

அராலி வீதி,
சங்கானை.

(102336)


AachiE

எம்மிடம் மகத்தான மலிவான விலையில்

1. ஆச்சி மசாலாத்தூள் 2. ஆச்சி மிளகாய்த்தூள் 3. ஆச்சி சரக்குத்தூள் 4.ஆச்சி அப்பளம் 5.ஆச்சி மோர்மிளகாய் 6. ஆச்சி அரிசிமா 7. ஆச்சி உழுந்துமா 8. ஆச்சி குரக்கன்மா

சுவைப் பிரியர்களே!
இலங்கை மக்கள் அனைவரின் ஏகோபித்த தெரிவான ஆச்சி (AachiE) தயாரிப்புக்கள் இப்போது யாழ்ப்பாணத்திலும்

யாழ்ப்பாண முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த் தூள் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

ஏக விநியோகஸ்தர்:
மதுரா களஞ்சியம்
வட்டுக்கோட்டை.

தொடர்புகட்கு:
021 7200167,
0772627781





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.மேரிஸின் உதைபந்தாட்டம்; வதிரி டயமன்ஸ் சம்பியனானது



யாழ்ப்பாணம், ஓக.23

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி இளவாலை யங்ஹென்றீஸை தோற்கடித்து அல்பிரட் செபமாலைதாஸ் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய அமரர் அல்பிரட் செபமாலைதாஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதியாட்டம் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் விறுவிறுப்பாக ஆட்டத் தில் ஈடுபட்டனர். ஆனால் ஆட்டத்தின் நான் காவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி முத லாவது கோலினை போட்டது.

இளவாலை யங்ஹென்றீஸ் பதிலுக்கு கோல் போடுவதற்கு பல வழிமுறைகளைக் கையாண்ட போதும் அது பயனளிக்க வில்லை.

சிறப்பாக தமது ஆட்டத்தை வெளிப் படுத்திய டயமன்ஸ் அணியினர் 10 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்து தனது அணியின் வெற்றி வாய்ப்பை தமக்குச் சாதகமாக்கினர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது டயமன்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னணியில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் போது யங்ஹென்றீஸ் அணியினர் கோல்கள் அடிக்க வேண்டும் என்ற உற்சாகத்தோடு களம் இறங்கினர்.

யங் ஹென்றீஸ் அணியினர் எதிர் அணியினரை கோல் அடிக்கவிடாது தற்காப்பு ஆட்டத்தில் ஈடுபட்டதோடு கோல் அடிப்பதற்காக முழு வீச்சில் எதிர் அணியினரின் கோல் பரப்பை முற்றுகையிட்டனர்.

ஆனால் டயமன்ஸ் அணியின் கோல்காப்பாளரின் துடிப்பான தடுப்பாட்டத்தால் யங்ஹென்றீஸ் அணியினரால் கோல் அடிக்க முடியாமல் போனது.

தமது முயற்சியினை கைவிடாத யங் ஹென்றீஸ் அணியினர் 80 ஆவது நிமிடத் தில் முதலாவது கோலினைப் போட்டனர்.

மேலும் இரண்டு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிய போதும் மேலதிகமாக எது வித கோலையும் பெறமுடியவில்லை. ஆட்ட முடிவில் வதிரி டயமன்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் இளவாலை யங் ஹென்றீஸ் அணியை வெற்றி கொண்டது. (6-86)

## கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இருபாலாருக்குமான இந்தச் சுற்றுப் போட்டி றக்கா வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க மைதானத்தில் இடம்பெறும் எனக் கழகத்தின் செயலர் எஸ்.மனோகரன் தெரிவித்துள்ளார். (6-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# மின்னொளியில் இடம்பெற்ற கரப்பந்தாட்டம்; கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகம் வெற்றி



யாழ்ப்பாணம் ஓக.23

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 'ஓவர் கேம்' கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை மின்னொளியில் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெற்றது.

இதில் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக இப் போட்டியாக இடம்பெற்றது.

இதில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணி நேர் இரு செற்களில் 14:09 , 14:10 என்ற புள்ளி அடிப்படையில் எதிர்த்து விளையாடிய கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. (6-23)

# பாடசாலைகளின் துடுப்பாட்டம்: சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.23

கவாஸ்கரின் அதிரடிச் சதமும் நிதர்சனின் பந்து வீச்சும் கைகொடுக்க சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 279 ஓட்டங்களால் கண்டி விக்டோறியா தேசிய பாடசாலை அணியை வெற்றி கொண்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 354 ஓட்டங்களை பெற்றது.

இதில் கவாஸ்கர் 147 ஓட்டங்களையும், கினிஷ்ரன் 54 ஓட்டங்களையும் பந்து வீச்சில் விக்டோறியா தேசிய பாடசாலை யின் கல்பேஜ், சஞ்சீவ், குமார ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

355 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய விக்டோறியா தேசிய பாடசாலை அணியினர் 28.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் அசோக,டன்றூவன் ஆகியோர் முறையே 11,10 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்ககளான நிதர்சன் 5 விக் கெட்டுக்களையும், றோபட் 2 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர். (6-23)

# கல்கோபன்,ருக்ஷ்மன் கலக்கல் யாழ். இந்துவுக்கு இலகு வெற்றி

வலி.வடக்கு, ஓக.23

கல்கோபனின் அதிரடித் துடுப்பாட்டமும் ருக்ஷ்மனின் துல்லியமான பந்து வீச்சும் கைகொடுக்க சென்.ஜோன்ஸ் கல்லூரியை 166 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்க்கு இடையில் நடத்திய போட்டியொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதின.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 44.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது.

கல்கோபன் 10 பௌண்டறிகளுடன் 72, சாரங்கன் 39, மதுசன், சிந்துஜன் தலா 23 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 37 ஓட்டங்கள் கிடைத்தன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த அஜித் 7.3 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சரண்ராஜ் 4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும்- தனுஜன் 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், வனஜன் 9 ஓவர்கள் பந்து வீசி 47 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பிரஜின்பெனாட் 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

217 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 25.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 50 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

கிரிசாந் 12 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ருக்ஷ்மன் 5.4 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் கௌசிகன் 6 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 5 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும்-

சிந்துஜன் 3 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (6-86)

# குண்டு போடுதல்: ஹரிகரன் சாதனை



**சாதனைகளின் பதிவுகள்**

யாழ்ப்பாணம்,ஓக.23

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் ஆண்களுக்கான குண்டு போடுதல் நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஹரிகரன் மாகாண மட்டத்தில் புதிய சாதனை படைத்துள்ளார்.

வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான குண்டு போடுதல் நிகழ்வில் 36.37 மீற்றர் தூரத்திற்கு எறிந்து இந்தச் சாதனையை அவர் படைத்துள்ளார். (6-23)




வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே முதல் தடவையாக நடைபெற்ற 14 வயதுப் பிரிவினருக்கு இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலய அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் எதிர்பார்ப்பு எப்போதும் சாதகமாக அமையாது; ஜே.ஆரின் நிறைவேற்று அதிகாரத்திட்டம் இதற்கு உதாரணம்

இந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நிர்வாக நடைமுறை நாட்டின் அரசியலில் பல சிக்கல்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தக் காரணமாக அமைந்துவிட்டது என்பதனை இந்நாட்டின் முன்னைய அரசியல் சம்பவங்களுடன் கலந்து சுவைபடக் கூறுகிறது இக்கட்டுரை.

'லங்காதீப' சிங்கள நாளிதழில் வாராவாரம் வியாழக்கிழமைகளில் வெளியாகும் 'வியாழன் அலசல்' கட்டுரை வரிசையில் கடந்த 19ஆம் திகதி வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வாழ்க்கையில் வாசுதேவ


ஜே.ஆர்.

நாணயக்காரவுக்கு முக்கியமானதோர் இடமுண்டு. மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகிய பதவிகளை வகிப்பதற்கு முன்னர், அரசியல் அரங்கில் முன்னேறு வதற்குப் பலவித சவால்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்த காலகட்டத்தில் வாசுதேவ நாணயக்கார அவருடன் மிகநெருக்கமாகப் பழகிவந்திருந்தார். மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டு அரசியல் அரங்கில்

சிங்கள மூலம்:
உபுல் யோசெப் பெர்னாண்டோ

முன்னேற்றமும் பிரபல்யமும் பெற வாசுதேவ நாணயக்கார குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கியுள்ளார்.

அத்தகைய பிரமுகரான வாசுதேவ நாணயக்கார அண்மையில் தமது பழைய இடதுசாரி நண்பரொருவரான ஸ்ரீதுங்க ஜயசூரிய எழுதிவெளியிட்ட புத்தக வெளியீட்டு வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் புதுமையான கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார். ''இன்று நாம் 1980


சந்திரிகா

களில் நிலவிய சூழ்நிலைபோன்று பயங்கரமான அதள பாதாளத்தின் விளிம்பில் நிற்பதுபோன்ற நிலைக்கு உட்பட்டுள்ளோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இன்றைய அரசில் தாமும் அங்கம் வகிக்கும் ஒரு பின்னணியிலேயே வாசுதேவ நாணயக்கார இன்றைய நாட்டின் நிலைகுறித்து இவ்வித கருத்தைத் தெரிவித்துள்ளார். உண்மையில் வாசுதேவ நாணயக்காரவின் அத்தகைய கருத்து யதார்த்தமானதொன்றே.

1980 களுக்கும் 2010 களின் ஆரம்ப வருடமான இந்த ஆண்டுக்கும் இடையே மிக நெருக்கமான ஒற்றுமை காணப்படுகிறது.

1980 களில் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்ற இயலாததொன்றைத் தவிர வேறு எதனையும் என்னால் நிறைவேற்ற இயலும் எனக் கர்வச் செருக்குடன் கூறத்தக்க நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி பதவியிலிருந்தார்.

நான் நினைத்தால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையை ஈட்டிக்கொள்ளும் வல்லமை எனக்குண்டு என்று கர்வச் செருக்குடன் கூறும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இன்று அதிகாரத்தில் உள்ளார்.

1980 களில் சுதந்திரக் கட்சி துண்டு துண்டாகப் பிளவுபட்டு தமது மடியில் வந்துவிழும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த ஜனாதிபதி ஆட்சி அதிகாரம் படைத்திருந்தார்.

ஐ.தே.கட்சியின் யானைக்குட்டிகள் தமது சட்டைப் பைக்குள் வந்து விழுவதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஜனாதிபதியே இன்று பதவியில் உள்ளார்.

1980 களில் எதிர்கட்சிகள் எதிர்ப்பு நடவடிக்கைகளை பொலிஸாரைப் பயன்படுத்தி முறியடிக்கும் போக்குடைய ஜனாதிபதியே ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

இன்றோ எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பிக்குக் கூட அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டமெதனையும் மேற்கொள்ளச் சுதந்திரம் கிடையாது.

1980 களில் வேலைநிறுத்தப் போராட்டம் எதுவானாலும் அரச அதிகாரத்தைப் பிரயோகித்து அதனை அடக்கி ஒடுக்கி முறியடிக்கும் போக்குடைய ஜனாதிபதியே பதவியில் இருந்தார்.

இன்றோ எந்தவொரு வேலை நிறுத்தப் போராட்டத்தையும் மேற்கொள்ளும் சுதந்திரம் எத்தரப்பினருக்கும் கிடையாது.

1980 களில் மாணவர் போராட்டங்களை அடக்கி ஒடுக்கும் விதத்தில் செயற்பட்ட ஜனாதிபதியே நாட்டை நிர்வகித்து வந்தார்.

இன்றோ மாணவர் போராட்டம் எதுவானாலும் அதற்காக அரசு கொடுக்கும் மருந்து கண்ணீர்ப் புகைப் பிரயோகமே.

1980 களில் தமதுதரப்பின் மத்தியிலேயே ஒருவரோடு ஒருவர் கருத்து முரண்பட்டுக் கொண்டதால் நலிவுநிலையில் இயங்கிய எதிர்க்கட்சியே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்தது.

இன்றோ அன்றைய நலிவு நிலையைவிடப் மிகப்பெருமளவில் நலிவு நிலைகண்டுள்ள எதிர்க்கட்சியே செயற்பட்டு வருகிறது.

தமிழில்: வீயெஸ்ரீ

1980களிலோ, வீட்டிலிருந்தவாறே ஜனாதிபதித் தேர்தலில் தம்மால் வெற்றியீட்ட முடியும் என நம்பியவரை அவரால் அவ்விதம் லேசில் வெற்றிபெற இயலாததொரு ஜனாதிபதித் தேர்தலாக அதனை மாற்றி அவருக்கே சவாலாகப் புறப்பட்ட, எதிரணியின் ஆதரவாளராகக் களமிறங்கத் தயாரான விஜய குமாரணதுங்கவையும் அவரது ஆதரவாளர்களையும் அரசுக்கு எதிராகச் சதிசெய்வதாகக் குற்றஞ்சாட்டி சிறையில் அடைத்த ஜனாதிபதியே நாட்டை நிர்வகித்து வந்தார்.

இன்றோ, வீட்டிலிருந்தவாறே 2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற எண்ணியவருக்கு அதற்கு வாய்ப்பளிக்கப் போவதில்லை எனச சாவால்விட்டுப் புறப்பட்ட சரத் பொன்சேகாவைக் கைதுசெய்து அவரது வீரப்பதக்கங்களைக் களைந்துவிட்ட ஜனாதிபதியே நாட்டின் ஆட்சி அதிகாரத்தைத் தமது கையில் கொண்டுள்ளார்.

அன்று விஜய குமாரணதுங்கவைக் கைது செய்த வேளையில், விஜய குமாரணதுங்கவுக்கு உரிய பாடம் கற்பித்து அவரை அரசியல் அரங்கிலிருந்து ஓரம்கட்டிவிட்டு தமக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் தலைதூக்கியுள்ள அரச விரோத சக்திகளைச் செயலிழக்க வைக்கும் திட்டத்துடனேயே ஜே.ஆர் காய் நகர்த்தினார்.

ஜே.ஆர். அந்த வேளையில் போட்ட திட்டம் உரிய பலனளிக்கத் தவறவில்லை. விஜய குமாரண துங்கவை அரசு கைதுசெய்ததை யடுத்து அரச விரோத சக்திகள் யாவும் செயலிழக்க நேர்ந்தது. இதனால் ஜே.ஆரால் லேசாக நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடித்துக்கொள்ளவென மேற்கொள்ளப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றியீட்டிக்கொள்ள முடிந்தது. அவ்விதம் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் அரசு வெற்றியீட்டியதை அடுத்து ஜே.ஆர், விஜயகுமாரணதுங்கவையும் அவரது சக பாடிகளையும் இரண்டு, மூன்று மாதகால தடுப்புக்காவல் வாழ்க்கையில் இருந்து விடுவித்தார்.

இதேபோன்றுதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று பொதுத் தேர்தலுக்கான தினம் அண்மித்த வேளையிலேயே சரத் பொன்சேகாவையும் அவரது ஆதரவாளர்களையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்தார். உண்மையில் ஜனாபதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை எதிர்க்கட்சிகள் சார்பான பொது வேட்பாளராக நிறுத்திய அரச எதிர்ப்பு சக்திகளை சிதறிடித்து விடுவதே ஜனாதிபதியின் இச்செயற்பாட்டுக்கான அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது. சரத் பொன்சேகாவின் கைதையடுத்து மஹிந்த ராஜபக்ஷவின் திட்டத்தின் படியே அரசுக்கு எதிரான அரசியல் தரப்புக்கள் மற்றும் குடிசார் அரச எதிர்ப்புச் சக்திகள் பலம் இழக்க நேர்ந்தது. இதன் காரணமாக நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜனாதிபதி தலைமையிலான கூட்டணித்தரப்பு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அண்மிக்கும் விதத்தில் அமோக வெற்றியை ஈட்டிக்கொண்டது.

அன்று பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றியீட்டிய பின்னர் ஜே.ஆர், விஜயகுமாரணதுங்கவை விடுதலை செய்தமைபோன்று மஹிந்த ராஜபக்ஷவும் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் சரத்பொன்சேகாவை விடுதலை செய்யக்கூடும் என எதிர் கட்சித் தரப்பினர் மட்டுமல்லாது, அரச தரப்பைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் நம்பினர்.

சரத்பொன் சேகா சிறையில் அடைக்கப்பட்டு தற்போது ஆறு மாதங்களுக்கு மேலாகிறது. அண்மையில் அவருக்கு எதிரான விசாரணைகளின் முடிவில் இராணுவ நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகத் தீர்ப்பளித்து அவரது இராணுவச் சேவையில் அவரால் ஈட்டப்பட்ட பதக்கங்களையும் பறித்துக்கொண்டது. இராணுவ நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட மற்றொரு குற்றச் சாட்டில் அவருக்கு எத்தகைய தண்டனை வழங்கப்படுமெனத் தற்போது எதுவும்


சிறிமா

கூற முடியாதுள்ளது.

அன்று ஜே.ஆர், விஜயகுமாரண துங்கவை சிறையிலிருந்து விடுவித்தமை அவர் மீதான பரிவினால் அல்ல. சிறைவாசம் அனுபவித்த தன் காரண மாக விஜய குமாரணதுங்கவுக்குப் பொதுமக்கள் மத்தியிருந்த ஆதரவு நலிவடைந்து போகுமெனவும், அதன்காரணமாக விஜயகுமாரணதுங்கவின் அரசியல் வாழ்க்கை முடிவடைந்து விடுமெனவும் ஜே.ஆர்.கணக்குப் போட்டார். அதுமட்டுமல்லாது விஜயகுமாரண துங்கவுக்கும் சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ மற்றும் அனுரா பண்டாரநாயக்க ஆகியோர் மத்தியில் நிலவிய பகையுணர்வு காரணமாக விஜய குமாரணதுங்கவால் சுதந்திரக் கட்சியிலும் பிரபல்யம் பெற இயலாது போய்விடும் எனவும் ஜே.ஆர் கணக்கிட்டிருந்தார்.

அந்த வேளையில் தமது நிர்வாகத்தைக் கடுமையாக விமர்சித்து தம்மை எதிர்த்து வந்த சந்திரிகாவைத் தனது காலடிக்குக் கொண்டு வந்துவிடும் நோக்கிலேயே ஜே.ஆர், விஜயகுமாரணதுங்கவை விடு தலை செய்வது தொடர்பாகப் பேச வருமாறு சந்திரிகாவுக்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பு கிடைத்ததுமே


விஜய குமாரணதுங்க

சந்திரிகா ஜே.ஆரின் 'வோர்ட் பிளேஸ்' இல்லத்துக்கு விரைந்து ஜே.ஆரைச் சந்தித்தார். சந்திரிகாவைத் தனது காலடிக்குக் கொண்டுவந்து சந்திரிகாவும் விஜய குமாரணதுங்கவும் தமது கால்களில் மண்டியிட்டுள்ளதாக நாட்டு மக்களுக்குக் காட்டிய பின்னரே ஜே.ஆர், விஜய குமாரணதுங்கவை விடுதலை செய்தார்.

இதனால் ஜே.ஆர். எதிர்பார்த்தது போன்று விஜயகுமாரணதுங்கவின் அரசியல் வாழ்வு பாதிப்பு அடையவில்லை. 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை சம்பவங்களையடுத்து ஆரம்பமான அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை நிறுத்துவதற்கு ஜே.ஆர், விஜயகுமாரண துங்கவின் உதவியை நாடநேர்ந்தது. விஜய குமாரண துங்கவை அரசியல் அரங்கிலிருந்து மட்டுமல்லாது சினிமாத் துறையிலிருந்தும் அகற்றிவிடத்திட்டமிட்டுச் செயற்பட்ட ஜே.ஆர், கடைசியில் விஜய குமாரண துங்கவின் மரணச் சடங்கை அரச கௌரவத்துடன்

( 22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

# தீர்த்தத் திருவிழா சிறப்பு மலர் - 23.08.2010



## அருள்மிகு துர்க்காதேவி ஆலயத்தின் நிர்வாக சபையின் வளர்ச்சி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் வவுணாவத்தையைச் சேர்ந்த சைவாசாரமும் பரோபகாரச் சிந்தையுமுள்ள வேளான் மரபைச் சேர்ந்தவர்களின் குல தெய்வமாக விளங்கி வந்தது. அம்மரபில் வந்த நாகநாதர் என்பவர் தர்மகர்த்தா சபையை ஏற்படுத்தி அதனிடம் ஆலயப் பொறுப்பை ஒப்படைத்தார். 1962 ஆம் ஆண்டு தர்மகர்த்தா சபையால் ஒரு திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டது. திருப்பணிச் சபை பின்னர் நிர்வாக சபையாக செயற்படத் தொடங்கியது. திருப்பணிச்சபைத் தலைவராகவும் பின்னர் நிர்வாகசபைத் தலைவராகவும் அமரர் சே.தியாகராசா அவர்கள் சேவையாற்றிய காலத்தில் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு மகா கும்பாபிஷேகமும் 1965 ஆம் ஆண்டு நடைபெற்றது.

தொடர்ந்து 1968 இல் மகோற்சவம் எனப்படும் கொடியேற்றப் பெருந்திருவிழாவும் ஆரம்பிக்கப்பட்டது. தியாகராசா தலைவராக இருந்த காலத்தில் கோயில் விழாக்கள் நித்திய, நைமித்திய கிரியைகள் நேரக் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்காகவும் நடைபெற வழிவகுத்தார். மேலும் ஆலயத்தில் தூய்மையும் அமைதியும் பக்தியும் பெருக கண்டிப்பாக இருந்தார். அவரின் பின் 1970 இல் தெல்லிப்பழை மகாஜனாச் சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்கள் நிர்வாக சபைத் தலைவர் ஆனார். அவர் காலத்திலும் பல திருப்பணிகள் நிறைவேற்றப் பட்டன. கோபுர வேலைகளும் ஆரம்பிக் கப்பட்டன. ஆலய ஒழுங்கு கட்டுப்பாட்டினைக் கட்டிக் காத்தார். சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட அமரர் ஜயரத்தினம் தலைவராக இருந்த காலத்தில் ஆலய ஒழுங்குக் கட்டுப்பாடு என்பன நல்ல முறையில் பேணப்பட்டன. அவர் தலைவராக இருந்த காலத்திலேயே ஆலய முன்றிலில் அக்காலத்தில் நிர்வாக சபை தனாதிகாரியாக இருந்த அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு விழா எடுத்து 'துர்க்கா துரந்தரி' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தலைவர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் திடீர் மறைவுக்குப் பின் நிர்வாக சபையின் தலைவராக செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் காலத்தில் கோபுர வேலை நிறைவேறி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து துர்க்கா புஷ்கரணி என்ற தீர்த்தத் தடாகம் அமைக்கப்பட்டது. துர்க்காபுரம் மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், துர்க்காதேவி நூல் நிலையம், கோசாலை எனப் பல வகைத் திருப் பணிகள் நிறைவேறியதை நாடறியும்.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை உலகறியச் செய்த பெருமை பெற்றவர் துர்க்கா துரந்தரி. தம் வாக்கு வன்மையால் பல நாடுகளுக்கும் சென்று பிசாரம் செய்து ஈழநாட்டில் மட்டுமன்றி உலகம் முழுவதும் துர்க்காதேவியின் பேரருள் பிரவாகத்தைப் பரவச் செய்தவர் அவர். கோயிலின் நான்கு திசைகளினதும் காணிகள் வாங்கிச் சேர்த்தவர். நல்லூரிலும் மணி மண்டபம் கட்டி அங்கும் திருப் பணியை விஸ்தரித்தார். அவர் காலத்தில் தேர்த்திருவிழாவை உலகமுழுவதும் நேரடியாக ஒளி, ஒலிபரப்பச் செய்தவர்.

அவருக்குப் பின் 4 ஆவது தலைவராக இப்பொழுது செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்கள். அவர் சிறு வயது முதலே பொதுத் தொண்டில் ஆர்வமுடையவர். துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரி டத்து நிறைந்த விசுவாசமும் அன்பும் உள்ளவர். சிவத்தமிழ்ச் செல்விக்கு ஒரு நினைவாலயம் அமைப்பதிலும் சிலை அமைப்பதிலும் முன்னின்று உழைத்தவர். அம்மையாரின் பணியை இன்னும் மேலும் சிறக்கச் செய்து தொண்டாற்றி வருகிறார்கள். சென்ற ஆண்டில் திருமஞ்சம் செய்வித்து துர்க்காதேவியை அழகான மஞ்சத்தில் எழுந்தருளச் செய்தார்கள். போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆதரித்து ஆலய நிர்வாகத்தினர் பராமரித்து வருகிறார்கள்.

செல்வன் - முருகதாசன் ஹரிவர்மன் மாணவன்
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி.

துர்க்கா தேவஸ்தானத்தின் சமுதாயப்பணி



வன்னியில் பாதிக்கப்பட்ட 140 பிள்ளைகள் துர்க்கா தேவஸ்தானம் பராமரிக்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தற்போது வசித்து வருகிறார்கள்.

### செஞ்சொற் செல்வரின் ஆசியுரை



பார்போற்றும் பராசக்தி துர்க்கையின் வடிவத்தில் நின்று காத்தருளும் சிறப்பு தனித்துவமானது. ஈழத்திருநாட்டில் தாய்த்தெய்வ வழிபாட்டு மரபில் உன்னத திருக்கோயிலாக விளங்குவது தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயம் என்றால் மிகையாகாது. சமூகத்தின் துயர்துடைக்கும் தனித்துவமான கோயில். இத்திருக்கோயிலின் வருடாந்த தீர்த்தத் திருவிழா இன்று. ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்த நன்நாளில் துர்க்கா புஷ்கரணித் தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தமாடும் காட்சி பரவசமானது. பல்லாயிரம் பக்தர்கள் தீர்த்தத் தடாகப் படிகளில் காத்திருந்து வழிபாடு செய்வதும் பின் தீர்த்தத்தில் நனைந்து மகிழ்வுடன் செல்வதும் வழக்கமாகும். 'தேவிபாகவதத்தில் தேவர்களின் பாவத்தை கழுவுவதற்கு துர்க்கா புஷ்கரணி என்ற தடாகம் சிருஷ்டிக் கப் பட்டதாகக் கூறப்படுகின்றது'. தெல்லி மாநகரில் துர்க்காதுரந்தரி அன்னை தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள் அடியார்களின் வினைகளைக் கழுவுவதற்கு அருமையானதோர் துர்க்கா புஷ்கரணி தடாகத்தை உருவாக்கி உதவினார்கள். இத்தீர்த்தத் தடாகத்தில் ஒவ்வொரு மாதப் பிறப்பு நாளிலும் சங்கிராந்தி தீர்த்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறும். புனித நதிகளின் தீர்த்தம் இத்தடாகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அருளலுக்குரிய நன்நாளாகிய தீர்த்தத் திருவிழாவில் அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் தீர்த்தத்தினால் எம்மைச் சூழ்ந்த வினைகளைப் போக்கித் திருவருள் பெறுவோமாக.

யாவர்க்குமாம் இன்னுரைதானே.

ஆறு.திருமுருகன், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

### சாந்தியும் சமாதானமும் அருளட்டும் அம்பிகை



ஆதி சக்தியின் அம்சமும், முப்பெரும் தேவியில் முதல் தேவியாக விளங்குகின்ற ஸ்ரீ துர்க்கா தேவியின் தீர்த்த நாளாகிய இன்றைய நாளிலே அகிலம் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் சாந்தி சமாதான எல்லாச் சிறப்புகளும் பெற்று அம்பிகையின் திருவருளோடு நலமாக வாழ நல்லாசி கூறிப் பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ
வா.அகிலேஸ்வரக்குருக்கள்
பிரதம சிவாச்சாரியார், துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காபுரம், தெல்லிப்பழை.

### துர்க்காதேவி தீர்த்த உற்சவம் காண வாரீர்!



தெல்லிப்பழை துர்க்கா அம்மையாருக்கு ஆண்டுதோறும் ஆவணித் திருவோணம் நட்சத்திரத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறுகின்றது. தீர்த்த உற்சவம் துர்க்கை அம்பாளின் அனுக்கிரகம் பெற்று உணர்ந்த அடியார்கள் திருவருட் பெருக்கிய அமிழ்வதைக் குறிக்கின்றது. இதனைத் தீர்த்தவாரி என அழைக்கப்படும். நீராடிய பின்னர் ஆலமரத்துள் சென்று வழிபாடு செய்தல் மோட்சத்தைப் பெறும்பயனைத் தருகின்றது. துர்க்கை அம்பாளின் தீர்த்த உற்சவம் "துர்க்கா புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் புண்ணியம் மிகுந்தது. வெள்ளைக் கற்திருப்பணியாக அமைந்த படிக் கட்டுக்களில் ஆயிரம் ஆயிரம் அடியார்கள் அமர்ந்து துர்க்கை அம்பாளை வழிபாடு செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். எனவே இப்புண்ணிய தீர்த்தம் ஆடி துர்க்கை அம்மனின் திருவருள் பெறுவோமாக.

கா.சிவபாலன்

### தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயமும் தீர்த்தக்குளப் பிரதிஷ்டையும்

#### அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி



பெருமை வாய்ந்த துர்க்கை அன்னையின் திருக்கோயில் ஈழத்திரு நாட்டிலே வடபாலமைந்த தெல்லிப்பழையிலே முந்நூறு ஆண்டுப் பழமையுடையதாக விளங்குகிறது. இவ்வாலயத்தின் ஸ்தாபகராக விளங்கியவர் காசியிலிருந்து வருகை தந்த கதிர்காமர் என்ற சாது ஒருவரேயாவார். கங்கா தீர்த்தமே இத்தலத்தின் திரு மண்ணிலே ஊற்றப்பட்டு ஆரம்பிக்கப் பட்டது. எனவே கங்கா ஜலம் இக் கோயில் மண்ணிலே செறிந்திருப்பது பெருமையைத் தருகிறது. இந்த மகிமை அன்றும் இன்றும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. இன்றும் வானளாவும் இராச கோபுரம், சிற்பத்திறன் மிக்க சிங்காரத் தேர், அழகு பொழியும் திருவீதிகள், அலங்கார வளைவு, அன்னத்தை வழங்கும் அன்ன பூரணி மண்டபம், திருமணம் நிகழ நல்லதோர் மணிமண்டபம், அந்தணச் சிறுவர்களுக்கு வேதாகமப் பாடசாலை, அநாதைச் சிறுமியருக்கு மகளிர் இல்லம், அந்தணர் இல்லம், பொங்கல் மடுவம், கோசாலை ஆகியவற்றோடு புதுப்பொலிவு பெற்றுத் திகழும் இவ்வாலயம் இன்று ஆயிரக் கணக்கான பக்தர்களை வரவேற்றுக் கொண்டிருக்கிறது.

இறைவனையே "ஆர்த்த பிறவித்துயர் கெட நாமார்த்தாடும் தீர்த்தனன்" எனப் போற்றுகிறார் மணிவாசகர். ஒரு ஆலயத்திலே நடைபெறும் தீர்த்தத் திரு விழா என்பது திருவருள் நீரில் மூழ்கி நிற்கும் தத்துவத்தையே காட்டுகின்றது. பெரியோர்கள் தீர்த்த யாத்திரையைச் சிறப்பாகக் காட்டியுள்ளனர். பிரம்மோற்சவம் அல்லது மகோற்சவம் எனப்படும் பெருவிழாவின் முடிவில் இறைவன் தீர்த்த விழாக் கொள்வதும் மற்றும் சில சிறப்பு நாள்களில் தீர்த்தங்களுக்கு எழுந்தருளித் தீர்த்தம் வழங்குவதும் தீர்த்த மகிமையைக் காட்டுவதாகும். இவ்வால யத்தில் தீர்த்தக்குளமொன்று அமைய வேண்டியதன் அவசியத்தை அடியார்கள் பலர் வற்புறுத்தியதன் பேரில் இத்திருப் பணி அம்பாள் பக்தர்களின் ஆதரவைக் கொண்டு மிகச் சிறப்பாக நிறைவேற்றியுள்ளது. ஆலயங்களிலேயே தீர்த்தக் குளம் அமைக்கும் பணி பெரும் புண்ணியச் செயலாகும். 'மூர்த்தி, தலம், தீர்த்தம்' முறையாகத் தொடங்கினார்க்கோர் வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' குளந்தொட்டுக் கோயில் கட்டிய பணி சைவத்தமிழர் வரலாற்றில் இடம்பெற்ற மாபெரும் பணியாகும். எல்லாத் தீர்த்தங்களையும் கங்கா தீர்த்தமாகப் பாவித்துப் போற்றுவதும் நம் கடனாமே. தீர்த்தக் குளத்திருப்பணியைச் செய்வோருக்குத் தேவர்கள், பிதிரர்கள் ஆசி வழங்குகிறார்கள். பாவிகளைக் கரை யேற்றுவது தீர்த்தம். 'புண்ணியம் செய்வோருக்குப் பூவுண்டு, நீருண்டு' என்பர். நீரில்லாத சைவக் கிரியைகளே இல்லை. மகோற்சவத்தி லும் முக்கிய விழாவாகிய தீர்த்தம் அருளலைக் குறிக்கின்றது.


துர்க்கா
கல்லுடைக்கும் ஆலை
கே.கே.எஸ்.வீதி,
தெல்லிப்பழை.

சகல விதமான உணவு வகைகளையும்
குறித்த நேரத்தில் ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள
சயான் உணவகம்
உரிமையாளர்: ரவி
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில்
பொருள்களைப் பெற்றுக் கொள்ள
துவாரகா
பல்பொருள் வாணிபம்
உரிமையாளர்: பரமேஸ்வரன்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

EUT FURNITURE
CHUNNAKAM EAST,
CHUNNAKAM.
T.P:0212240110, 0215677477

அசோக் தொழிற்சாலை
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
சகல விதமான ஒட்டு
வேலைகளையும் (வெல்டிங் வேலை)
சிறந்த முறையில் செய்வதற்கும்
அசோக் தொழிற்சாலை

அனைவருக்கும் கணனிக் கல்வி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Win Soft Technology
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

பால், பால் உற்பத்திப் பொருள்கள், பசு நெய்,
கேக்வகைகள் ஓடருக்கு குறித்த காலத்தில் தரப்படும்.
லான்ட் ஓ லேக் நிறுவனத்தின் அனுசரணையுடன்
கொதிக்க வைத்த பால் உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
ஜெயா பாம்
இல.7, மத்தியசந்தை, மல்லாகம்.

சரி மலிசி ஸ்போட்
அழகுசாதனப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், உங்கள் இல்லம்
கவர் கவரிங்நகைகள், பேசியல் கிறீம்கள், பாடசாலை
உபகரணங்கள் என்பன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் தெரிவு எதுவானாலும் சரி மலிசி ஸ்போட்
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி. 077 2536425

காலத்துக்கேற்ற வகையில் புதிய டிசைன்களில் 22 கரட்
தங்க நகைகளை பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்
ஜெயதுர்க்கா நகைத் தொழிலகம்
ஸ்ரேசன் றோட், மல்லாகம்.

அபான்ஸ் காட்சியறை சுன்னாகம் நகரில்...
வட்டி இன்றி, மாதாந்த தவணைமுறையில், குறைந்த விலையில் கூடிய கால உத்தரவாதத்துடன் மோட்டார்சைக்கிள் மற்றும் மின்னியல் சாதனங்களைப் பெற்றுக் கொள்ள -
Abans காட்சியறை
160A,கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். T.P: 0212240440

ஜெயா
கல்லுடைக்கும் ஆலை
உரிமையாளர்: ஜெயராஜ்
கே.கே.எஸ்.வீதி, தெல்லிப்பழை. 0213218622

UNI ICT CAMPUS அனைத்து கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்பமாகின்றன.
A/L பரீட்சையின் பின் உங்கள் அடுத்த இலக்கினை அடைய நாம் உதவுகின்றோம்.
JAFFNA ROAD, MANIPAY.
T.P: 0217429325
0777110862.
PALALY ROAD,
KANTHARMADAM,
JAFFNA.

கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப்பாடசாலை
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0777225292, 0212224353
கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி.
0212006550


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான முதலாவது விசேட நீதிமன்றம் பத்தரமுல்லவில் ஆரம்பம்

## யாழ்ப்பாணத்தில் இரண்டாவது நீதிமன்றம் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஓக.23

இலங்கையில் சிறுவர்களுக்கான விசேட நீதிமன்றம் ஒன்று முதன்முதலாக பத்தரமுல்லவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சின் செயலாளர் சுஹத ஹம்லத் தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்றம் சில விசேட தன்மைகளைக் கொண்டிருக்கும். இங்கு நீதிபதி ஏனைய நீதிமன்றங்களைப் போன்று உயரமான ஆசனத்தில் அமரமாட்டார். சட்டத்தரணிகளும் தமது உத்தியோகபூர்வ உடைகளை (ரை,கோட்) அணியமாட்டார்கள்.

சிறுவர்கள்,பெற்றோர்கள், நீதிபதி மற்றும் சட்டத்தரணிகள் அனைவரும் ஒரே மேசையில் சுற்றிவர அமர்ந்திருந்து சுமுகமாக உரையாடுவதாக வழக்கு, விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தவிர நீதிமன்ற வரைமுறைகளுக்கு மேலதிகமாக வளாகத்தில் விளையாட்டுத் திடல்கள், சிறுவர்களைக் கவரும் வகையிலான ரம்மியமான சூழலில் வசதிகள் சிலவும் உருவாக்கப்பட்டுள்ளன- என்றார் அவர்.

இதேவேளை சிறுவர்களுக்கான நீதிமன்றம் பம்பலப்பிட்டியில் மாத்திரமே இயங்கி வந்தது. கடந்த 15 ஆம் திகதியுடன் அந்த நீதிமன்றின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு அதில் பாரப்படுத்தப்பட்ட வழக்குகள் யாவும் பத்தரமுல்ல விசேட நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

அத்துடன் சிறுவர்களுக்கான இரண்டாவது விசேட நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# வள்ளலார் நெறியைப் பின்பற்றும் பக்தர்கள் குழு யாழ்.வருகை



யாழ்ப்பாணம்,ஓக.23

வள்ளலாரின் நெறியைப் பின்பற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பக்தர்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் யாத்திரையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

தமிழ்நாடு கடலூர் மாவட்டத்தி லிருந்து கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இலங்கை வந்தடைந்த இவர்கள் வடபகுதியின் பல பிரதேசங்களுக்கும் யாத்திரையாகச் சென்று வருகின்றனர்.

இதன் பிரகாரம் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்களைத் தரிசித்து தற்போது யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த யாத்திரிகர் குழுவினர் சாவகச்சேரி வேம்பிராயில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான கோட்டம் திறப்பு விழாவிலும் கலந்துகொண்டு விசேட பூஜை வழிபாடுகளையும் நிகழ்த்தவுள்ளனர்.

இக்குழுவினரில் இந்தியா, மலேசியா,சுவிற்சலாந்து, நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-1-207)

# அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஓக.23

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வழமையாக மன்றத்தினரால் நடத்தப்பட்டு வரும் ஐந்தாம் திருமுறை முற்றோதலைத் தொடர்ந்து ' அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்','பன்னிரு திருமுறைப் பாராயணம்' ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு நல்லை ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் அருளாசியுடன் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.23

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணி மண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி சுஸ்மா சோமசேகரத்தின் பாட்டுக்கச்சேரி இடம் பெறும்.

கே.குகபரன் வயலினும், செல்வன் கே.கஜன் மிருதங்கமும், செல்வன் என். மாதவன் கடமும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக் கந்தன் ஆலயப் பெருந் திருவிழா காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலைநிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்னும் தலைப்பில் சைவப் புலவர் கந்த சத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர்சபை அறநெறிப்பாடசாலை, இணுவில் சிவகாமி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## சேயோன் வேலோன் துணையாய் வருவான்

மனிதம் வளர விரதமிருந்து
கனியும் இதயம் பெறுவோம்

இனிதும் நன்றும் பலவாய் வளர
தருவாய் அருளை முருகா!

சொரியும் அன்பின் வடிவாய் நின்று
வழியும் தேடித் தருவாய்!

நலமாய் ஊரும் உலகும் செழிக்க
உயர்வாய் உறைவாய் நல்லூரில்!

முருகா உந்தன் பெருமை காண
வருவார் பலரும் இசைவாய்!

பகலாய் இரவாய் பணிவாய் உன்னை
மனதில் இருத்திப் பணிந்தோம்

பலவாய் கனவு கண்ட வேளை
வளமாய் வாழ்வு தந்தவனே!

நெற்றிக் கண்ணில் பொறியா யுதித்த
ஆறுமுகப் பெருமானே!

தரணி சிறக்க பரணி தரனின்
மகனாய் வந்த மருகா!

தர்மம் ஜெயிக்க தருவாய் வழியை
குறிஞ்சிக் குமரன் வடிவேலா

யோ.யோகராசா,
மறவன்புலோ

## வையகத்தை வாழ வைப்பாய் ஞானவடிவேலா

நல்லூர்ப்பதி வாழும் - ஞானவடிவேலா
நம் வினைகள் எல்லாம்
போக்கிடைய்யா - ஞானவடிவேலா
மயிலேறும் பெருமானே - ஞானவடிவேலா
மக்கள் குறை தீர்த்திடையா - ஞானவடிவேலா
வேலோடு விளையாடும் - ஞானவடிவேலா
வினைகள் எல்லாம் வேரறுப்பாய் - ஞானவடிவேலா
வள்ளி தெய்வானை மணவாளனே - ஞானவடிவேலா
வையகத்தை வாழவைப்பாய் - ஞானவடிவேலா!

- சி.சித்திராங்கி,
வண்ணார்பண்ணை.

## நல்லூரில் வீதியுலா வந்திடுவாய்

சிவனுக்கு ஓம் எனும் பிரணவப் பொருளுரைத்திட்ட முருகா
ஔவைக்கு முத்தமிழ் விளக்கம் சொன்ன மயிலேறு வேலவனே
அடியார்கள் எங்களது தீராத வினையாவும் தீர்த்திடவே
வண்ணமயில் மீதேறி வீதியுலா வந்திடுவாய்

ஸ்ரீ.பிரதீப்,
திருநெல்வேலி.

## காத்தருள்வாய் கந்தா!

கருணைவடிவானவனே கந்தா கார்த்திகேயா
காரிருளைப் போக்கிடவே வேலுடனே வாமுருகா - உன்
மண்ணில் நாம் வாழ நல்லாசி நல்கிடுவாய்
பண்ணால் உனைப்பாடி பாங்காய் வாழ்த்துகிறோம்.

ஓம் எனும் உன் நாமம் ஓங்கி ஒலித்திடவே
எம் நாவில் கலைமகளும் தானமர்ந்து உந்தன்
கவிபாட திருமகனும் நம் திசை நோக்க
கிலியின்றி உன் திருவடி தினம் வணங்குவோம்

யாழ்பாடியின் யாழிசை யாழில் ஒலித்திட
யாம் இங்கு யாசிக்கின்றோம் நல்லூரினைத்தினம்
எல்லாம் வல்லவனே வள்ளி மணாளா - இந்த
மாநிலத்தில் உந்தன் மகிமை நிலைத்திட வை ஐயா!

தெல்லியூர் தேவி

## வெற்றிக்குத் துணை வருவார்

நெற்றிக் கண் திறந்த சிவனின் மகன் -
நல்லூரை நோக்கிப் பவனி வருவார் - பலர்
பற்றிய சினம் எனும் தீயணைத்து - நாம்
பெற்றிடும் வெற்றிக்குத் துணை வருவார்!

மலைமகள் மைந்தன் முருகையா - பெரும்
மலைகளுக்கு எல்லாம் தலைவனையா - அந்த
தலைவனை அழகனை நாம் பாடுவோம் - நம்
இளைஞர்கள் வேலைபெற வரம் வேண்டுவோம்!

செந்திலெழில் மன்னனை மறக்கவில்லை - பக்தி
சென்ற இடமெங்கணுமே குறைய வில்லை
வந்த வினை அத்தனையும் களையவந்த - நல்லூர்
கந்தனடி அனைவருமே பணிய வந்தோம்!

செ.பரமநாதன்,
தாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50வருடங்களாக காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத மூதூர் பாலநகர் மக்கள்

திருகோணமலை, ஓக. 23

மூதூர், பாலநகரில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு ஐம்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னும் காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை.

மூதூர் பிரதேச சபையின் கீழ் சுத்திகரிப்பாளர்களாகப் பணியாற்றும் இவர்களின் பிரச்சினையை எவரும் தீர்த்து வைப்பதற்கு முன்வராமை கவலையளிக்கிறது.

நான்கு தலைமுறைகளைக் கடந்தும் கூட இவர்கள் மிகப் பழைமை வாய்ந்த கட்டடங்களிலேயே வாழ்கின்றனர். இதுவரை காலமும் சிறுபான்மை இனத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இவர்களுக்கு உதவ முன்வராமையால் இவர்களின் அவலம் தொடர்கிறது.

ஏனைய மாவட்டங்களிலே இவர்களைப் போன்றவர்களுக்கு சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே, மூதூர், பால நகரில் வசிக்கும் தமிழ்மக்களுக்குக் காலதாமதமின்றி காணி அனுமதிப் பத்திரம் கிடைக்க கிழக்கு மாகாண முதலமைச்சர் உட்பட உயர் அதிகாரிகள் முன்வந்து குரல் கொடுப்பது மிக அவசியமாகும். (ளி)

# பளவெளிப் பிரதேசத்தில் யானைகள் அட்டகாசம்

அம்பாறை, ஓக. 23

புதிய வளத்தாப்பிட்டி பளவெளிப் பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. அதனால் குடியிருப்புப் பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

பழைய வளத்தாப்பிட்டிக் காட்டுப் பிரதேசத்திலிருந்து இரவு வேளைகளில் மாத்திரமல்ல, பகலிலும் யானைகள் வருகின்றன. அதனால் வீடுகளில் நிம்மதியாக இருக்க முடியவில்லை என மக்கள் முறையிடுகிறார்கள்.

இவ்வருட ஆரம்பத்தில் இரண்டு பேர் இப்பிரதேசத்தில் யானை தாக்கி மரணித்துள்ளனர்.

வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது ஜன்னல் பகுதியினூடாக தும்பிக்கையால் தாக்கப்பட்டு, மிகேந்திரராணி என்ற பெண் காயமடைந்தார். இவர் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

வனபரிபாலன திணைக்களத்தினூடாக குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே மின்சார வேலி போடப்பட்டுள்ளது. இதனால் ஏனைய பகுதிகளில் யானைகள் உள் நுழைகின்றன.

பளவெளிப் பிரதேசத்தை அண்டிய காட்டுப்பிரதேசங்களை முழுமைப்படுத்தி, இவ்வேலி இடப்படுமானால் யானைகள் வருவதைத் தடுக்க முடியுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும். (ளி)




# கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்ப்பு

கிழக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எடிசன் குணதிலக(வயது - 55) மருத்துவ சிகிச்சைக்காக அவசர ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளார். மார்பு நோய் சிகிச்சைக்காகத் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை சேர்க்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக, பிற்பகல் ஒருமணியளவில் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டார்.

திருகோணமலை சீனக்குடா விமானநிலையத்திலிருந்து அவசர ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ளி)

# மருதமுனைத் தேவைகள் அனைத்தும் தக்க சமயத்தில் நிறைவேற்றப்படும்

## அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவிப்பு

அம்பாறை, ஓக. 23

''கால நேரம் கூடிவரும்போது மருதமுனைக்கான தேவைகள் இனங்காணப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும். எனவே மருதமுனை மக்கள் ஒருமித்துச் செயற்பட வேண்டும்''

- இவ்வாறு அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எல். துல்கர் நயீமின் ஏற்பாட்டில் தேசிய காங்கிரஸின் மருதமுனை ஆதரவாளர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் சமீபத்தில் தேசிய காங்கிரஸின் மருதமுனை அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் அதிகாரம் இல்லாதிருந்த மருத முனை மக்களுக்கு எம்.எல்.துல்கர் நயீம் மூலம் அரசியல் அதிகாரமொன்றைத் தட்டில் வைத்து மருதமுனை மக்களுக்கு தேசிய காங்கிரஸ் கொடுத்திருக்கிறது. இதை மருத முனைப் புத்திஜீவிகள் உணர வேண்டும்.

அபிவிருத்தி செய்வது பெரிய விடயமல்ல. அதை எம்மால் செய்யமுடியும். மருதமுனை மக்கள் ஒருமித்த கருத்துடன் ஒன்றுபட்டு செயற்படுங்கள். அபிவிருத்தி தானாக வந்துவிடும்.

தேசிய காங்கிரஸோடு இணைந்திருந்து நெருங்கிச் செயற்படுகின்ற யாரையும், எந்தக் கிராமத்தையும் தேசிய காங்கிரஸ் கைவிட்டதில்லை. எம்மால் முடிந்தவரை அந்தந்த சந்தர்ப் பங்களில் நாங்கள் செய்து வருகின்றோம். காலமும் நேரமும் கூடி வருகின்றபோது எமது பிரதேசத்தின் தேவைகள் இனங்காணப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

- இப்படி அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கிழக்குமாகாண சபை உறுப்பினர்களான எம்.எல்.துல்கர் நயீம், எம்.எல்.ஏ. அமீர் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ளி)

# ஆசிரியர்களின் அப்பழுக்கற்ற சேவை பாராட்டுக்குரியது

''உலகில் பெருமைக்குரியவர்கள் ஆரியர்களே. சமூகம் அவர்களை ஓர் உயரிய இடத்தில் வைத்து கௌரவிக்கிறது; அவர்களின் அப்பழுக்கற்ற சேவையைப் பாராட்டுகிறது.''

- இவ்வாறு இறக்காமம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.அப்துல் மஜிட், கௌரவிப்பு விழாஒன்றில்பேசுகையில்குறிப்பிட்டார்.

35 வருடங்களுக்கு மேலாக ஆசிரியர் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் இறக்காமத்தைச் சேர்ந்த ஏ.எம்.ஏ. அஸீஸ்ராஜா, எம்.முகம்மது தம்பி ஆகியோர் இவ்விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இறக்காமம் அல் - அஷ்ரப் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு அதிபர் எஸ்.எம்.இஸ்மாயில் தலைமைவகித்தார்.

ஆசிரிய ஆலோசகர்களான எம்.எஸ். லாஹீர், எம்.ஐ.ஜௌபர், அதிபர்களான ஏ.ஹாறு தீன், எஸ்.எல்.கலந்தர், பீ.ரி.சுபைதீன் ஆகியோரும் இதில் உரையாற்றினர். (ளி)

# ஒரு மாதத்தில் 18 நாள்களே வேலை மொக்கா தோட்டத் தொழிலாளர் விசனம்

நுவரெலியா, ஓக. 23

மாதத்தில் 18 நாள்களே தமக்கு வேலை வழங்கப்படுகின்றது என மஸ்கெலியா பிளாண்டேசனுக்குச் சொந்தமான மொக்கா தோட்டத்தின் நான்கு பிரிவுகளிலுமுள்ள தொழிலாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக நேற்று தோட்ட முகாமையாளரைச் சந்தித்த தொழிலாளர்கள் தமக்கு வேலை வழங்குமாறு பிரஸ்தாபித்துள்ளனர்.

இதை செவிமடுத்த முகாமையாளர் சமீர ரத்னாயக்க, தோட்டக் கம்பனி 18 நாட்களே வேலை வழங்குமாறு தன்னைப் பணித்துள் ளது எனக் கூறியுள்ளார்.

இது குறித்து தொழிலாளர் தரப்பில் தெரி விக்கப்பட்டவை வருமாறு:-

தோட்டத்தில் புதிதாகத் தேயிலைச் செடிகள் நடல், பழைய செடிகளை அகற்றல், புல்லு வெட்டுதல், உரமிடுதல் போன்ற பல வேலைகள் உள்ளன. எனினும், அவை செய்விக்கப்படுவதில்லை.

இதனால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு மாதத்தில் ஏறக் குறைய அரைவாசி நாள்கள் வேலை இல்லாது போவதால் பெரும் திண்டாட்டத்திற்கு ஆளாகின்றனர். பிள்ளைகள் சரியாகப் பாடசாலை செல்வதுமில்லை.

தோட்டக் குடியிருப்பாளர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும் இல்லை - எனக் கூறப்பட்டது. (ளி)

# பண்டாரவளைப் பகுதியில் பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு ஓக. 23

பண்டாரவளைப் பிரதேசத்தில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தார்.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

குறித்த சடலம் அடையாளம் காண்பதற்காக பண்டாரவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ளி)

# பிரசவத்திற்காகச் சென்று கொண்டிருந்த கர்ப்பிணித்தாய் ஜீப்பில் மோதுண்டு மரணம்

## வயிற்றுக்குள் இருந்த குழந்தை வெளியே

கொழும்பு, ஓக.23

பிரவசத்திற்காக வைத்தியசாலைக்குச் சென்றுகொண்டிருந்த கர்ப்பிணித் தாயொருவர் ஜீப்பில் மோதுண்டு பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் புத்தலவில் இடம் பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவரின் வயிற்றிலிருந்த குழந்தையும் வெளியே வீசப்பட்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இது குறித்துக் கூறப்பட்டவை வருமாறு:-

புத்தல சுகாதார அதிகாரி பணிமனையில் பரிசோதனைகளை முடித்துக் கொண்ட இவர் பிரசவத்திற்காக புத்தல வைத்தியசாலை நோக்கி தனது கணவனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது பின்னால் வந்த ஜீப் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது. குழந்தையும் வயிற்றிலிருந்து வெளியேறியது. ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்ட அவர் சில நிமிடங்களில் உயிரிழந்தார். அவரது குழந்தை நன்கு வளர்ச்சியடைந்திருந்தது என வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜீப்பைச் செலுத்தி வந்த இளைஞரிடம் (வயது-19) சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

மொனராகலை பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

# கண்டி போதனா வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

கண்டி. ஓக.23

கண்டி போதனா வைத்தியசாலையின் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல பிரிவுகளில் ஏற்பட்டுள்ள மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்து வகைகளில் பெரும்பாலானவைகள் அதிக விலை கொண்டவை. இதனைத் தனியார் மருந்தகங்களில் கொள்வனவு செய்யுமளவுக்கு நோயாளர்களிடம் வசதியில்லை.

பல தூர பிரதேசங்களிலிருந்து விஷேட வைத்திய தேவைகளுக்காக வருகை தருபவர்கள் மருந்துகளின்றி ஏமாற்றத்துடனே திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே, சுகாதாரத்துறை அதிகாரிகள் இம்மருந்துத் தட்டுப்பாட்டை துரிதமாக நிவர்த்தி செய்ய வேண்டும் என நோயாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ளி)




# பிரதமர் தலைமையில் அடிக்கல் நடும்நிகழ்வு

அட்டபாகே கலத ஸ்ரீ தர்மவர்தனாராமய விகாரையில் புதியமண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு பிரதமர் டி.எம். ஜயரத்ன தலைமையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் [illegible], கலத மற்றும் கெகுலந்த பகுதிக்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் கலந்துகொள்கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டை
# செல்வச்சந்நிதி
## தேர்த் திருவிழாச் சிறப்பு



### ஆசியுரை



கலியுகத் தெய்வம் முருகப் பெருமானின் அருள் சுரக்கும் புண்ணியதலங்களில் ஒன்றாக விளங்கும் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் வட இலங்கையில் தொண்டைமானாற்றங் கரையிலே சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இங்கு அன்னதானக் கந்தனாக வீற்றிருந்து வேண்டுவோர் வேண்டுவதை கொடுத்தருளும் வேலனின் சிறப்புக்களையும் பெருமைகளையும் அவனது அற்புதங்களையும் கூறிவிட இந்த ஜென்மம் போதாது. ''ஆறுமுகப் பாலன் - இவன் ஆற்றங்கரை வேலன்'' என்ற பெயரில் ஆற்றங்கரையில் இருந்து சைவ மக்களின் பிணிகளைத் தீர்த்து அருளும் வேலன்.

கால வெள்ளத்தோடு கரைந்து செல்லும் எமது சமய ஆசாரங்களும் பண்பாடுகளும் மரபுகளும் என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டியவை. தலைமுறை தலைமுறையாக ஒரு வரம்பிற்குட்பட்டு நின்று சந்நிதி வேலனைப் பூசித்து வரும் சைவ மக்கள் ஆற்றங்கரை வேலனின் தேர் உலாவினைக் கண்டு தங்களது பிணிகளைத் தீர்த்து வேண்டுவதை வேண்ட அருள் கிடைக்க வேண்டும் என ஆசி வேண்டுகிறேன்.

'' மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெலாம்''

பிரதமகுரு, சிவஸ்ரீ கந்தசாமி ஐயர்
உலககுருநாதஐயர்,
செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு.



### அன்னதானக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா



அன்னதானக் கந்தனின் கடைக்கண் பார்வை எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

' வீரவேல் தாரவேல் விண்ணோர் சிறை மீட்டவேல்
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் - வாரிக்
குளித்த வேல் கொன்றைவேல் சூர் மார்பும் குன்றும்
துளித்த வேல் ஒன்றே துணை'

வேண்டுவார் வேண்டுவன தருவான் எங்கள் சந்நிதி வேற்பெருமான். அடியவர்களின் அடியனாய் இருந்து எம்மையெல்லாம் காத்தருளும் சிங்கார வேலனுக்கு இன்று தேர்த்திருவிழா. இன்று தேரேறிவரும் ஆற்றங்கரையானின் அருளொளியின் பிரகாசம் எங்கெங்கும் பரவத் திருவுளங்கொண்டு சின்னக் கதிர்காமமாம் எங்கள் சந்நிதி வேலனின் அருளொளி எங்கும் பரவட்டும்.

தல விருட்சமாம் பூவரச மரத்தடியில் அமர்ந்திருக்கும் வேலனுக்கு 65 ஆலிலையில் அமுது படைத்து எம்பெருமானின் அருமருந்தை நாமெல்லாம் உட்கொண்டவுடன் எம்மிடம் உள்ள அனைத்து வினைகளும் அறுக்கப்பட்டு அன்னதானக் கந்தனால் ஆள்கொள்ளப்படுவது திண்ணம்.

தேரேறிவரும் எம் வேலவனை அன்போடும் பக்தியோடும் சைவ சீலர்களாக அடியவர்கள் கூட்டம் தென்றலாக அருளொளி வீசி தவழ்ந்துவரும் எங்கள் செல்வச்சந்நிதிக் கந்தன் அடியவர்களுக்கு நிம்மதியான வாழ்வையும் சுபீட்சமான எதிர்காலத்தையும் வாரி வழங்கவரும் இந்நன்நாளில் அன்னதானக் கந்தனின் நாமத்திற்கேற்ப அன்னத்தைக் குறைவில்லாது தன்னை நாடிவரும் அடியவர்களுக்கெல்லாம் பசிப்பிணியைப் போக்கிக் கொண்டிருக்கும் வேலவனின் தாள் பணிந்து எல்லோருக்கும் அருள் கிடைக்கப் போற்றுகின்றோம்.

'' எந்நிதியும் தரும் எங்கள் அன்னக் கந்தன்'

செ.மோகனதாஸ்,
சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

### அண்டி வருவோருக்கு ஆதரவளிக்கும் எங்கள் சந்நிதி முருகன்

''ஆவணிச் சதுர்த்தசியில் ஆற்றங்கரைச் சந்நிதியில் ஆனைமுகன் தேருர பின்னே
ஆறுமுகன் தேருடனே ஆரோகணித் தருளும் பெருந்தேரமரும்
வேலன் பவனியிலே ஆனந்தக் கூத்தாடிக் களித்திடுவ ரடியவர்கள்''

தமிழர் தம் பெருந்தெய்வமாகவும், அண்டி வருவோர்க்கெல்லாம் ஆதரவளிக்கும் தெய்வமாகவும் விளங்குபவன் செல்வச் சந்நிதியான். அயிராவசு என்ற சாதுவின் இடமான பூவரச மரத்தினை தலவிருட்சமாகவும் வல்லியாறு என்று புராணங்களில் சொல்லப்படுகின்ற தொண்டமானாற்றையும், ஆலமரச் சோலைகளையும் சூழலாகக் கொண்ட அமைவிடத்தில் எம்பெருமான் கோயில் கொண்டருள்கின்றான். தன்னை நாடியும் தேடியும் வருகின்ற அடியார்கள் மத்தியில் தானும் ஒருவனாக நடமாடி வருபவன் இங்கு கோயில் கொண்ட வேலவன். கன்மவினைச் சூழ்வாலும் இப்பிறவியிலேயே செய்து கொண்ட ஆணவச் செயல்களாலும் வாழ்வின் காலங்களிலேனும் அன்றி வாழ்வின் பிற்பகுதியிலேனும் அவதிப்படுகின்ற ஆன்மாக்களை ஈடேற்றம் காணச்செய்து சுகமும், முக்தியும் அருள்வதற்குச் சந்நிதி வேலனையன்றி வேறெந்தத் தெய்வமும் அவனியில் இல்லையென்றே கூறிவிடலாம்.

அனுதினமும் அறுபத்து நான்கு ஆலம் இலைகளில் அமுது செய்து,வாய் கட்டிப் பூசை செய்து எம்பெருமானை ஆராதிக்கும் கைங்கரியங்களோ தனித்துவமானவை. தமிழர் தம் பாரம்பரிய வழிபாட்டு முறைமைகளையும் இனங்காணச் செய்பவை. வேற் பூசையின் போது நிவேதிக்கப்பட்ட அமுதினை ''மருந்து'' என்று சொல்லும்

### தேர்ஏறி வருகின்றான் - சந்நிதியான்

யாழ்.குடாநாட்டில் சைவ ஆலயங்களில் உற்சவம் ஆரம்பமாகிவிட்டால் அந்த ஆலயங்கள் அமைந்துள்ள சூழலிலுள்ள மக்களுக்கு அது ஆனந்தம் அளிக்கும் நிகழ்வாக அமைந்து விடுவது இயல்பானதாகும். ஆனால், தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தின் உற்சவம் என்பது ஊரைக் கடந்து, நாட்டைக் கட[...] உலகின் எல்லாக்கண்டங்களிலுமுள்ள நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து சைவ அடியார்களும் ஆனந்த பரவசமடையும் புனிதம் நிறைந்த ஒரு நிகழ்வாக அமைந்துவிடுகிறது. அதிலும் சந்நிதியானது தேர் உற்சவம் என்றவுடன் அவனது அடியார்களின் உள்ளங்களில் அவர்களை அறியாமலே பக்தி உணர்வு ஊற்றெடுக்க ஆரம்பித்து விடுகின்றது. அதுமட்டுமல்ல காந்தம் போல சந்நிதி ஆலயத்தை நோக்கி அவனது அடியார்கள் அனைவரும் அங்கே ஈர்க்கப்படுகின்ற அதிசயமும் நடந்தேறுகிறது. இதனால்தான் வருடந்தோறும் சந்நிதியானின் தேர் உற்சவத்தின்போது அவ்வாலயச் சூழல் முழுவதும் மக்கள் வெள்ளம் பக்திப் பரவசத்துடன் அலைமோதுகின்ற கண்கொள்ளாக்காட்சியையும் நாம் அங்கே காணமுடிகிறது.

அழகுமாடம்:

உலகில் மிகவும் பிரமாண்டமான தேராகக் கருதப்படுவது திருவாரூர் தேராகும். ஆலயத்தில் அமைந்துள்ள தேரின் பருமனையும், கட்டுத் தேரான அதன் கட்டுமானங்களையும் பார்ப்பவர்கள் எவரும் பிரமிப்பு அடையாது இருக்கமுடியாது. இதே போன்று தான் ஈழத்தில் பார்ப்பவர்கள் பிரமிப்பு அடையும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் சித்திரத்தேராகும். 500 க்கும் மேற்பட்ட கலைநுட்பங்கள் பொதிந்த சிற்பங்களை உள்ளடக்கி, 1008 மணிகள் அசைந்து நாதம் எழுப்பக்கூடிய வகையில் பெரும் பொருட் செலவையும் மனித


**ஆசைப்பிள்ளை**
**அன் சன் நகைமாடம்**
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை.

**NEW TONE ELECTRICAL**
கொழும்பு விலையில் தரமான மின் பாவனைப் பொருள்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
440, 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2037.

**சிறி நதியா நகை மாளிகை**
**அன் டிஜிற்றல் கலர் லாப்**
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6744
இல.108A, லக்சன் பிளாசா கட்டடம் நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8412

22 கரட் தங்க நகைக[...]
உத்[...]ரவாதத்து[...]
பெற்றுக்கொள்ள[...]
**சாரங்கா நகை[...]**
157, கஸ்தூரியார் வீ[...]
யாழ்ப்பாணம்.

வீட்டு மின்சார உபகரணங்கள் விற்னை நிலையம்
மின் இணைப்பு, தண்ணீர் பம்பு இணைப்பு, செய்து கொடுக்கப்படும்.
**வாசு எலக்ரிக்கல்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே: 0774659755

**கிருபா லேணர்ஸ்**
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
பிரதான காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777225292, 021 222 4353.
கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி.
0602006550

ஓம்கார மாமணி ஒலிக்க
தேவாதி தேவனே தேரேறி
வருக!
**அ[...]**
அப்[...]
கோப்பி, பற்பொடி, [...]
மற்றும் தயாரிப்புக்களா[...]
என்பனவும் எம்மிடம் பெற்[...]
**அண்ணா தொழி[...]**

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் யாவும் நியாய விலையில்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
**ஆர்.வி.ஜி. பீடிகள்**
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2129
**R.V.G. ஸ்தாபனம்**
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே 222 6606

**அபிராமி இரும்பகம்**
எம்மிடம் Dulux, Asian, Multilac, Robialac, Couseway, Rubiyalac அனைத்து பெயின்ற் வகைகளையும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே: 0772395738

**Royal**
**Electronic Electricals**
Dealers in Electronic Electricals Spare Parts and Electronic Electricals Items
பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. தொ.பே: 021 226 4789



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டமானாறு
# தியான் ஆலய
## ப்புமலர் - 23.08.2010



க்கிணங்க தீராத உபாதைகளால் அவதிப்பட்டு தேற்றுவாரின்றி வந்த பலரை சுக பலம் வர்களாக மாற்றிய மகிமை இந்த அமுதுக்குரியதாகும். இதனாற்தான் ஆலயத்தைச் சூழ நாற்பத்து ு மடங்கள் வரை தமது அன்னதானப் பணியை மேற்கொண்டு அன்னக் கந்தனின் சிறப்பை எடுத்தியம்பி வந்தன. இன்றுகூட 6 க்கும் மேற்பட்ட அன்னதான மடங்களும், நித்திய னதானப் பணியுடன், சமுதாய மேம்பாட்டுக்கான பலவித பணிகளையும் ஆற்றி வருகின்ற தியான் ஆச்சிரமத்தின் பணிகளும் குறிப்பிடத்தக்கவை. உற்றமாய், சுற்றமாய், மகவாய், துவனாய், தலைவனாய்,தந்தையாய், ஞானகுருவாய், அனைத்துமாய் அருள்வாயப்பா என்று ண்டாடும் அடியவர்கள் மத்தியில் இன்றைய தினம் எம்பெருமான் தேரேறி வருகின்றான். வர்கள் ஆனந்தக் கூத்தாட ஆற்றங்கரை வேலன் ஆரோகணித்து வருகின்றான். ஆனந்தக் திலும் ஓர் ஆதங்கம்.... நம் தமிழினம் பட்டு வந்த அவலங்களால் ... கண்ணீர் ிந்து,கதறியழுது எங்களின் தமிழ்த் தெய்வத்திடம் வேண்டுவோம். நிச்சயம் அபயம் கிடைக்கும். வேண்டுவார் வேண்டுவதை வேண்டும் முறையறிந்து வழங்குவதற்கு திருவுளம் கொண்டவன் திவேலன். ஆதலால் நமது இனம் பட்டுவந்த இன்னல்களை மனதிருத்தி பக்குவமும், பாடும், சீலமும் கொண்டவர்களாகி எம்பெருமானிடம் வேண்டுவோம்.

'யாமிருக்கப் பயமேன்'' என்று சடுதியில் வந்து அரவணைப்பான்.

'' அண்ணன் மாணிக்க விநாயகனையும்
அன்ன மலையரசன் சந்நிதி வேல் அழகனையும்
வேண்டித்தொழு கோடி அடியரின்
வேண்டுதலைக் கேட்க கதவில்லா வாசலில்
வேலன் காத்து நிற்பது- அகக் கண்ணுக்குத் தெரிகிறது''

துரை கணேசமூர்த்தி ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி

### ஆற்றங்கரை வேலவனே வா வா முருகா!

அப்பனே, அன்பனே வா வா முருகா
ஆற்றங்கரை வேலவனே வா வா முருகா
இன்னல்கள் நீங்கிடவே வா வா முருகா
ஈசனவன் பாலகனே வா வா முருகா
உள்ளமுருகி வேண்டுகிறோம் வா வா முருகா
ஊரெல்லாம் ஒளிபெறவே வா வா முருகா
எல்லையில்லா அழகனே வா வா முருகா
ஏகாந்தம் தந்திட வா வா முருகா
ஐங்கரனின் சோதரனே வா வா முருகா
ஆடும் மயில் வாகனனே வா வா முருகா
ஒருவனே எம் உத்தமா வா வா முருகா
ஓராறு முகத்தோனே வா வா முருகா
ஔவைக்கு போதித்தவா வா வா முருகா



ற்பையும் பயன்படுத்தி ஒரு கலைப் பொக்கிசமாக அது அமைக்கப்பட்டது. 45 அடி உயரமான ாண்ட அந்த சித்திரத்தேர் 1984 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. அழகுமாடமாக ந்த அந்த சித்திரத்தேரில் 1984 ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தில் சந்நிதியான் முதன்முதல் உலா வந்த அந்த அற்புதமான காட்சியைப் பார்த்து அடியார்கள் ஆனந்தப் பரவசம் அடைந்தனர்.

**யார்களின் உணர்வலைகள்:**

தியான் வீதி உலாவந்த அந்த சித்திரத்தேர் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே க்கப்பட்டு விட்டது. 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எரியூட்டப்பட்டு ஒரு இரவுக்குள் சாம்பல் ாகக் காட்சியளித்த அந்த துன்பியல் நிகழ்வு அங்கே நடந்தேறியது. காலப் பொக்கிஷமான தியானது பிரமாண்டமான அந்தச் சித்திரத்தேர் ஒரு இரவுக்குள் எரிந்து நாசமாகிவிட்டது என்ற தி வெளிவந்த பொழுது அவனது அடியார்கள் பலர் அதனை நம்ப மறுத்தார்கள். அங்கே நேரே றவர்கள் எஞ்சியிருந்த இரும்பினால் ஆன தேர்ச்சில்லின் பிரமாண்டமான அடிச்சட்டங்களை மற்றவை அனைத்துமே எரிந்து சாம்பலாகிவிட்ட அந்த துன்பியல் காட்சியைப் பார்த்து கப்படைந்தார்கள்.

ல அடியார்கள் தேருக்கு ஏற்பட்ட இந்த மிகப்பெரிய அழிவின் ஊடாக இந்த பகுதி மக்களுக்கும், ளது உடமைகளுக்கும் ஏற்பட இருந்த மிகப் பெரிய அவலத்தைச் சந்நிதியான் தானே தாங்கிக் ண்டுள்ளான் என சந்நிதியானுக்காக வாதிட்டனர். ஒட்டுமொத்தமாக அங்கே ஒரு மிகப்பெரிய லம், நடந்துவிட்டது என்பதை மக்களது உணர்வலைகள் வெளிப்படுத்திக்கொண்டிருந்தது.

**ழிவிற்கான அடையாளம்**

யாகர் சுவாமிகள் தமிழருக்கு எதிர் காலத்தில் ஏற்படப்போகும் அழிவுகள் பற்றி தனது த்திலேயே ஆரூடகமாகக் கூறியுள்ளார்கள். இதேபோன்றுதான் கலியுகக்கந்தன் சந்நிதியானது ரத்தேர் எரிக்கப்பட்ட பொழுதும் தமிழர்களுக்கு ஏதோ ஒரு அவலம் நடக்கப்போவதாக பாழுதே சில அடியார்கள் கட்டியம் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. உண்மையில் அதுதான் ு நடைபெற்றுள்ளது என்றே நாம் கருத வேண்டியுள்ளது. ஆம் 1986இல் இவ் தேர் எரிப்பைத் தொடர்ந்து 1987 இல் வடமராட்சியில் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையும் அழிவுகளும் இறுதியில் 2009 இல் வன்னியில் முள்ளிவாய்க்காலில் தமிழர் வரலாற்றில் என்றும் மறக்கமுடியாத துன்பியல் நிகழ்வுடன் முற்றுப்பெற்றுள்ளது. சந்நிதிமுருகன் அடியார்கள் துயர் தீக்கும் முருகன். அவன் அடியார்கள் துன்பத்தை தனது துன்பமாகக் கருதுபவன்.

1986 இல் சந்நிதியானது சித்திரத்தேர் எரிக்கப்பட்டும் அவனது ஆலயம் சேதமாக்கப்பட்டும் பல்வேறு அழிவுகளும் முதன்முதலில் அங்கேதான் ஏற்படுத்தப்பட்டன. அது மட்டுமல்ல சந்நிதியானது ஆலயமும் பூசைகள் இன்றி பூட்டப்பட நேர்ந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக சித்திரத்தேர் எரிப்பைத் தொடர்ந்து சந்நிதியான் வீதி உலா வந்து கொண்டிருந்த பழைய கட்டுத் தேர் ஆலயத்தின் மேற்று வீதியில் அடியார்கள் கண்ணெதிரே குடை சாய்ந்த அந்தத் துன்பியல் காட்சியை யார்தான் மறக்கமுடியும். ஆம் இவை எல்லாம் தமிழர்களது துன்பங்களுக்கும், அழிவுகளுக்குமான எதிர்வு கூறல்கள் போல் அமைந்தன்.

**தாய் சேய் உறவு**

சந்நிதிமுருகன் அடியவர்கள் ஆன்மாக்களில் இரண்டறக்கலந்து அடியவர்களுக்கு அபயமளிக்கின்ற கண்கண்ட தெய்வம். உண்மையில் சந்நிதிமுருகனுக்கும் அடியவர்களுக்கும் உள்ள உறவு தாய் சேய் உறவாகும். இதனால் தான் சந்நிதியானது அடியவர்கள் அவன் மீது அளவற்ற பக்தியும் ஈடுபாடும் கொண்டு சந்நிதி ஆலயத்தின் தனித்துவம் குன்றாத வகையில் அதனை இன்று முழுமையாகப் புதுப்பொலிவுடன் புனரமைத்துள்ளனர். அது மட்டுமல்ல ஒரு சித்திரத்தேருக்கு பதிலாக மூன்று சித்திரத்தேர்களை அங்கே அழகுற வடிவமைத்துள்ளனர்.

ஆலயம் முழுவதும் பக்திப் பரவசத்தில் அடியார்கள் வெள்ளம் போல் அலைமோத அந்த அலைகளுக்கு நடுவே சித்திரத்தேர்கள் அசைந்து வருகின்ற காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

இயற்கை எழில் நிறைந்த சூழலில் சந்நிதிவேலனின் பலவர்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு தேர் ஏறி வீதி உலாவருகின்ற அந்த எழிற் கோலத்தை காண்பது இப்பிறவியில் எமக்கு கிடைத்த பெரும் பேறல்லவா?

ந.அரியரத்தினம், கனடா.


ங்க நகைகளை
ாதத்துட
க்கொள்ள
நகைமாடம்
தூரியார் வீதி,
ப்பாணம்.

பல டிசைன்களில் உங்கள்
ஆபரணங்களைப் பெற்றுக்கொள்ள
மகாநதி ஜூவலறி
72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

R.K & Sons Electronics
Authorized Dealer for bans
Dealer's in all kind of Electronic's & Gift Items
T.P: 0775029034
பிரதான வீதி, நெல்லியடி.

சிற்றுண்டி வகைகள் குளிர்பானவகைகள்,
ஐஸ்கிறீம் வகைகள்
என்பவற்றை அருந்தி மகிழ
நிதர்ஷன் கிறீம் ஹவுஸ்
165/2, பஸ் நிலையம்,
பருத்தித்துறை.
தொ.பே: 0776214224

அண்ணா
அப்பம் மா, தோசை மா,
பொடி, அரிசிமா, ஜீவாகாரம்
க்கவான பக்தி, விபூதி
டம் பெற்றுக்கொள்ளலாம்.
தாழிலகம் இணுவில்

சகலவிதமான ஆடம்பரப்
பொருள்கள், துவிச்சக்கரவண்டி
அதன் உதிரிப்பாகங்கள் வீட்டுத்
தளபாடங்கள் பிளாஸ்ரிக்
கதிரைகள், பிளாஸ்ரிக்
உபகரணங்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
அற்புதா ரேடிங் கொம்பனி,
மல்ரிப் பிளேஸ்
198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஈஸ்வரி
நகையகம்
உரிமையாளர்:
ஆ.செல்வவிநாயகம்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

தரமான 916 KDM
நகைகளைப் பெறுவதற்கு
நாடவேண்டிய இடம்
தரன் நகை
மாளிகை
கிளை : ம.ம.வி.வீதி,
நெல்லியடி.
பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே: 021 321 9254,
0773276356.

பருத்தித்துறை வடை, எள்ளுப்பாகு,
எள்ளுமா,
கடலை மா, சீடைப் பலகாரம்,
பனங்கட்டி ஒடியல் பனாட்டு
மற்றும் காலை, மதிய, இரவு உணவு
உண்டு.
வைபவங்களுக்கான உணவுகள்
ஓடருக்குச் செய்துகொடுக்கப்படும்.
ராஜா
சுவைச்சோலை
பிரதான வீதி, பருத்தித்துறை.
0772673612, 0214920018.

Srimurugan
Medical Stores
ஆங்கில ஆயுள்வேத மருந்துவகைகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,பருத்தித்துறை.

916 KDM தங்கம் மற்றும் வெள்ளிக்கு
ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே: 021 320 7437

தரம் மிக்க தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
வைஷ்ணவி
நகைப்பூங்கா
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 226 4519


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொக்கணை நீரூற்றுக்கு விரைவில் காவலாளி நியமனம்

நாவற்குழி,ஓக.23

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகங்களுக்கு மிக விரைவில் பல்வேறு தரங்களைச் சேர்ந்த 5 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட உள்ளதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன. ஊரெழு பொக்கணையிலுள்ள வற்றாத நீரூற்று வளாகத்திற்கும் காவலாளி ஒருவர் இந்நியமனங்களில் உள்ளடக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் இக்கிணற்றைப் பார்வையிடுவதற்கு விரும்பி வருகை தரும்போதும் காவலாளி இல்லாத காரணத்தால் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. காலவாளி ஒருவர் நியமிக்கப்பட்டாலே சுற்றுலாப் பயணிகள் இதனைப் பார்வையிட முடியும் எனக் கூறப்பட்டு வந்தது. மிக விரைவில் இக்குறைபாடும் நீங்கிவிடுமெனத் தற்போது கூறப்பட்டுள்ளது. (எ-121)

## திடீர் சோதனை

தென்மராட்சி,ஓக.23

டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் அண்மையில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது சாவகச்சேரி சுகாதார பகுதியினர், பொலிஸார், படையினர், நகரசபையினர், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் ஒவ்வொரு வர்த்தக நிலையங்களாகப் பார்வையிட்டனர்.

இவற்றில் சில வர்த்தக நிலையங்களில் சிவப்பு ஸ்ரிக்கர் ஒட்டி 14 தினங்களுக்குள் அங்குள்ள குறைகளை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-207)

### மணமகள் தேவை

யாழ்.நகரில் சொந்தமாக கடை நடத்தும் 50 வயது இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு 40 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.: 021 222 7217

### வேலையாள்கள் தேவை

இணுவிலில் இயங்கும் வர்த்தக நிலையத்திற்குப் பொறுப்பாக செயற்படத்தக்க ஆண்கள் தேவை. (வயது 30-60)

தொடர்புகளுக்கு: 071 6540887

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி சூரியகுமாரி குலேந்திரம்

(சூரியக்கா)

பாலர் பாடசாலை ஆசிரியை/ சங்கீத ஆசிரியை /முன்னாள் தலைவர் (1996- 2003) ஞானசம்பந்தர் கலை மன்றம்)



தோற்றம்
09.07.1943

மறைவு
24.07.2010

மன்றத்தை ஸ்தாபித்தவர்களுள் ஒருவரும் முதலாவது இணைச் செயலாளராகப் பதவியேற்று பணியை ஆரம்பித்து 25 வருடங்கள் மன்றத்தின் பாலர் பாடசாலை ஆசிரியையாகவும், சங்கீத ஆசிரியையாகவும், 8ஆண்டுகள் மன்றத்தின் தலைவராகவும் சேவையாற்றியதுடன் மாணவர்களுக்குப் பண்பாட்டுக் கல்வியையும், ஆரம்பக் கல்வியையும் புகட்டி மன்றத்தை சமூகத்தின் ஓர் உயர்ந்த இடத்திற்கு வளர்த்தெடுத்த பெருமைக்குரிய அம்மையார் அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முதல்வியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்
ஞானசம்பந்தர் கலை மன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி/570047)

## இயன் மருத்துவ சேவை

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.கொக்குவில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் இயன் மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இச்சிகிச்சை வாரந்தோறும் திங்கள், வியாழக்கிழமைகளில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்போது வர முடியாமையுள்ள மாற்று வலுவுடையோர்களுக்கு அவர்களது இல்லத்தில் சென்று இச் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இச்சிகிச்சை இலவசமாக வழங்கப்பட்டு வருவதால் தேவைப்படுவோர் சங்கத்தில் தொடர்பு கொண்டு பயனடையலாம் என சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (எ-317)

## பதக்கம் பெற்றமையினையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கியில் 28 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றியமைக்காக இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தினால் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) 21.08.2010இல் இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையைச் சேர்ந்த

திரு.கைலாசபிள்ளை விக்னேஸ்வரன் (விக்கியண்ணை)

பதக்கம் சூட்டப்பட்டுப் பாராட்டுப் பெற்றமையையிட்டு மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இவர் மண்டைதீவு சேர்மனின் மகனும் யாழ்.இந்துவின் மைந்தனும் என்பதோடு வாடிக்கையாளரின் நன்மதிப்பினைப் பெற்றவரும் ஆவார்.

எஸ்.தவயோகேஸ்வரன்,
லக்சுமி ரேடர்ஸ்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(102312)





உடலை திடமாக கட்டியெழுப்புங்கள்

தசைநார் வளர்ச்சிக்கு

தசைநார் நன்கு விருத்தி பெறுவதற்கு அவசியமான போஷாக்கு அடங்கிய பானம். ஒமோன் மற்றும் இழையச் செயற்பாடுகளை அதிகரிப்பதுடன் நோயெதிர்ப்புச் சக்தியை விருத்திசெய்யவும் உதவும்.

Hotline 0777 536796

Manufactured under licence from Edge USA


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

பூமியில் உதயம் 12 ★ 09 ★ 1988



புகழ்வழிப் பயணம் 14 ★ 09 ★ 2008

### அமரர் துரைசிங்கம் பிரதீபன்

குடும்பத்தின் குலவிளக்கு கோயில் கொண்டது
கூட உள்ள அனைவரையும் மறந்து சென்றது
வரும் கொடுமை எதிர்த்துத் தினம் வாழ்ந்து நின்றது - நாம்
வாழ்வதற்காய் வாழ்விழந்து போய் மறைந்தது
திரும்புகின்ற திசையெல்லாம் தெரியுதடா உன் முகம்
தேறவில்லை எம்மனது தேம்பியழுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்....

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

இல.108, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

(102316)


Internationally Recognized and Affordable


UK Qualification

*Delivered locally...... Recognized globally......*

edexcel BTEC

**HND in Business Management**

முகாமைத்துவத்துறையில் உங்கள் தகுதியையும், தகைமையையும் உயர்த்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் பிரித்தானிய முன்னணிப் பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவப் பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளுங்கள்.



New Batch Starts on 10.09.2010

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு மீள்குடியேற்றுவதாக வாக்குறுதி; பிரதேசமோ உயர் பாதுகாப்பு வலயம்!

## பாடசாலையிலேயே வாழ்வைக் கழிக்கும் பரவிப்பாஞ்சான் மக்கள்

கிளிநொச்சி,ஓக.23

மீள்குடியேற்றுவதாகக் கூறி வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் இருந்து கூட்டி வரப்பட்ட பரவிப்பாஞ்சான் மக்கள் கடந்த ஒன்றரை மாத காலமாக மீள்குடியேற்றப் படாமல் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மீள் குடியேற்றுவதாகக் கூறி கூட்டி வரப்பட்ட பரவிப்பாஞ்சானைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வகுப்பறைகளிலேயே வாழ்வை நடத்தி வருகின்றனர்.

பரவிப்பாஞ்சான் பிரதேசம் இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனாலேயே மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தமது மீள்குடியேற்றம் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரிகளிடம் வினவிய போது அவர்களிடம் இருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் மூன்றாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பிக்கப்படும் போது இந்த மக்களை வேறு இடத்திற்கு மட்டும் மாற்றுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேற்றுவதாகக் கூறி தம்மை அழைத்து வந்து மீண்டும் முகாம் வாழ்க்கைக்கே தம்மை அதிகாரிகள் தள்ளியுள்ளனர் எனக் கூறும் மக்கள் தாம் இங்கேயே தங்க வைக்கப்பட்டுள்ளதால் தொழில், கல்வி போன்ற விடயங்களில் பின்தங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பகுதியில் மீள் குடியேற்றுவதாகக் கூறி எதற்காகத் தம்மை அழைத்து வந்து இவ்வாறு தங்க வைத்துள்ளனர் என்று அவர்கள் கேள்வியும் எழுப்பியுள்ளனர். (6-10)



# ஆலயம் புனரமைப்பு

கிளிநொச்சி,ஓக.23

கிளிநொச்சி கணேசபுரம் சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலயப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்து கலாச்சார அமைச்சினால் வழங்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபா நிதியில் தற்போது சிறு திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-405)

# ஏர்பூட்டும் விழா

பூநகரி,ஓக.23

பூநகரிப் பிரதேச பெரும் போக நெற்பயிர்ச் செய்கைக்கான ஆரம்ப நிகழ்வான ஏர் பூட்டும் விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு செல்லையாத்தீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பூநகரி கமநலசேவை நிலையத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு பதிவை மேற்கொண்ட பயனாளிகளுக்கு விதைநெல் வழங்கப்படும். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (6-420)

# கரைச்சிப் பிரதேச செயலக மக்களுக்கான மீள் குடியேற்றப் பதிவுகள் நாளை

கிளிநொச்சி,ஓக.23

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வெளிமாவட்டங்களில் வசிக்கும் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்காகப் பதிவு செய்யும் செயற்பாடுகள் நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியின் இடைத்தங்கல் முகாமில் இடம்பெறவுள்ளது.

இதில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், கனகபுரம், ஜெயந்தி நகர் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

எனவே இப்பிரதேச மக்கள் தற்போது வசிக்கும் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள பதிவுகளை நீக்கி பிரதேச செயலரினால் மேலொப்பம் இடப்பட்ட கடிதங்களுடன் வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருவையாறு மேற்கு, பாரதிபுரம், மலையாளபுரம், பொன்னகர், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு, கிராம அலுவலர் பிரிவுகளின் மக்களுக்கான மீள் குடியேற்றப் பதிவுகள் கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத்தங்கல் முகாமில் இடம் பெற்றது.

இதன் போது இப்பகுதி மக்களுக்கான உணவு பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டதுடன் இராணுவத்தினராலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு குடும்பப் புகைப்படமும் எடுக்கப்பட்டதுடன் அடையாள இலக்கங்களும் வழங்கப்பட்டன. பொலிஸாராலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. (6-405)

# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயப் பெருந்திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.23

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் இடம் பெறவுள்ளது.



இதில் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வேட்டைத் திருவிழாவும், மாலை சப்பறத்திரு விழாவும் இடம் பெறும். செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி புதன் கிழமை தேர்த் திருவிழாவும் மாலை உறியடி உற்சவமும், இரண்டாம் திகதி வியாழக் கிழமை தீர்த்த உற்சவமும் மறு நாள் வெள்ளிக் கிழமை காலை சங்காபிஷேகமும் இரவு திருக்கல்யாணமும் இடம் பெறும். நான்காம் திகதி சனிக் கிழமை ஆஞ்சநேயர் உற்சவமும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் காலை உற்சவங்கள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவு பெறும் மாலைத் திருவிழாக்கள் 3 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு நிறைவு பெறும். கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய உற்சவங்கள் அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-14-204)

# சகல வழிகளிலும் பின்தங்கியிருக்கும் எமது பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுங்கள்

## செல்லியத்தீவு அ.த.க.பாடசாலை ஆசிரியர்கள் மகஜர்

கிளிநொச்சி,ஓக.23

சகல வழிகளிலும் பின் தங்கியிருக்கும் எமது பாடசாலை சீராக நடைபெறுவதற்கு உதவுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு செல்லியத்தீவு அ.த.க.பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் கூட்டாக மகஜர்.

அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் செல்லியத்தீவு அ.த.க.பாடசாலைக்கு விஜயம் செய்தபோது மனுவை கையளித்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டுள்ள தாவது:-

* நிரந்தர கட்டிடங்களுக்கு ஓடுகளினால் கூரை போடப்பட்டு திருத்தம் செய்தல்.
* கணனி அறையையும் நூல் நிலையத்தையும் திருத்தி கணனிகள் பெற்றுக் தரல்.
* பாடசாலையில் இருந்து 4 கி.மீற்றர் தூரத்திலுள்ள மின்சார இணைப்பை பாடசாலைக்கு பெற்றுத்தரல்.
* ஆசிரியர் விடுதிகளை அமைத்தல்.
* பாடசாலைக்கு கிணறு அமைத்து நீர் தேவையை நிறைவு செய்தல்.
* பாடசாலைக்கு சொந்தமான 4 ஏக்கர் வயல் நிலத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபட சிறியஉழவு இயந்திரத்தை பெற்றுத் தரல்.
* கிளிநொச்சி - பூநகரி போக்குவரத்து சேவையை காலையில் சீராக ஏற்படுத்துதல்.
* ஏனைய பௌதிகவளங்களை பெற்றுத்தரல். (6)

# யு.என்.டி.பியின் மீள் எழுச்சித் திட்டம் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் ஆரம்பம்

கிளிநொச்சி,ஓக.23

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உருத்திரபுரம் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் யு.என்.டி.பி.நிறுவனத்தின் கிராம மீள் எழுச்சித்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

இதன் ஆரம்பக் கட்டமாக கடந்த 18 ஆம் திகதி திருக்குடும்ப கன்னியர் மட சபையால் பொதுப் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட காணியில் முன்பள்ளி அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வை அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு நீர்ப்பம்பி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இத்திட்டத்தில் 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் வாழ்வாதாரக் கடன் வழங்குவதற்காக 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். பாலம் ஒன்றைப் புனரமைக்கவும் திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டது என்பதும் குறிப்பிடதக்கது. (6-405)

# நிரந்தர வீடுகள் கிடைக்கப் பெற்றபோதும் தறப்பாள் கொட்டில்களில் வாழும் மக்கள்

## காணி உறுதிகளைப் பெற உதவுமாறும் கோரிக்கை

கிளிநொச்சி,ஓக.23

மீள் குடியமர்த்தப்பட்ட வன்னேரிக்குளம் கிராமமக்களுக்கு நிரந்தர வீடுகள் கிடைக்கப் பெற்றபோதும் சொந்தப் பெயரில் காணி உறுதிகள் இல்லாததால் சுமார் 300 இற்கும் மேற்பட்டகுடும்பங்கள் தறப்பாள் கொட்டில்களிலேயே. வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வீடமைப்பு அதிகார சபையின் செயற்றிட்டத்தின் கீழ் இந்தக் கிராம மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டம் பரிந்துரைக்கப்பட்டு வீடுகளுக்குரியவர்களின் பெயர்ப்பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வன்னேரிக்குளம்,சோலை, திக்காய், ஐயனார்புரம் கிராமங்களில் வசிக்கும் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கே நிரந்தர வீட்டுத் திட்டத்துக்கான பெயர்கள் வீடமைப்பு அதிகார சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் பெயர்ப் பட்டியலில், குறிப்பிடப்பட்டவர்களின் வீட்டுத் திட்டத்தின் மூலம் வீட்டைப் பெறுவதற்கு வைத்திருக்க வேண்டிய ஆவணங்களில் காணி உறுதிப்பத்திரம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வன்னியில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் முறையாக அரச சேவையை பெறமுடியாமையால் காணி உறுதிகளை மாற்றிக் கொள்ள முடியாத நெருக்கடி நிலை இருந்ததாக மக்கள் தெரிவித்துள்ளதுடன் நிரந்தர வீடுகள் கிடைத்தும் தற்போது தாம் தறப்பாள் கொட்டில்களிலேயே வசிக்கும் நிலை உள்ளதாகத் தெரிவித்தனர்.

தற்போது அடிப்படை வசதிகள் எதுவுமின்றி தறப்பாள் கொட்டில்களில் வசித்து வரும் தமக்கு நிரந்தர வீடுகளைப் பெற சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை செய்து தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை [illegible] யத்தில் தமது ஆவணங்களை இழந்த நிலையில் அவற்றை மீளவும் பெறுவதில் தமக்கு சில சலுகைகளை அரச செயலகத்தினர் செய்து தரவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (6-10)

## கோட்டக்கல்விப் பணிப்பாளர் நியமனம்

பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளராக சுப்பிரமணியம் தர்மரத்தினம் நியமிக்கப் பட்டுள்ளார்.

மன்னார்,கிளிநொச்சி மாவட்டங்களில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியுள்ள இவர் கடந்த 9 ஆம் திகதி முதல் தமது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். (6-405)

# அதிகரித்த பஸ் கட்டணங்களால் கிளிநொச்சி மக்கள் தவிப்பு

பூநகரி,ஓக.23

ஏ-9 வீதியூடாக பயணிகள் சேவையில் ஈடுபடும் யாழ்-கொழும்பு, யாழ்ப்பாணம் - வவுனியா பஸ்களும் ஏனைய நீண்ட தூர பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்களும் ஒழுங்கான வகையில் கட்டணங்களை அறவிடுவதில்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் இந்த பஸ்கள் கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து [illegible] செல்லும் பயணிகளிடம் இருந்து கூடுதலான கட்டணத்தைப் பெறுகின்றனர்.

தற்போதுதான் மீளக்குடியமர்ந்து தமது வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில் இவ்வாறான கட்டண அறவீடுகள் தம்மைப் பாதிப்பதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சில தனியார் பஸ்களின் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து உரியவர்கள் உடனடி நடவடிக்கைகளைஎடுக்கவேண்டும் - என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (6-432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரம் பார்ப்பதாகக் கூறி திருடிச் செல்லும் கூட்டத்தினர்

யாழ்ப்பாணம், ஓக.23

சாஸ்திரம் பார்ப்பதாகக் கூறி வீடுகளுக்குள் நுழைந்து வீட்டுக்காரரை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கும் கும்பல் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடமாடி வருகின்றது.

இந்த ஏமாற்றுப் பேர்வழிகளிடம் மக்களை விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் மலையகப் பகுதிகளில் இருந்து வருகை தந்திருக்கும் இந்தப் பெண்கள் கிளி ஜோசியம் மற்றும் கைரேகை பார்ப்பதாகக்கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இந்த ஏமாற்று பேர்வழிகள் நல்லூர் ஆலயச் சுற்றாடலில் காணப்படுவதோடு குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் நடமாடி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (6-26)

## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 49
திகதி - 21.08.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: T | அதிர்ஷ்ட இலக்கம்: 08 | வெற்றி இலக்கம்: 5 3 8 8 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T 08 5 3 8 8 9 | ரூ. 15,672,809.00 | - |
| 1 பரிசு | 08 5 3 8 8 9 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 5 3 8 8 9 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 3 8 8 9 | ரூ. 10,000.00 | 26 |
| 4 பரிசு | 8 8 9 | ரூ. 1,000.00 | 237 |
| 5 பரிசு | 8 9 | ரூ. 50.00 | 2330 |
| 6 பரிசு | 9 | ரூ. 20.00 | 22465 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 5 3 8 8 | ரூ. 1,000.00 | 23 |
| 8 பரிசு | 5 3 8 | ரூ. 100.00 | 233 |
| 9 பரிசு | 5 3 | ரூ. 50.00 | 2366 |
| 10 பரிசு | T | ரூ. 20.00 | 9270 |
| 11 பரிசு | T 08 | ரூ. 100.00 | 1042 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,717,000.00

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ. 16,050,550.00

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1218 சிவப்பு

32 41 52 54 — 20-08-2010

கன்னி

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 222,693 | 20/- | 4,453,860/- |
| 2 இலக்கங்கள் | 20,538 | 40/- | 821,520/- |
| 1 இல. + லக்கினம் | 20,262 | 60/- | 1,215,720/- |
| 2 இல. + லக்கினம் | 1,827 | 200/- | 365,400/- |
| 3 இலக்கங்கள் | 547 | 1000/- | 547,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 10,000/- | 560,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 10,363,500/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 606 | | 601,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 266,532 | | 10,965,000/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

13 16 35 53 — ஜக்பொட் பரிசு ரூபா. 1,200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 603 | 500/- | 301,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 606 | | 601,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,300,000/-

## நீங்கி விடாத நினைவலைகள்

6ஆம் ஆண்டு | 5ஆம் ஆண்டு







அமரர் கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
தோற்றம்: 29.03.1938
மறைவு: 29.08.2004

அமரர் தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை
தோற்றம்: 29.12.1946
மறைவு: 13.09.2005

எங்கள் குடும்ப விளக்குகள் அணைந்தாலும் - எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும்!

அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (102228)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

## வீடு, வளவு விற்பனைக்கு

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4 பரப்பு 7குழி, 3 அறைகள், சாப்பாட்டு அறை, சமயலறை, சுற்று மதில் போன்ற வசதிகள் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0717553524 (102153)

## வீடு,கடை வாடகைக்கு

NO-321,கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில்) அமைந்துள்ள மேல்மாடி வீடும் இரண்டு கடையும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-
0212223479, 0215670313

## காணி விற்பனைக்கு

தேவாலய வீதி, சங்கானையில் கிணற்றுடன் கூடிய 9பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விலை 32 லட்சம்.
தொடர்பு:-
0777473912,0777563041

## விற்பனையாகிறது

G.C.E (A/L)-2011 மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்ப (GIT) பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்- விடைகளுடன் விற்பனையாகின்றன.
விலை: ரூபா 50/=
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ்.மாவட்டத்தில்
வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:- 0773144612 , 0775792726


கத்தி.
கரண்டி
குறைந்த
விலையில்



டைட்டஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை லிபர்ட்டி ப்ளாஸா
2439422


## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஓக.23

மோட்டார் சைக்கிளில் சென்றவரின் கையைப் பிடித்துக்கொண்டு சைக்கிளில் சென்ற இளைஞர் பள்ளத்தில் சில்லு இறங்கியதில் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

இச்சம்பவம் அல்லாரையில் இடம் பெற்றது.

அதேஇடத்தைச் சேர்ந்த கே.சோபிகன் (வயது 18) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை சைக்கிளில் வந்த மாணவியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவியொருவர் காயமடைந்தார். சம்பவம் புத்தூர் சந்தியில் இடம் பெற்றது.

காயமடைந்த என். நிரோஜா (வயது 15) என்பவரும் சாவகச்சேரி வைத்திசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். (6-207)

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 563
திகதி 2010/08/21

சுப்பர் இலக்கம்: 07
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 13 34 44 55

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பிரி பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 29,161,725.60 வீதிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீதிதம் | — |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீதிதம் | 05 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதிதம் | 217 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீதிதம் | 453 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீதிதம் | 10,676 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதிதம் | 6,144 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதிதம் | 154,584 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதிதம் | 24,690 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 6,035,840.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 29,809,345.60

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல 2149 திகதி 21-08-2010

ஆங்கில எழுத்திற்கும் V

வெற்றி எண்கள்: 19 24 44 58 | போனஸ் இல: 22

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 172450 | 20/- | 3,449,000/- |
| 2 இல | 12260 | 100/- | 1,226,000/- |
| 3 இல | 257 | 1,000/- | 257,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6880 | 40/- | 275,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 509 | 1,000/- | 509,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,000,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 8194 | 100/- | 819,400/- |
| 2 இல + போனஸ் இல | 376 | 500/- | 188,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 331 | 200/- | 66,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,333,800/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 201300 | | 8,933,800/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 302238564-6-30 |
| மொணராகலை | 302234734-6-26 |
| மாத்தறை | 302234869-6-45 |
| காலி | 302242690-8-19 |
| யாழ்ப்பாணம் | 302253590-3-13 |
| நுவரேலியா | 302236365-7-34 |
| கொழும்பு | 302241217-8-42 |
| கேகாலை | 302238923-9-16 |
| அனுராதபுரம் | 302239338-2-27 |
| கம்பஹா | 302238226-4-42 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 10,470,400/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை

## மஹஜன சம்பத Mahajana Sampatha

20.08.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2281

வெற்றி எழுத்து: A | வெற்றி எண்கள்: 4 8 6 8 9 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A 4 8 6 8 9 2 | ரூபா. 18,899,084/= | - |
| 1 பரிசுகள் | 4 8 6 8 9 2 | ரூபா. 2,000,000/= | 02 |
| 2 பரிசுகள் | 8 6 8 9 2 | ரூபா. 100,000/= | 14 |
| 3 பரிசுகள் | 6 8 9 2 | ரூபா. 10,000/= | 133 |
| 4 பரிசுகள் | 8 9 2 | ரூபா. 1,000/= | 1346 |
| 5 பரிசுகள் | 9 2 | ரூபா. 100/= | 13342 |
| 6 பரிசுகள் | 2 | ரூபா. 20/= | 132182 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு


| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 4 8 6 8 9 | ரூபா. 10,000/= | 14 |
| 8 பரிசுகள் | 4 8 6 8 | ரூபா. 1,000/= | 136 |
| 9 பரிசுகள் | 4 8 6 | ரூபா. 100/= | 1306 |
| 10 பரிசுகள் | 4 8 | ரூபா. 50/= | 13235 |
| 11 பரிசுகள் | A | ரூபா. 20/= | 52737 |

Rs. 14,176,930.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய

# தேர்த் திருவிழா சிறப்புமலர் - 23.08.2010

## ஆலய வரலாறு

சீரும் திருவும் பொலியும் புண்ணிய பூமியாகிய இலங்கை மணித்திருநாட்டின் மகுடமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் முருகவழிபாடு தமிழரசர்கள் ஆட்சிக் காலத்திலேயே சிறப்புற்று விளங்கியுள்ளது. சைவ மணங்கமழும் யாழ்நகரின் வடபால் இரண்டு மைல் தொலைவில் கொக்குவில்பதியில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் வள்ளி தெய்வயானை சமேதராகச் சுப்பிரமணியப் பெருமான் வீற்றிருந்து மக்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றார்.

கொக்குவில் கிராமத்தில் ''மஞ்சமருதிக்காடு'' என்ற இடப் பெயருடை குறிச்சி ஒன்று காணப்பட்டது. அவ்விடம் மேட்டு நிலமாகவும், மருதமரங்கள் வானளாவ நிறைந்த சோலையாகவும் அங்கு அம்பலவாண விநாயகமூர்த்தி என்ற பெயருடைய ஆலயமும் இருந்தது. தற்போது பரிவார மூர்த்தியாகிய விநாயகர் ஆலயம் இருக்கும் இடத்தில் இருந்த அந்த விநாயகர் 'மஞ்சமூர்த்தி' என அழைக்கப்பட்டு தற்போது மஞ்சவனப்பதி முருகனாக கர்ப்பக்கிருகத்தில் வள்ளி தெய்வயானை சமேதராக சுப்பிரமணிய பெருமான் வீற்று இருக்கிறார் என கர்ணபரம்பரைக் கதையாகக் கூறப்பட்டு வருகின்றது.

அங்கு அவ்வாலயமும் அதற்கு முன் ஒரு கொட்டகையும் அமைக்கப்பட்டிருந்தன. இவை யாவும் ஓலையால் வேயப்பட்டனவாகவும் தரை சாணகத்தால் மெழுகப்பட்டும் வந்ததுடன் அந்தண பரம்பரையைச் சாராத சைவமரபில் வந்த ஒருவரினால் ஒருவேளை பூசையும் இடம்பெற்று வந்தது. இவ்வாறு மடாலயமாக இருந்த இவ்வாலயம் 1817 கற்கோயிலாக அமைக்கப்பட்டதுடன் அந்தணமரபில் வந்தவர்களே நித்திய நைமித்திய கிரியைகளை மேற்கொண்டு வரலாயினர். ஆரம்பத்தில் சிவஸ்ரீ சின்னப்பா ஐயர் தொடக்கம் அவர்களது பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிலா விக்கிரகங்களும் மற்றும் உற்சவ மூர்த்திகள், அவற்றுக்கான சந்நிதிகளும் முருகன் அடியார்களினால் உபயம் செய்யப்பட்டு வருகின்றது. காலத்திற்குக் காலம் நிர்வாக சபை, திருப்பணிச்சபை தெரிவு செய்யப்பட்டு அவர்கள் தமது சிறந்த பங்களிப்பினை செலுத்தி ஆலயத்தை திருத்தியும், அமைத்தும் கும்பாபிஷேகங்களை நிகழ்த்தி இறையருளை வளர்த்து வருகின்றார்கள்.

இந்துப் பண்பாட்டு மரபில் கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இசைக்கலை எனும் நுண்கலைகள் கோயில்களை நிலைக்களனாகக் கொண்டு திகழ்கின்றன. ஆலயங்கள் ஆண்டவனின் அருள் சுரக்குமிடம் மட்டுமல்லாது நுண்கலைகளின் உறைவிடங்களாகவும் திகழ்கின்றன. இவ்வாலயத்தில் ஆகம முறைப்படி திராவிட பாணியில் கர்ப்பக்கிருகமும் ஏனைய பரிவார மூர்த்திகளது ஆலயமும், கிழக்கே பஞ்ச தளங்களைக் உடைய கோபுரமும் அதற்கு இருமருங்கிலும் மணிக்கூட்டு கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

புண்ணியவான்களின் கால்பதிந்து அருளுரை நிகழ்த்திய பெருமையும் இவ்வாலயத்திற்குரியதாகும். அந்த வரிசையில் திருமுருக கிருபானந்த வாரியார், செல்லத்துரை, குமாரசுவாமிப்புலவர், மணி ஐயர் எனப்பட்ட சுவாமிநாத தம்பிரான் போன்ற மகான்கள் வந்து இறைவனின் பெருமைகளை பிரசங்க வாயிலாக எடுத்துரைத்ததுடன், புராண படனங்களும் இடம்பெற்று வந்துள்ளன.

தூல லிங்கமாகிய கோபுரத்தை தரிசித்தே சூக்கும லிங்கமாகிய இறைவனை தரிசித்தல் வேண்டும் என்ற நோக்கில் பஞ்சதள கோபுரம் அமைக்கப்பட்டு உள்ளது. அதில் கந்தபுராண, பெரியபுராண கதைகளை சித்திரிக்கும் வள்ளி திருமணம், சுந்தரர் கைலைக்கு செல்லும் காட்சி, நாயன்மார்கள், முருகன் சிவனுக்கு உபதேசம் போன்ற காட்சிகள் கலை அம்சத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவற்றுடன் தேரில் காணப்படும் சிற்பங்கள் மற்றும் விமானங்களில் காணப்படும் சிற்பங்களும் இறைவனது அற்புதங்களை எடுத்து இயம்புவனவாக உள்ளன.

ஆலயங்கள் வழிபடுவோனையும் இறைவனையும் இணைக்கின்ற பக்தி நிலையங்களாக அமைந்ததோடு அவை இந்துக்களது வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையனவாகவும் உள்ளன. அடியவர்களும் தம்மால் இயன்ற பணிகளையும் வளங்களையும் ஆலய சேவைக்கு வழங்கியுள்ளனர். அதாவது திருவிழாக்கள் செய்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், அன்னதானம் வழங்கல், நந்தவனம் அமைத்தல் போன்றவையாகும்.

எமது இந்துப் பண்பாட்டின் உறைவிடம் ஆலயம். சமுதாய வாழ்வில் ஆலயம் இன்றியமையாத தொன்றாகும். இந்துப்பண்பாட்டினை வளம்படுத்தி உள்ள ஆலயங்கள் ஒவ்வொரு ஊரின் மத்தியிலும் அமைந்து அங்கள்ள சகல வாழ்வினரின் உயிர்நாடியாக விளங்குகின்றது. எத்தனையோ பிறவிகள் ஈட்டிய புண்ணியத்தை ஒரு கோயிலை அண்டி வாழும்போது தான் கிடைக்கின்றது. இப்பேற்றினை வளர்த்துக் கொள்வதே மானிடப் பிறப்பின் நோக்கமாகும்.

### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் மஞ்சவனப்பதி எனும் திவ்விய நாமத்துடன் விளங்கும் முருகப்பெருமான் இன்று தேர் ஏறி அருள் பாலிக்கும் இவ்வேளையில் இச்சித்திரத் தேரானது யாழ்ப்பாணத்தின் சிறப்பு வாய்ந்ததும் முருகன் ஆலயத்தில் பழமை வாய்ந்ததுமான இந்த ஆலயத்தின் இன்று வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமான் தேரேறி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த இரதோற்சவத்தை காணும் அடியவர்களுக்கு சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு கிடைக்கவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்க எல்லாம் வல்ல கலியுக வரதன் கந்தவேள் பெருமானின் ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றேம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சிவப்பிரம்மஸ்ரீ: ஈசான் சிவாச்சாரியார்
சொ.இ.விக்னேஸ்வரக்குருக்கள்,
ஆலய பிரதம சிவாச்சாரியாரும்
மகோற்சவ குருவும்.

### தர்மகர்த்தா சபையின் செய்தி

மஞ்சவனப்பதி வாழும் வரமணியே!
தஞ்சமென நின்பால் சரணடைந்தேன் - செஞ்சொல்
குணபதியே! ஞானக்குருபரனே! செல்லக்
கணபதியே! காப்பாய் கனிந்து!.

அழகிய சித்திரத்தேரில் ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுதலைத் தந்து தேச நலன் காக்க மஞ்சவனப்பதியான் இன்று தேர் ஏறிவருகின்ற காட்சி அமைகின்றது.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய மிகச் சிறந்த இராசோபசாரமாகும். மூன்று திருத்தேர்களிலும் விநாயகரும், முருகனும், சண்டேஸ்வரபெருமானும் அமர்ந்து அசைந்தாடிச் செல்லும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். இக்காட்சியைக் கண்டு இன்புறும் அடியவர்கள் காலாகாலமாக தமிழ்மக்கள் எதிர்பார்த்திருக்கும் அமைதியையே எம்பெருமானிடம் வேண்டி நிற்பர். அவ்வேண்டுதலை நாமும் வேண்டி இறைஞ்சுகிறோம் மஞ்சவனப்பதியானை.

கா.பாலசுப்பிரமணியம் - தலைவர்.
இ.இராசலிங்கம் - செயலாளர்.

## புள்ளி மயிலோனே முருகா சரணம்! வள்ளி மணாளனே முருகா சரணம்!!

AHUJA
ஒலிபெருக்கி சாதனங்கள் விற்பனையாளர்
கோபுரம் சவுண்ட்ஸ்
இல.38, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

போகா, டுபாய் அலுமினியம் பிற்றிங்கில் அனுபவமுள்ளவர்களினால் சிறந்த முறையில்வடிவமைத்துக்கொடுக்கப்படும்
சீலன் அலுமினியம் பிற்றிங்
இல.54, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி.
தொ.பே: 0214902561, 0789119220.

வீட்டுப் பாவனைப் பொருள்கள், அழகுசாதனப்பொருள்கள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
யாழ்ரன் மல்ரி சென்ரர்
இல.48, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4405

Browsing, Photo copy, Fax, Net call, Vedio Call, Computer Typing மற்றும் பல சேவைகள்
ஹரிணி
இன்டநெற் கபே
கே.கே.எஸ்.வீதி கொக்குவில்.

22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
சாரங்கா நகைமாடம்
157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.மண்ணில் நகைகளின் அரசி
செல்வி நகையகம்
ஸ்ரீ நதியா கட்டடத் தொகுதி
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9441

சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
கரன் வோர்ச் அன் ரேடியோ
திருத்துனரும் விற்பனையாளரும்
இல.91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பல டிசைன்களில் உங்கள் ஆபரணங்களைப் பெற்றுக்கொள்ள
மகாநதி ஜூவலறி
72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

றமணன்
கட்டடப்பொருள் விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9296

பரணி கிறீம் ஹவுஸ்
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி.

ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்து வகை றெடிமேட் ஆடைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்
176, 258, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.மண்ணிலே ரீவிகளின் சாம்ராஜ்யம்
மதன்
ரீவி விற்பனை நிலையம்
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சன் ஜெய உணவகம்
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி.
தொ.பே: 021 5106445

[illegible] தேநீரகம்
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

கோயிலுக்குத் தேவையான அபிசேகப் பொருள்கள், அர்ச்சனைப் பொருள்களை ஒரே கூரையின் கீழ்பெற்றுக்கொள்ள
தஜேந்தினி வெற்றிலைக் கடை
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஓகஸ்ட் 23 முதல் ஓகஸ்ட் 28 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் வேலை நெருக்கடிகள் இருந்தாலும், எதையும் நிறுத்தி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். மனக்குழப்பம், தடுமாற்றம், வீண் அலைச்சல், காரியத்தடை, உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறைதல் போன்ற பலன்களைக் காணலாம். எதிர்பாராத செலவுகளும் நேரும். எதிர்ப்புகள், போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம். உத்தியோகம், தொழில், நிலம், பூமி மற்றும் கட்டட பணி தொடர்பான விடயங்கள், தொழிலாளர்களை வைத்து செய்யும் வேலைகள் போன்றவற்றால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். வழக்கு விவகாரங்களிலும் சாதகமான நிலைமை காணப்படும். சுக்கிரன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், மனைவி வழியில் உடல் நலக்குறைவுகள் ஏற்பட்டு செலவுகளை உண்டாக்கலாம். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் குறை சொல்லி வாக்குவாதங்களில் ஈடுபடுவதால் மன அமைதி பாதிக்கப்படலாம்.புதன், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்களில் அல்லல்கள், சிரமங்கள் தொடரும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். ஆன்மிக நாட்டம் உண்டாகும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழ வாய்ப்பு உண்டு.

### இடபம்

இந்த வாரம் எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பொருள்கள் சேரும். சில காரியங்களுக்கான முன்னேற்பாடுகளை செய்து கொள்வீர்கள். சில வேலைகள் சிரமம் இல்லாமல் சுலபமாக முடிவதால் சந்தோஷம் அடைவீர்கள். ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். மற்றவர்களின் குதர்க்கமான செயல்பாட்டை பொறுக்க முடியாமல் எரிந்து விழுந்து, எடுத்ததற்கு எல்லாம் கோபம் அடைவது, சூடான வாக்குவாதங்களில் ஈடுபடுவது, பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்பு, நெருக்கடிகளுக்கு ஆளாவது, கடும் வேலைப்பளு, முடிவுகள் எடுக்க முடியாமல் தவிப்பது, வழக்கு மற்றும் கடன் விவகாரங்களில் சிக்கல் போன்ற சாதகமற்ற பலன்களைக் காணலாம். இருந்தாலும், அவற்றை சமாளிக்கும் வல்லமை அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் அவ்வப்போது நிம்மதி அடைவீர்கள். அரசியல், மருத்துவம், அதிகாரிகள், அரசியல்வாதிகள், தந்தை தொடர்பானவை எல்லாம் எதிர்பார்த்த வேகத்திற்கு முடியாமல் இழுத்தடிக்கலாம். அலைய வைக்கலாம். பலவிதமான யோசனைகளால் மனம் அலைபாயும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். திடீர் செலவு நேரும்.

### மிதுனம்

இந்த வாரம் தடுமாற்றங்களால் சில விடயங்களில் தீர்க்கமான முடிவுக்கு வர முடியாமல் தவிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகள் நேரும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணம் வரலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள், நண்பர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். எதிர்பாராத சிலர் உங்களைச் சந்திக்க வரலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். ஆரோக்கியத்தில் குறைபாடு ஏற்பட்டு, அவதிப்படலாம். ஏதாவது சிறு சிறு பிணி, பீடைகள் அவ்வப்போது ஆள்கொள்ளலாம். உத்தியோகம், விவசாயம், வர்த்தகம் போன்ற ஜீவன காரியங்களில் பாடுபடும் அளவுக்கு பலன் இருக்காது. திட்டமிட்ட வேலைகளும் நினைத்தபடி முடியாமல் இழுத்தடிக்கலாம். எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்கள், கடன் விவகாரங்கள் போன்றவற்றால் கவலைகள் உண்டாகும். அரசு தொடர்பான காரியங்களில் முன்னேற்றம் உண்டு. தந்தையின் ஆதரவு, உதவி கிடைக்கலாம். அரசியல்வாதிகள் சந்திப்பால் மகிழ்ச்சி, அவர்களால் காரியம் நடத்தல் போன்றவை நிகழும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். ஆடை, ஆபரணம் வாங்கலாம்.

### கடகம்

இந்த வாரம் நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் சொன்ன வேலை மற்றும் உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே செய்யலாம். உல்லாசமாகப் பேசி சில விடயங்களில் வம்பில் மாட்டுவீர்கள்.தொழில், உத்தியோகம், விவசாயம் போன்றவற்றில் அபிவிருத்தி காணப்படும். பொலிஸ் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக முடியும். எந்த வேலைகளையும் பின்னர் பார்க்கலாம் என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். எந்த விடயத்திலும் தைரியமாக இறங்கும் வல்லமை அதிகரிக்கும். உங்களின் முயற்சிகளுக்கு மற்றவர்களின் ஆதரவு கிடைக்கும். சகோதர பாசம் மேலிடும். அவர்களுக்காக சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள், உறவுப் பெண்கள் சந்திப்பு போன்றவற்றால் இனிய அனுபவங்களைப் பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். அவர்களுடன் ஏற்பட்ட கோபதாபங்கள் விலகும். மாற்று மதத்தினரால் அனுகூலம் பெறலாம். பணவரவுகளைப் பெறலாம். பல நாள்களாக பார்க்காத சிலரை பார்க்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும்.

### சிங்கம்

இந்த வாரம் தெம்பு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பலன் தரக்கூடிய சில காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியாக எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்களுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். வேலை நெருக்கடி அதிகரிக்கும். பணத்தட்டுப்பாடு, கொடுக்கல் வாங்கல்களில் சிரமங்கள், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் தவித்தல், குடும்பச் செலவுகள் அதிகரிப்பு, மற்றவர்கள் மனம் புண்படும் வகையில் கடுமையாக பேசுதல், கடன் பிரச்சினைகளை நினைத்து கவலை அடைவது போன்ற பலன்களைக் காணலாம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களிலும் எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் கிடைக்காமல் அதிருப்திக்கு ஆள்ாகலாம். சற்று ஆறுதலான அனுபவங்களை அவ்வப்போது பெறலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். பொறுமையை குறைக்கும் நிகழ்ச்சிக்ள் அவ்வப்போது நடக்கும். வெப்ப நோய்களால் அவதிப்படும் சூழ்நிலையும் உருவாகும். மாமன், மைத்துனர்களாலும் பெரிய அளவில் நன்மை கிடைக்க வாய்ப்பு இல்லை. வீண் அலைச்சல், உடல் உபாதை, தண்டச் செலவு போன்றவற்றைச் சந்திக்கலாம்.

### கன்னி

இந்த வாரம் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். நடக்காத சில விடயங்களை நினைத்து கவலை, கலக்கம் அடைவீர்கள். வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி, பொருள் உதவி கிடைக்கலாம். ஆசைப்பட்ட ஒன்று நடப்பதால், மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். உருப்படியான சில காரியங்களைச் செய்வீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், பெற்றோர், உறவினர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் மருத்துவ சிகிச்சைகள் போன்ற வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். புரிவோருக்கு அலைச்சல் இருக்குமே அன்றி, அதற்கேற்ற ஆதாயம் கிடைக்காது.ஜென்மத்தில் செவ்வாய், சனி இருப்பதால், உத்தியோகம், விவசாயம், வர்த்தகம் போன்ற ஜீவன காரிய விஷயங்களில் இடர்பாடுகள், தொந்தரவுகள் அதிகம். வேலையாட்களை வைத்து தொழில் செய்வோர் அவர்கள் சரியானபடி பணிக்கு வராததால், குறிப்பிட்ட நேரத்திற்கு வேலைகளை முடித்துக் கொடுக்க முடியாமல் அவதிப்படலாம். பணிபுரிவோர் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு, அதிருப்திக்கு ஆளாகலாம். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சங்கடங்களையும் எதிர்கொள்ள நேரிடலாம். இருந்தாலும், சுக்கிரன் ஜென்மத்தில் இருப்பதால், பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், இனிய பயணங்கள் போன்றவற்றால் ஆறுதல் அடைவீர்கள். அலைச்சல், திரிச்சல் உண்டு. உறவால் சிரமம் நேரும்.

### துலாம்

இந்த வாரம் ஆறுதலான, மாறுதலான அனுபவங்களை எதிர்கொள்வீர்கள். மற்றவர்கள் மத்தியில் உங்களை முன்னிலைப்படுத்திக் கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். செய்ய மறந்த சில காரியங்களால் அவதிப்படலாம். கடன்மிகுதிகள், கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகள் நேரும். அரசு தொடர்பான காரியங்கள் எல்லாம் விறுவிறுவென முடிவுக்கு வரும். அதிகாரிகள் உதவிகரமாக இருப்பர். மருத்துவ சிகிச்சைகள் பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் எதிர்பார்த்த நேரத்தில் உதவி செய்வதால் மனதில் உற்சாகம், தன்னம்பிக்கை குடிகொள்ளும். விரய ஸ்தானத்தில் செவ்வாய், சனி, சுக்கிரன் இருப்பதால், சட்டம், நீதிமன்றம், பொலிஸ் தொடர்பான விடயங்கள், வேலையாள்கள், கட்டட பணிகள், நிலம், பூமி தொடர்பான விடயங்கள், உறவுப் பெண்கள், சகோதரிகள், நீண்ட தூர பயணங்கள், போன்ற வழிகளில் செலவுகள் ஏற்படும். மற்றவர்களை நம்பிப் பொறுப்பான வேலைகளையோ அல்லது பணப் பொறுப்புகளையோ ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்குப் பிடித்தமான சில பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம்.

### விருச்சிகம்

இந்த வாரம் ஒன்றுக்கு இரு மடங்காகச் சில வேலைகளுக்காகச் செலவிடலாம். தர்ம, புண்ணிய காரியங்களில், ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். ஒரு காரியத்திற்காகச் சேமித்த பணத்தை மற்றொரு காரியத்திற்காகச் செலவிடலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த சிலரைத் திடீரெனச் சந்திக்கலாம். பணவரவுகளைப் பெறலாம். சனி, செவ்வாய், சுக்கிரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், உழைப்பையும், தொழிலையும், சூழ்நிலையையும் உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆதாயம் பெறுவீர்கள். தொழில் செய்வோர் புதிய இயந்திரங்கள், மின் சாதனங்கள் வாங்க போட்ட திட்டம் நிறைவேறும். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்களும் வாங்கலாம். தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடுவீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பழைய கடன்களை, குறைந்த வட்டிக்குப் புதிய கடன்கள் வாங்கிச் சமாளிப்பீர்கள். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போர் கூடுதல் வருமானம் பெறுவர். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். அரசுப் பணியில் உள்ளவர்களின், அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் உருவாகும். விருந்தினர்கள் வருகையுண்டு. கடன் வாங்கலாம்.

### தனுசு

இந்த வாரம் சந்திரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். சிலர் கேட்ட உதவிக[ளை] மறுக்காமல் செய்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கல[ாம்]. செலவு, அலைச்சல் உண்டு. சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் சில செய்திகளைக் கேட்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிலருடன் காரசாரமான விவாதங்களில் ஈடுபடலாம். காரிய ஸ்தானத்தில் செவ்வாயும், சனியும், சுக்கிரனும் சேர்ந்து சஞ்சரிப்பது நல் லதல்ல. இதனால், எந்தக் காரியத்தையும் சரியாகத் திட்டமிட்டபடி செய்ய முடியாமல் தவிக் கலாம். அப்படியே செய்தாலும், அதில் ஏதாவது எதிர்பாராத பிரச்சினைகள் உருவாகலாம். மற்றவர்களின் குறை, குற்றச்சாட்டு மற்றும் விமர்சனங்களுக்கு ஆளாகலாம். அதனால், மன அமைதி பாதிக்கப்படலாம். பிரச்சினைகளைத் தொடர்ச்சியாகச் சந்திக்கும் போது தன் னம்பிக்கையை இழந்து அவநம்பிக்கை அதிகரிக்கும். சட்டம்,பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பெண்கள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சூரியன், புதன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான வகையிலும் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை. சந்திரன் ஜென்ம ராசியில் சஞ்சரிப்பதால், காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

### மகரம்

இந்த வாரம் தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். தம்பதியர் இடையே பாசம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். சந்திரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளைப் பெறலாம். விருந்து, விசேடங்களுக்காக, பொழுது போக்கு விடயங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். அடமானம் வைத்த பொருள்களை மீட்கலாம்.அஷ்டம ராசியில் சூரியன் இருப்பதால், அரசாங்கம், அதிகாரிகள், அரசியல்வாதிகள், தந்தை தொடர்பான விடயங்க[ளில்] அலைக்கழிப்புகள், சிரமங்கள் தொடரும். அரசியல் தொடர்புடையவர்கள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மருத்துவ காரியங்களும் திருப்திகரமாக இருக்காது. புதன் சாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் உதவிகள் கிடைக்கலாம். அவர்கள் கேட்ட உதவிகளையும் நீங்கள் செய்வீர்கள். ஏஜன்சி தொழில் புரிவோருக்கு திடீர் வருவாய் கிடைக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். விரய ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் வந்த வேகத்தில் பணம் கரைந்து கொண்டிருக்கும். பெண்கள் வழியில் உதவிகள் கிடைத்தல் மற்றும் பொழுது போக்கு விடயங்கள், பயணங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரர்கள், நிலம், பூமி தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். அலைச்சல், திரிச்சல் உண்டு. சோர்வு, சோம்பல் அதிகரிக்கும்.

### கும்பம்

இந்த வாரம் ஒரு காரியத்திற்காகக் கணிசமான தொகையைச் செலவு செய்யலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். புதியவர்கள் சந்திப்பு நிகழும். சந்திரன் காரிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதையும் சரியான வகையில் திட்டமிட்டுச் செய்து மற்றவர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். சந்தோஷமான அனுபவம் பெறலாம். எட்டாம் இடத்தில் சனி, செவ்வாய் இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் தடை, பின்னடைவு, சிரமம், எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் இல்லாமல் குறைவாகக் கிடைத்தல், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாததால், உறவினர்களுடன் மனஸ்தாபம், சகோதர்கள், பங்காளிகளுடனான உறவில் பாதிப்பு, நீதிமன்றம், பொலிஸ் தொடர்பான விடயங்களில் அலைக்கழிப்பு போன்றவை நிகழும். எட்டாம் இடத்தில் சுக்கிரனும் இருப்பதால், எதையும் ஆடம்பரமாகச் செய்வதிலும், செலவழிப்பதிலும் நாட்டம் செல்லும்.ஏழாம் இடத்தில் சூரியன், புதன் இருப்பதும் சரியல்ல. கணவன், மனைவி உறவில் சிறு சிறு உரசல்கள் உருவாகலாம். அரசாங்க காரியங்கள், அரசியல்வாதிகள் மூலம் மேற்கொண்ட முயற்சிகள் முடிவடையாமல் இழுபறியாவதால் தொந்தரவு, ஆதங்கம் போன்றவை உருவாகும். மாற்று மதத்தினர் மற்றும் மாற்று மொழி பேசுவோர் உதவிகரமாக இருப்பர். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உண்டு.

### மீனம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட காரியங்களை மாற்றி அமைத்தல், பயணங்களில் ஏற்படும் தடை, தாமதங்களால் எரிச்சல் அடைதல், காத்திருப்பு, அலைக்கழிப்பு போன்றவற்றை எதிர்கொள்ளலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். முடிந்து விட்டதாக நினைத்த சில பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கி தொந்தரவு கொடுக்கலாம். இதுவரை செல்லாத ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசு காரியங்கள் தடையின்றி நடைபெறும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு அதிகரிக்கும். ஏஜன்சி தொழில் புரிவோர் ஏற்றம் காண்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். களத்திர ஸ்தானத்தில் செவ்வாய், சனி மற்றும் சுக்கிரன் சேர்ந்து இயங்குவது அவ்வளவு நல்லதல்ல. கணவன், மனைவி உறவில் சிக்கல்கள், மனஸ்தாபங்கள், தம்பதியரில் ஒருவருக்கு உடல் நலம் பாதித்து அதனால், மற்றொருவர் சிரமப்படுதல், பெண்கள், சகோதரிகள் வழியில் குற்றம் குறைகளுக்கு ஆளாகுதல், வாகனங்கள் திடீரென பழுதாகி கணிசமான செலவை உருவாக்குதல், வீண் பழிகளுக்கு ஆட்படுதல் போன்ற பலன்களைக் காணலாம். தொழில் புரிவோருக்கு மின் சாதனங்கள் திடீரெனப் பழுதாகிக் கணிசமான செலவை உண்டாக்கலாம். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவுகளைப் பெறலாம். உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை திருவருள்மிகு காளிவயல்

# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோயில்

## புனராவர்த்தன சம்புரோக்ஷண அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ

## மஹா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புமலர் - 23.08.2010

ஈழமணித்திருநாடாம் இலங்கைத்தீவின் யாழ்ப்பாண மாநகரின் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பதியில் வங்கக்கடல் அருகில் வயலும் வயல்சார்ந்த பூமியில் புதுப்பொலிவு காண்கின்ற நல்ல நேரத்தில் காளிவயல் என்னும் பதியில் பலநூற்றாண்டு காலமாக தெய்வீக அருள் பொலிவுடன் வேண்டுவார்க்கு வேண்டிய வரங்கள் நல்கும்வீரகத்தி விநாயகர் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் சர்வ மங்களம் நிறைந்த விகிர்தி வருடம் ஆவணித்திங்கள் 7ம் நாள் 23.08.2010 திங்கட்கிழமை திருவோண நட்சத்திரமும் சதுர்த்தசித் திதியும், சந்திர ஓரையும் அமிர்தசித்தமும் கூடிய காலை 6.03 மணிமுதல் 7.41 மணிவரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அடியார் பெருமக்களாகிய நாம் அனைவரும் சிவாகம பூர்வமாக கும்பாபிஷேக கிரியைகள், மஹாகும்பாபிஷேக தரிசனம் கண்டு ஐங்கரன் திருவருள் பெற்று மண்ணில் நல்லவண்ணம் பெருவாழ்வு வாழ்வோமாக.



காலம் 23.08.2010
திங்கட்கிழமை

## கிரியாகால விவரம்

நேரம் காலை 6.03 முதல்
7.41 வரை

★ 19.08.2010 ஆவணி மாதம் 3ம் நாள் வியாழக்கிழமை பி.பகல் 1.00 மணிக்கு குரு ஓரையில் விநாயக வழிபாடு, கர்மாரம்பம், அனுஞ்ஞை, திரவியபாகம், திரவியசுத்தி, கணபதி ஹோமம், நவக்கிரக மகம் சாந்தி கிரியைகள்.

★ 20.08.2010 ஆவணி மாதம் 4ம் நாள் காலை 9.00மணிக்கு வாஸ்துசாந்தி, கோ பூசை, கங்காதேவி பூசை, ஆதித்தியாக்கினி சங்கிரணம்.

மாலை 6.00மணிமுதல் மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், க்ஷூ ஹோமம், யாத்திராஹோமம், யாகபூசை, பஞ்சகுண்ட அக்கினி விபஜனம், பிரதான கும்பம் யாகசாலை பிரவேசம், ஹோமம், தீபாராதனை, விபூதி பிரசாதம் வழங்கல்.

★ 21.08.2010 ஆவணி மாதம் 5ம் நாள் சனிக்கிழமை விநாயக வழிபாடு, விஷேடசந்தி, யாகபூசை, திரிசத ஹோமம், தீபாராதனை, பஞ்சமுக அஷ்டோத்திர நாம அர்ச்சனை, விபூதிப்பிரசாதம் வழங்கல்.

மாலை 5.00 மணிமுதல் விநாயக வழிபாடு, விஷேடசந்தி, யாகபூசை, சகஸ்திரநாம ஹோமம், தீபாரதனை, பஞ்சமுக அர்ச்சனை, விபூதி பிரசாதம் வழங்கல்.

★ 22.08.2010 ஆவணி மாதம் 6ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மு.ப 6.00 மணிக்கு விநாயக வழிபாடு, விஷேடசந்தி 7.00 முதல் 8.00 மணிவரையுள்ள சுக்கிர ஓரையில் தூபி ஸ்தாபனம், ஹோமவசம், தீபஸ்தாபனம், யந்திர ஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், யாகபூசை, விஷேட திரவிய ஹோமம், தீபாராதனை, விபூதிபிரசாதம் வழங்கல்.

மு.ப 10.00 மணிமுதல் பி.ப 4.00 மணிவரை பக்தர்கள் எம்பெருமானுக்கு எண்ணைக் காப்பு சாத்தலாம்.

பி.ப 3.00 மணிமுதல் விநாயக வழிபாடு விஷேட சந்தி, பிம்பசுத்தி, யாகபூசை, பிம்ப ரட்சாபந்தனம், சாங்கசடத்துவ நியாசம், ஸ்பரிசாகுதி, தீபாரதனை, விபூதி பிரசாதம் வழங்கல், சிவாச்சாரியர் வஸ்திர உபசரணை வழங்கல்.

★ 23.08.2010 ஆவணி மாதம் 7ம் நாள் திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு விநாயக வழிபாடு, யாக பூசை, காயத்திரி ஹோமம், மஹா பூர்ணாகுதி, விஷேட தீபாராதனை பஞ்சமுக அர்ச்சனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், நாத கீத வாத்திய சமர்ப்பணம், அந்தர்பலி, பகிர்பலி, அனந்தகோடி நமஸ்காரம், பிரதான கும்பங்கள் திருவீதிப்பிரதட்சணம் காலை 6.03 முதல் 7.41 வரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம் தொடர்ந்து மஹா கும்பாபிஷேகம் மஹா ஹவிர் நிவேதனம், தேவர்கள் வழிபாட்டுக்காக திருக்கதவம் காப்பிடுதல், யாக உத்வாசனம், கர்பாவரண அபிஷேகம், எஜமான் அபிஷேகம் ஆசியுரைகள் மு.ப 10.00 மணிக்கு மஹா அபிஷேகம், விஷேட பூசை தொடர்ந்து எம்பெருமான் திருவீதியுலா என்பன நடைபெறும்.

## கும்பாபிஷேக குருமார்கள் விவரம்

### ஆலய பிரதம குரு

சிவப்பிரம்மஸ்ரீ செ.பஞ்சாச்சரசர்மா
(மேற்படி தேவஸ்தானம்)

### மூர்த்திபர்கள்

சிவஸ்ரீ இ.பாஸ்கரக்குருக்கள்
(பிரதமகுரு, மடத்துவாசல் பிள்ளையார் ஆலயம், திக்கம்)

சிவஸ்ரீ இ.சேவற்கொடி.போன் குருக்கள்
(பிரதமகுரு, பண்டைகைப் பிள்ளையார் ஆலயம், உடுப்பிட்டி)

சிவஸ்ரீ சி.உருத்திரமூர்த்திக் குருக்கள்
(பிரதமகுரு, பாலாவிப்பிள்ளையார் ஆலயம், மல்லாவி)

சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள்
(பிரதமகுரு, வீரகத்தி விநாயகர் ஆலயம், யாழ்ப்பாணம்)

### கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு

சிவாகம கிரியா கலாநிதி, கிரியாக்கிரம ஜோதி, அருள் ஞானக்கிரியாமணி
சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக் குருக்கள்
(திருவத்தம்பனை தான்தோன்றி விநாயகர் பிரதமகுரு, ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில், உடுப்பிட்டி. வடக்கு கொம்மந்தறை)

### சாதகாசிரியர்கள்

சிவஸ்ரீ ச. போகசம்பந்தக் குருக்கள்
(பிரதமகுரு. மூத்த விநாயகர் ஆலயம், கரணவாய்)

சிவஸ்ரீ பி. பிரதீபன் ஐயா
(பிரதமகுரு, புதுக்குளக்கரை பிள்ளையார் ஆலயம், அல்வாய்)

சிவத்திரு ந. ராகுலன் ஐயா
(பிரதமகுரு, பிள்ளையார் ஆலயம், கல்லுவம்)

### சர்வபோதகாசிரியர்

சிவகாம சித்தாந்த பண்டிதர், சமஸ்கிருத ஜோதிட சிகாமணி
சிவஸ்ரீ த. வேதாரணியக் குருக்கள்
(பிரதமகுரு, மூடி கொற்றை பிள்ளையார் ஆலயம், தம்பசிட்டி)

கிரியாரத்தினம் சோதிடர்
சிவஸ்ரீ பாலபத்மநாதக் குருக்கள்
(பிரதமகுரு, மாரியம்மன் ஆலயம், கெருடாவில்)

### யாக சம்ரட்சகர்கள்

சிவத்திரு ச. பாலஸ்ரீ ஐயா
(கல்லுவம்)

சிவத்திரு மா.சுதன் ஐயா (வரணி)

சிவத்திரு பா.உருத்திரபாலன் ஐயா (வரணி)

சிவத்திரு ச.சத்தியேந்திரன் ஐயா
(பொலிகண்டி)

**விளம்பர அனுசரணை**
க.இராசகோபால்
**இரத்தினா ஸ்ரோர்ஸ்,**
திக்கம், அல்வாய்.

வாழ்த்துரை: கி.கா. கமலநாதன் B.A
(ஆசிரியர், யாழ். [illegible] இந்துக்கல்லூரி)

உபயம்
ஆலய ஆதீனகர்த்தா,
க.இராசகோபால்,
ஆலய பக்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் எதிர்பார்ப்பு எப்போதும்.......

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துமாறு கட்டளையிட வேண்டி நேர்ந்தது.

ஆனாலும், விஜயகுமாரணதுங்கவின் மனைவியான சந்திரிகா ஐ.தே.கட்சியை தோற்கடித்து தம்மால் உருவாக்கப்பட்ட சர்வவல்லமை பொருந்திய நிறைவேற்று ஜனாதிபதி பதவியை கைப்பற்றிக்கொள்வார் என ஜே.ஆர். கனவிலும் கூட ஒருபோதும் கருதியிருக்கவில்லை.

தமக்குப்பின்னர் பிரேமதாஸவும், பிரேமதாஸவுக்குப் பின்னர் லலித் அத்துலத் முதலியும் அவருக்குப் பின்னர் காமினி திஸாநாயக்கவுமே ஐ.தே.கட்சிக்குத் தலைமைதாங்கி, ஐ.தே.கட்சியையே இந்த நாட்டின் அரசியலில் தொடர்ச்சியாக தலைமைத்துவம் தாங்க வைப்பார்கள் என்றே ஜே.ஆர்.உறுதியாக நம்பியிருந்தார். தப்பித்தவறி சுதந்திரக் கட்சி அத்தகையதொரு வாய்ப்பைப் பெறுமானால் அது அனுரா பண்டார நாயக்காவின் தலைமைத்துவத்திலேயே அமையும் எனவும்

ஜே.ஆர்.கணக்கிட்டிருந்தார். உண்மையில் அந்த வேளையில் அனுரா பண்டாரநாயக்கா ஜே.ஆருக்கு மிக நெருக்கமான ஒருவராகவே செயற்பட்டு வந்தார். சுதந்திரக் கட்சியை எப்போதுமே எதிர்க்கட்சியாகச் செயற்படவைக்கும் நோக்கத்துடனேயே ஜே.ஆர். அவ்விதம் அனுரா பண்டாநாயக்காவைத் தம்முடன் மிக நெருக்கமாக்கி வைத்துக்கொண்டிருந்தார். மாறாகத் தம்மால் சிறைக்கு அனுப்பப்பட்ட விஜயகுமாரண துங்கவின் மனைவி சந்திரிகா இந்நாட்டின் ஜனாதிபதியாக ஆவார் என்று ஜே.ஆர். ஒருபோதிலும் நம்பியிருக்கவில்லை.

சந்திரிகா நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசு வழங்க வேண்டிய கொடுப்பனவு குறித்து பேசுவதற்காக நேரம் ஒதுக்கித் தருமாறு அந்தவேளை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜே.ஆர்.கோரிக்கை விடுத்தார். தமது கணவரான விஜய குமாரணதுங்கவைச் சிறையில் அடைத்து தம்மை தனது காலடிக்கு வருவித்த ஜே.ஆரை தாம் தமது காலடிக்கு வரவழைக்கும் சந்தர்ப்பம் ஒன்றுக்காக சந்திரிகா பொறுமையுடன் காத்திருந்தார். அத்தகைய சந்தர்ப்பம் தானாக வந்து அமைந்த அந்த வேளையில் தம்மைச் சந்திக்க தமது இருப்பிடம் தேடிவந்த ஜே.ஆர். தம்பதியினரிடம் தமது கணவருக்கு ஜே.ஆர்.செய்த கொடுமைகளை- முன்னைய சம்பவங்களை ஞாபகமூட்டி குத்திக்காட்டிப் பேச சந்திரிகா மறக்கவில்லை. அவ்விதம் சந்திரிகாவைச் சென்று சந்தித்த பின்னர் அந்தச் சந்திப்பு குறித்து தமது நெருங்கிய நண்பர் ஒருவருக்கு ஜே.ஆர் கீழ் கண்டவாறு தெரிவித்திருந்தார்.'' முன்பொரு சமயம் விஜய குமாரண துங்கவைச் சிறையிலிருந்து விடுவிக்கக்கோரி சந்திரிகா என்னை வந்து சந்தித்தபோது , எனக்கு முன்னால் இந்நாட்டின் எதிர்கால ஜனாதிபதியொருவர் அமர்ந்திருக்கிறார் என்று எண்ணிப்பார்க்கக் கூட நான் நினைத்ததில்லை. உண்மையில் அரசியல் என்பது புதுமையானதொன்றே''

இதேபோன்றுதான் 1978 ஆம் ஆண்டில் புதிய அரசமைப்பொன்றை உருவாக்கியவேளை அது பின்பொரு சமயம் தமது ஐ.தே.கட்சி பிளவுபடக் காரணமாகக் கூடும் என்று கூட ஜே.ஆர் எண்ணிப் பார்த்தாரில்லை. அது தமது ஐ.தே.கட்சியைத் தொடர்ந்தும் பல ஆண்டுகள் காலத்துக்கு ஆட்சி அதிகாரத்தில் வைத்திருக்கும் என நம்பினாரேயொழிய, ஐ.தே.கட்சி தாம் உருவாக்கி வைத்த அரசமைப்புக் காரணமாக தொடர்ச்சியாக எதிர்க்கட்சியாகச் செயற்பட நேரும் என ஜே.ஆர். ஒருபோதும் நம்பினாரில்லை. தாம் உருவாக்கி வைத்த அரசமைப்பே தமது ஐ.தே.கட்சிக்கு நாசம் விளைவிக்கும் என அவர் ஒருபோதும் நம்பினாரில்லை.

ஆனால் புதிய அரசமைப்பொன்றை ஜே.ஆர். உருவாக்கிய அந்த வேளையில் அந்த அரசமைப்பின் எதிர் விளைவுகளுக்கு ஜே.ஆரின் அரசு கூட முகம் கொடுக்க வேண்டிநேரும் என சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டுக் கூறத்தவறவில்லை.

''இந்த அரசமைப்பு நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் இந்த அரசு ஹிட்லர் கடைப்பிடித்த நிர்வாகம் போன்றதொரு நிர்வாகத்தை மேற்கொள்ளவுள்ளது. ஆனால் கடைசியில் ஹிட்லருக்கு நேர்ந்த கதி குறித்து நாம் கவனத்தில் கொள்வோமானால், எந்தவொரு பாஸிஸ வாதச் சட்டங்களாலோ, அல்லது இராணுவப் பலத்தாலோ பொது மக்களது சுதந்திர உணர்வை மழுங்கடித்துவிட இயலாதென்பது தெளிவாகப் புலப்படும். மனிதன் பொறுமையின் எல்லைக்குச் செல்ல நேரும்போதும், துன்பத்தின் உச்சத்தை அனுபவிக்க நேரும்போதும், என்னதான் அடக்குமுறைச் சட்ட விதிகளுடன் கூடிய அரசமைப்பு நிர்வாகத்தை மேற்கொண்டாலும், தர்மோபதேச மந்திரத்தை உச்சாடனம் செய்தாலும் மனித சுதந்திரம் மற்றும் சுயாதீனத்துவத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாவங்களுக்கான எதிர்விளைவுகளிலிருந்து விடுபட இந்த அரசால் ஒருபோதும் இயலாதநிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி தாம் தேசிய அரசப் பேரவையில் நிகழ்த்திய உரையின் போது சிறிமாவோ பண்டார நாயக்கா திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இன்று அதே சிறிமாவோ பண்டார நாயகாவால் அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்று சிறிமாவோ கூறிவைத்த

மேற்குறிப்பிட்ட கருத்தை மனதில் இருத்திச் செயற்படுவாரானால், அவர் தாம் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் கழிக்கும் தமது ஓய்வுக் காலம், ஜே.ஆரின் ஓய்வுக் காலம் போன்று சிரமம்மிக்கதானதாக அல்லாது மகிழ்ச்சிகரமான ஓய்வுக் காலமாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. * * * * *


## திருமண வாழ்த்துக்கள்



மணமகன்
சதீஸ்
[உரிமையாளர், S.K. சூஸ்லான்ட்]
மணமகள்
சோபினி

இன்று (23.08.2010) திங்கட்கிழமை இல்லற பந்தத்தில் இணையும் புதுமணத் தம்பதியினரைப் பதினாறு செல்வங்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.


வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்

இ.சுரேஸ் (ஸ்ரீராம் சில்க்)
இ.கோகிலன் (அபிஷா ரெக்ஸ்)
நவீன சந்தை, சாவகச்சேரி.

## நல்லூர் சைவ மகாசபை நடத்தும் நல்லூர்க் கந்தன் மஹோற்சவ கால "தெய்வீகத் தொடர் இசைப் பேருரை"

நாளை: (24.08.2010) செவ்வாய்க்கிழமை
விடயம்: **"வில்லி பாரதம்"**
நிகழ்த்துபவர்: நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு "கானகதாவாரிதி",முத்தமிழருவி,
பிரம்மஸ்ரீ **சிவ.வை. நித்தியானந்த சர்மா**
வயலின்: **வித்துவான் ஆர்.எஸ்.கேசவமூர்த்தி**
மிருதங்கம்: **வித்துவான் ரி.இராஜன்**
இடம்: **நல்லூர் திருஞானசம்பந்த ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபம்**
**தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெறும்.**
அன்பளிப்பு: சங்கு சக்கரம் சஞ்சீவி பெயின்ற் ஹவுஸ் ஸ்ரான்லி வீதி,பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

## காணவில்லை



உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சொந்த முகவரியாகவும் இல.9, துண்டிச் சந்தி, குருமட ஒழுங்கை, கொழும்புத்துறையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை தர்ஷன் அசோக்குமார் என்பவர் கடந்த 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை பெரியமடு மாதா திருவிழாவுக்கு சென்று இன்னும் வீடு திரும்பவில்லை. இவரது கைத்தொலை பேசியும் செயலிழந்துள்ளதால் இவருடன் தொடர்புகொள்ளவும் முடியவில்லை. தயவுசெய்து இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
**தர்ஷன் அசோக்குமார் மாமா,**
**தொ.பே: 0771768339.**

## 31ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் கந்தையா சதீஷ்குமார்



மலர்வு 23.02.1976 — உதிர்வு 21.07.2010

எங்கள் பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து கடந்த 21.07.2010 அன்று லண்டனில் சிவபதம் அடைந்த எமது மகனின் இறுதிக்கிரியைகளில் கலந்து உதவிகள் புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (23.08.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும்குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி பரமலிங்கம்



(கட்டுவன் பரமு - கார் சாரதி)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சி.பரமலிங்கம் நேற்று (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ரஞ்சினிதேவியின் அன்புக் கணவரும் கஜந்தி, பவித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதீஸ்கரனின் (அவுஸ்ரேலியா) மாமனாரும் நாகம்மா, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் முத்தம்மா (கனடா), கனகம்மா, செல்லம்மா, பாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தருமராசா (அண்ணா தொழிலகம்- இணுவில்), சந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.08.2010) ஞாயிற்றுக் கிழமைநடைபெற்றன.இந்தஅறிவித்தலைஅனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தர்மநாயகம், (மருமகன்).

நடுவிளாத்தி வைரவர் கோயிலடி,
இணுவில் தெற்கு. இணுவில்.

## ஈரவிழிகளுடன் 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### சரவணை தர்சிகா

(அரச குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்)

பிறப்பு 20.06.1983 — இறப்பு 10.07.2010

ஐயொன்பது நாளானால் என்ன
வருடம்தான் கரை புரண்டாலும் எம்
ஈரவிழி காயாதம்மா-நீர்
வரும் பாதை நோக்குகின்றோம்
உம் வதனமுகம் காண வாராயோ
எம் உள்ளத்துயர் தீர்க்க.

கடந்த 10.07.2010 அன்று அகால மரணமடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (23.08.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்ப விளக்கின் மரணச் செய்தி கேட்டு ஆறுதல் கூறி, அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி, துண்டுப் பிரசுரங்கள் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், மேலும் பல வழிகளில் எமக்கு உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

(102333)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் இரு பெரும் கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை

## தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் நிலை

மெல்போர்ன், ஓக. 23

ஆஸ்திரேலியாவில் சனிக்கிழமை (ஒகஸ்ட்,21) நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி, பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் லிபரல் கட்சி ஆகிய இரு கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இத னால் அங்கு தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஏ.பி.சி செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் கடந்த 70 ஆண்டுகளில் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது இதுவே முதல் தடவை என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழவையில் மொத்தம் 150 இடங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்க வேண்டுமானால் 76 இடங்களைக் கைப்பற்றுவது அவசியம். ஆனால் தற்போதைய தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி 68 இடங்களையும், பிரதான எதிர்க்கட் சியான கன்சர்வேடிவ் லிபரல் கட்சி தலை மையிலான கூட்டணி 62 இடங்களையும் கைப்பற்றியுள்ளன எனத் தெரியவந்துள்ளது.



ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தேர்தலில், பிரதமர் பெடரல் லேபர் கட்சியின் ஜூலியா கில்லர்ட், சீபுருக் பாடசாலையில் தனது வாக்களிக்கிறார்.

இதனால் இரு கட்சிகளும் ஆட்சி அமைக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது. தொங்கு நாடாளுமன்றம் ஏற்படவே வாய்ப்புள்ளது என்று கன்சர்வேடிவ் லிபரல் கட் சியைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவர் குறிப்பிட்டார் என்றும் ஏ.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆளும் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவரும், வெளியுறவு அமைச்சருமான ஸ்டீபன் ஸ்மித்தும் தொங்கு நாடாளுமன்றம் ஏற்படவே அதிக வாய்ப்புள்ளது எனக் கூறியுள்ளார் எனறும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் சனிக்கிழமை (ஒகஸ்ட், 21) பொதுத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றது. தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் 7,700 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. வாக்குச் சாவடிகள் அனைத்துக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வாக்குப் பதிவு உள்ளூர் நேரப்படி காலை 8 மணிக்கு தொடங்கியது. பல வாக்குச் சாவடிகளுக்கு மக்கள் அதிகாலையே வந்து விட்டனர். வாக்களிப்பதில் ஆண்களைவிட பெண்கள் அதிக ஆர்வம் காட்டினர். வாக்குப் பதிவு சரியாக 5 மணிக்கு முடிவடைந்தது. இதையடுத்து 6 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கி முடிந்தது.

எனினும் தேர்தல் முடிவை தேர்தல் ஆணையம் இன்னும் அதிகாரபூர்வமாக வெளியிடாமல் நிறுத்தி வைத்துள்ளது. ஆனால் தொழிலாளர் கட்சி 70 இடங்களையும், கன்சர்வேடிவ் லிபரல் கட்சி 72 இடங்களையும் கைப்பற்றியுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன என ஏ.பி.சி செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவால் தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் நிலை ஏற் பட்டுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில் ஆளுங்கட்சியான தொழிலாளர் கட்சியே மீண்டும் வெற்றி வாகை சூடி ஆட்சிப் பீடத்தில் அமரும் என்று அனைத்து தேர்தலுக்கும் முந்தைய கருத்துக் கணிப்பிலும் தெரிவிக்கப்பட்டது.

# இந்தோனேசியாவில் பூகம்பம்!

ஜகர்த்தா, ஓக.23

இந்தோனேசியாவில் சனிக்கிழமை காலை மிதமான பூகம்பம் ஏற்பட்டது. இதன் வீச்சு ரிச்டர் அளவுகோலில் 5.8 அலகாகப் பதிவானது.

ஆனால், பூகம்பத்தின் வீச்சு ரிச்டர் அளவுகோலில் 5.9 அலகாகப் பதிவாகியுள் ளது என அமெரிக்க பூகம்ப ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அசேஹ் மாகாணத்தின் சினாபங் பகுதியில் இப் பூகம்பம் பூமிக்கடியில் 37 கிலோமீற்றர் ஆழத்தில் உருவானது. இதனால் சினாபங் பகுதியில் உள்ள கட்டடங்கள் இலேசாக அசைந்தன. இந்தப் பூகம்பத்தால் உயிரிழப்போ பொருள்சேதமோ இல்லை.

பூகம்பத்தை அடுத்து உடனடியாக ஆழிப்பேரலை அபாய' எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. பூகம்ப அபாயம் அதிகமுள்ள பகுதியில் இந்தோனேசியா அமைந்துள்ளது. இதனால் அங்கு அடிக்கடி பூகம்பம் ஏற்படுவது வழக்கமாகவுள்ளது.

# ஐ.நா. விதித்த தடையை மீறி எரிபொருள் நிரப்புவதில் ஈரான்

புஷேர் (ஈரான்), ஆக. 23

ஐ.நாவின் பொருளாதாரத் தடையையும், அமெரிக்காவின் மிரட்டலையும் மீறி ஈரான் அணு உலையில் எரிபொருளை நிரப்பத் தொடங்கிவிட்டது .

அணு உலையில் எரிபொருளை நிரப்பும் பணியில் ரஷ்யா, ஈரான் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இப்பணி சனிக்கிழமை காலை தொடங்கியது.

யுரேனியம் சேமிப்புக் கிடங்கிலிருந்து 80 தொன் யுரேனியத்தைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து அணு உலையில் நிரப்புகின்றனர். இந்தப் பணி இன்னும் 10 நாள்களுக்கு நடைபெறும்.

யுரேனியத்தை அணு உலையில் நிரப்பத் தொடங்கியுள்ள இந்த நாள் தங்களது நாட்டுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் என்று ஈரானின் அரசியல் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் அணுத் திட்டங்களை வெற்றியுடன் கையாளும் திறமை ஈரானுக்கு உண்டு என்பது சர்வதேச அரங்கில் நிரூபித்துக் காட்டப்பட்டுள்ளது என்றும் அவர்கள் பெருமிதத்துடன் கூறியுள்ளனர்.

ஈரானின் தெற்குப் பகுதியான புஷேர் பகுதியில் ரஷ்யாவின் உதவியுடன் முதல் அணுமின் நிலையத்தை ஈரான் அமைத்து வந்தது. இந்த அணு உலைக்குத் தேவையான யுரேனியம் எரிபொருளை ஈரானே செறிவூட்டியது.

இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. அணு குண்டுகளைத் தயாரிக்கவே ஈரான் யுரேனியத்தை செறிவூட்டுகிறது எனக் குற்றம் சுமத்தியது. யுரேனியம் செறிவூட்டுவதை ஈரான் கைவிட வேண்டும் என்றும் மிரட்டியது.

ஐ.நா.வுக்கு நெருக்குதல் அளித்து ஈரான் மீது தொடர்ந்து பொருளாதாரத் தடை விதிக்க வைத்தது. எனினும் ஐ.நா.வின் இந்த பொருளாதாரத் தடைக்கும், அமெரிக்காவின் மிரட்டலுக்கும் ஈரான் பயப்படவில்லை.

அணு உலையை செயல்படுத்தியே காட்டுவோம் என்று கூறி அதில் இது உறுதியாகவும் இருந்தது. ரஷ்யாவின் உதவியுடன் அணு உலையை வெற்றிக ரமாக நிறுவி முடித்துள்ளது. எரிபொருள் நிரப்பும் பணி முடிவடைந்துவிட்டால் அணு உலை செயற்படத் தொடங்கி விடும்.

அணு உலையில் எரிபொருள் நிரப்பத் தொடங்கியுள்ளது குறித்து ரஷ்யா கூறுகையில், ''ஈரானுக்கான மின்தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் மின் தேவையைப் பூர்த்தி செய்ய இந்த அணு உலை அவசியம்'' என்று கூறியுள்ளது.

அணு உலைக்காக செறிவூட்டும் யுரேனியத்தை அணுகுண்டு தயாரித்தல் உள்ளிட்ட தவறான செயலுக்கு ஈரான் பயன்படுத்தாது என்ற ஆழமான நம்பிக்கை தனக்கு உள்ளது என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

## இஸ்ரேல்-பாலஸ்தீனம் மீண்டும் சமரசப் பேச்சு

வாஷிங்டன், ஓக. 23

இஸ்ரேலும், பலஸ்தீனமும் சமரச பேச்சுகளை மீண்டும் தொடங்க சம்மதித்துள்ளன என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் அடுத்த மாதம் இந்த பேச்சுகள் ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேச்சுக்கான ஏற்பாடுகளை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா செய்து இருக்கிறார். அடுத்த மாதம் 2ஆம் திகதி இந்த பேச்சுகள் ஆரம்பமாகும். ஒரு ஆண்டு காலத்துக்குள் பேச்சுகளில் உடன்பாடு ஏற்பட்டு விடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

# சீன ஆற்றில் வெள்ளம்: 51 ஆயிரம் பேர் மீட்பு

பீஜிங், ஓக.23

சீனாவில் பெய்து வரும் பலத்த மழையால் யாலு ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

ஆற்றின் கரையை உடைத்து டாண்டோங் நகருக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் 230 வீடுகள் சேதமடைந்தன. தொலைத் தொடர்பு சேவை பாதிக்கப்பட்டது. மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது.

டாண்டோங் நகரில் வெள்ளம் பாதித்த பகுதியிலிருந்து 51 ஆயிரம் பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். வெள்ளத்தில் சிக்கிய 3 பேரின் நிலை என்னவென்று தெரிய வில்லை. அவர்களை மீட்புக் குழுவினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

சீனாவில் தொடர்ந்து மழை பெய்து வரு கிறது. வெள்ளிக்கிழமையிலிருந்து மழை தீவிரமடைந்துள்ளது. இதனால் யாலு ஆற்றில் வெள்ளம் கரை புண்டு ஓடுகிறது. மேலும் வெள்ளம் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

யாலு ஆற்றின் கரை மிகவும் பலவீனமாக உள்ளது. அதனால் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் ஊருக்குள் புகும் அபாய நிலையும் உள்ளது. இதனால் கரையை ஒட்டி மணல் மூடைகளை மீட்புக் குழுவினர் அடுக்கி வருகின்றனர்.

பெய்து வரும் பலத்த மழையால் நாட்டின் வடகிழக்குப் பகுதி, மத்திய தென்மேற்கு பகுதி ஆகியவை பாதிக்கப்படும். இப்பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்துக்குத் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது. அதேசமயம் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மக்களுக்கு உடனடியாக உதவுவதற்கான நிவாரணப் பணியையும் சீன அரசு முடுக்கிவிட்டுள்ளது.

# அமெரிக்காவில் வேலையிழந்தோர் எண்ணிக்கை 5 இலட்சமாக உயர்வு

வாஷிங்டன், ஓக. 23

அமெரிக்காவில் ஒகஸ்ட் மாதம் மூன்றாவது வாரத்தில் 12 ஆயிரம் பேர் வேலையிழந்துள்ளனர். இதன் மூலம் வேலையிழந் தோரின் எண்ணிக்கை 5 இலட்சத்தைத் தொட்டுள்ளது.

அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் கொள்கைகளை வகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

வேலையிழந்தோரின் எண்ணிக்கை ஒகஸ்ட் மாதத்தில் 4.75 இலட்சமாக இருக்கும் என முன்னர் கணிக்கப்பட்டது. தற்போது இது 5 இலட்சத்தை எட்டியுள்ளமை கவலையளிக்கிறது.

சிறிய தொழில்களைத் தொடங்க ஊக்குவிப்பதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். இதற்கான கொள்கைகளை அரசு வகுத்து வருகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே இது தொடர்பான மசோதா நாடாளுமன்ற ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது.

ஒகஸ்ட் 14ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் வேலையிழந்தோரின் எண்ணிக்கை 12 ஆயிரமாகும். முந்தைய வாரத்தில் இது 4.88 இலட்சமாக இருந்தது. தொடர்ந்து மூன்றாவது வாரமாக வேலையிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் தொழில்களுக்கு அதிக சலுகை அளிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மீட்சி மிக மெதுவாக இருப்பதால் வேலையிழப்போரின் விகிதம் அதிகரித்துள்ளது. நவம்பர் மாதத்தில் இடைத் தேர்தலை ஜனநாயகக் கட்சி சந்திக்கவுள்ள நிலையில் இப்போதைய வேலையிழப்பு அதிகரிப்பு கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், நாடு முழுவதும் உள்ள சிறு தொழில் அதிபர்களை தாம் சந்தித்துப் பேச உள்ளார் என்றும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு




1408 முட்டைகளுடன்
அடைகாக்கும் மின்
இயந்திரம்
விற்பனைக்காக
உள்ளது

★ ஒருவருட உத்தரவாதம்

தொடர்புகளுக்கு: 0777 172595- 021 7538865


# பொன்சேகா...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி அதனை அவர் உறுதி செய்தார்.

பொன்சேகா காவலில் இருக்கின்றமையால் அவரது பதவி,பட்டங்கள் பறிக்கப் பட்டமை குறித்துப் பிரதிபலிப்பு எதனையும் வெளிப்படுத்த முடிய வில்லை. அவரது மனைவி அனோமாவும் ஜனநாயக தேசிய முன்னணியின் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்கவும் செய்தியாளர் மா நாடொன்றை நடத்தி நீதிமன்றத் தீர்ப்பில் குறைகள் இருப்பதை வெளிப்படுத்தினார்கள்.

கண்டியில் மல்வத்த பீடத்தின் மகா நாயக்கர் வண.திபட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரரை அனோமாவும் டி.என்.ஏ. எம்.பி.யும் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவருமான அர்ஜூனா ரணதுங்க மற்றும் ட்ரான் அல்லஸ் எம்.பி. ஆகியவர்கள் சந்தித்துப் பேசினார்கள். மகாநாயகர் பின்னர் நிருபர்களிடம் பேசியபோது ' போரை முடித்து நாட்டை பிளவுபடுவதிலிருந்து காப்பாற்றியமைக்கான நன்றியறிதலை பொன்சேகா பெற்றுக் கொண்டு விட்டார் " என்று தெரிவித்திருந்தார்.

அடுத்த திங்கட் கிழமை ஜனாதிபதி வண.சுமங்கள தேரருக்கு ரெலிபோனில் தொடர்பு கொண்டு பொது ராணுவ நீதிமன்றம் நியமிக்கப்படு வதற்கு ஏற்பட்ட சூழ்நிலைகள் பற்றி விளக்கமளித்தார்.

அவருக்கு மன்னிப்பு அளிப்பது பற்றி தாம் ஆலோசிக்க முடியும் என்று கூறிய ஜனாதிபதி அதற்கு பொன்சேகா ராணுவ சட்டத்தின் 153 ஆவது பிரிவு விதிக்கு இணங்க தமக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அச் சட்டவிதி குறிப்பிடுவது என்னவெனில் 'இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக ஓர் அதிகாரி அல்லது ராணுவச் சிப்பாய் தாம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதினால் அதனை உறுதிப்படுத்தும் அதிகார பீடத்துக்கு (இங்கு ஜனாதிபதியே பிரதம தளபதியாக இருக்கின்றார்) விண்ணப்ப மனு ஒன்றை தனது கட்டளை தளபதி ஊடாக சமர்ப்பித்தாக வேண்டும் என்பதாகும். (ப)


# திருமுருகன் திருமண மண்டபம் & பல்பொருள் அங்காடி

*கரந்தன் வீதி, நீர்வேலி*
*(நீர்வேலி கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி)*

ஆனைமுகன், ஆறுமுகன்
திருவருளினாலும், உங்கள் அன்பு
ஆதரவுகளாலும் என்றும் மின் லயிற்
வசதிகளுடன் மிகத் திறமாக எமது திருமண
மண்டபம் 5 ஆம் ஆண்டு அகவையில் கால்
பதித்த வேளையில் அன்பர்கள்,
ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
யாவர்க்கும் மனப்பூர்வமான நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

*தொ.பே.இல.*
*021 7201523,*
*0776660211*

உரிமையாளர்,
ந.சிவசுப்பிரமணியம்
(செட்டியார்).


# பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி

| எம்முள் | | சந்நிதியானுள் |
|---|---|---|
| 13 | | 25 |
| ★ | | ★ |
| 06 | | 08 |
| ★ | | ★ |
| 1981 | | 1999 |



## செல்வி திருமகள் கனகசபை

*திதி : சதுர்த்தசி*

அன்புக்கு ஒரு மகளாய் ஆசைக்கு ஒரு அக்காவாய்,
தங்கையாய், எம் குலவிளக்காய் வந்துதித்த திருமகளே!
எம்மை இப் பாழுலகில் தனியே தவிக்கவிட்டு - நீ மட்டும்
நிம்மதியாய் சந்நிதியான் திருவடியில் சேர்ந்ததேனோ....
பத்தோடு ஓராண்டு கடந்ததம்மா - நீ சென்று
நித்தமும் வாடுகின்றோம் உன் திருமுகம் காண்பதற்காய்
உன் ஆத்மா சாந்தியடைய சந்நிதியானைப்
பிரார்த்திக்கின்றோம்.

த.மு.: 125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
நி.மு.: மீசாலை வடக்கு, மீசாலை.

என்றும் உன்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

*(102339)*


# தேவை

1. லொறிச் சாரதி
   (சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்)
2. வீடு பராமரிப்பாளர்
   (யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள்)

TP.No:0789141582


# 18 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் இராசையா நவரத்தினம்

(ஆசிரியர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

*திதி: 23.08.2010*

சந்நிதியான் தேரன்று எமை விட்டுப்பிரிந்த
எம் தெய்வத்தை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ந.நரேந்திரன் (மகன்)
*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

என்றும் உம் நினைவுடன்...
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(102388)

# கண்ணீர் அஞ்சலி



## வைத்தீஸ்வரன் சாரங்கன்

(பழைய மாணவன், யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை (99 A/L),
24 ஆம் அணி மாணவன், மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

நற்றமிழ் மற்றும் பல கலைகள் தேர்ந்து
பெற்றமனம் பெருமையுற மருத்துவ
மாணவனாகி
உற்ற நண்பர், உறவுகள் இன்று கதறியழ
பற்றறுத்து எங்கே நீ பறந்து சென்றுவிட்டாய்

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
பழைய மாணவர்கள்.
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி/570198)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபா இறுதிவரை சரணடையாது சளைக்காது போராடி வீரமரணம் அடைந்தார்

**அரசாங்கத்தின் தடுப்புக் காவலில் உள்ள கே.பி. என்கிற குமரன் பத்மநாதன் வன்னி இறுதி யுத்தத்தின்போது நிகழ்ந்தது என்ன? என்பது பற்றி ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் மூன்றாவதும் இறுதியுமான பகுதி இது.**

பிரபாகரனையும் அவரது குடும்பத்தினரையும் காப்பாற்றும் எனது முயற்சி இறுதியில் ஒரு சோகமான கதையாகவே முடிவு பெற்றது. இவ்வாறு கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் முன்னர் கூறியிருக்கிறார்.



நான் ஏற்கனவே கூறியதன் பிரகாரம் இலங்கைக் கடற்படையினர் எட்ட முடியாத கடற்பரப்பில் கப்பலொன்றை நிறுத்துவதற்கும், இரண்டாம்தரம் ஹெலிகொப்ரர் ஒன்றை உக்ரேன் நிறுவனமொன்றிலிருந்து கொள் வனவு செய்வதற்கும் ஒழுங்குகளை மேற்கொண்டி ருந்தேன்.

பிரபாகரன் எமது திட்டத்திற்குச் சம்மதித்தால் சாள்ஸ் அன்ரனி தவிர்ந்த குடும்ப உறுப்பினர்கள் வெளியே பறந்து செல்வதாகவும், அவர் சம்மதிக்காது விட்டால் அவரையும் அவரது சில மெய்ப்பாதுகாவலர்களையும் சிரேஷ்ட புலி இயக்கத் தலைவர் களையும் ஹெலிகொப்டரில் ஏற்றிச் சென்று காட்டுக்குள் இறக்கி விட்ட பின்னர் ஏனைய குடும்ப உறுப்பினர் களாகிய அவரது மனைவி மதிவதனி, மகள் துவாரகா இளைய மகன் பாலச்சந்திரன் மற்றும் மிகச் சிலரை கப்பலுக்குள் கொண்டு செல்வதே எனது திட்டமாக இருந்தது. மேலும் நான் கடலில் தரித்து நிற்கும் கப்பலில் இவர்களுக்காகக் காத்திருப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் இவர்களை மூன்று நாடுகளுள் ஒன்றில் சுழற்சி முறையில் பாதுகாப்பாக வைத்திருக்கவும் திட்டமிட்டேன்.

இந்த நாடுகள் மேற்குலகைச் சேர்ந்தவை அல்ல. ஆபிரிக்க நாடுகள் இரண்டும் ஆசிய நாடு ஒன்றும் இந்த மூன்று நாடுகளாகும். நான் எனது பிரதிநிதிகள் மூலம் அந்த நாடுகளின் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எனது கோரிக்கையை வலியுறுத்தி அவர்களை எனது திட்டத்திற்குச் சம்மதிக்க வைத்தேன். இந்தத் திட்டங்கள் ஆபத்தாகத் தோன்றி னாலும் இதனைச் செய்து முடிப் பதற்கு நான் தயாராகவே இருந்தேன். எமக்கு வேறு தெரிவு எதுவும் இருக்கவில்லை. நாம் இந்த விடயத்தில் உள்ள ஆபத்தை எதிர்கொள்ளத் தயங்கினால் இதற்கு மாற்றாக இருப்பது மரணத்தைத் தவிர வேறொன்றும் இல்லை.

மேலும் நான் ஒரு ரகசியமான நம்பிக்கையையும் கொண்டிருந்தேன். அது கடைசி நிமிடத்தில் பிரபாகரன் எமது திட்டத்திற்கு இணங்கி நாட்டைவிட்டு வெளியேறுவதற்குச் சம்மதிப்பார் என்பதுதான். ஆகவேதான் நான் எனது திட்டங் களை இதனடிப்படையில் உருவாக்கினேன்.

**தமிழில்: இராஜராஜன்**

எமது திட்டத்தின் முக்கிய பகுதி திடுக்கீடச் செய்யும் அம்சங்களைக் கொண்டிருந்தது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றால் மேலும் விமானம் மூலமான பறப்புக்களை மேற்கொண்டு ஏனையோரையும் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யத் திட்டமிட்டேன்.

ஆனால் இவை நடைமுறைச் சாத்தியமாக அமையவில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனக்குத் தேவையாக இருந்தது. ஆனால் இவ்வளவு தொகைப் பணம் என்னிடம் இருக்கவில்லை. புலிகள் இயக்கத்தின் கடல் கடந்த அமைப்பு இந்தப் பணத்தை எனக்கு வழங் கியிருக்க வேண்டும். நோர்வேயில் இருந்த நெடியவன் தேவையான பணத்தை எனக்கு வழங்குவாரென காஸ்ட்ரோ, சாள்ஸ் அன்ரனிக்கு உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. நான் பலமுறை இது பற்றி மீண்டும் மீண்டும் அவசரமாக வேண்டுகோள் விடுத்தேன். இந்தப் பணம் அவசரமாகத் தேவைப்படுவ தாகவும் காலம் கடந்து கொண்டிருப் பதாகவும் என்னால் தெரிவிக்கப் பட்டது. பணம் வருகின்றது பணம் வருகின்றது என எனக்குக் கூறப்பட்டது. ஆனால் அது வந்து சேரவேயில்லை.

இதற்கிடையில் வெளிநாட்டில் இருந்த புலிகளின் விமானப் படைப் பிரிவுத் தலைவர் அச்சுதனுடன் நெடியவன் தொடர்புகளை ஏற்படுத்தினார். அச்சுதன் ஏற்கனவே எம்மால் கோரப்பட்ட வான்புலிகள் அமைப்பின் விமானமோட்டிகளை எமது நடவடிக்கைக்கு வழங்குவதற்குச் சம்மதித்திருந்தார். ஆனால் நெடியவனின் உத்தரவின் பிரகாரம் என்னுடன் தொடர்புகளை மேற்கொள்வதை அவர் நிறுத்தினார். அந்த வேளையில் நான்

கவலைப்பட வேண்டாம் என்றும் நான் கே.பி மாமாவிடம் விரைவில் சென்றுவிடுவேன் என்றும் கூறிக்கொண்டிருந்தான். மேலும் இந்தச் சிறியவன் தனது பொருள்கள் சிலவற்றை ஒரு சிறிய பையில் போட்டு எப்போதுமே தன்னுடன் எடுத்துச் செல்வதோடு ''நான் கே.பி. மாமாட்டப் போறேன்'' என்றும் சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் அவனது எதிர்பார்ப்பு நிறைவேறவேயில்லை. இதனை நான் நினைக்கும் போதெல்லாம் மிகுந்த மனவேதனை அடைவதோடு எமது திட்டத்தைக் குழப்பிய நெடியவன் மீது கோபமடைந்தேன்.

**நெடியவன் ஏன் இப்படிச் செய்தார் என்று எனக்குத் தெரியவில்லை**



நெடியவன் ஏன் இப்படிச் செய்தாரென்பதை என்னால் உண்மையிலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் காஸ்ட்ரோவின் உத்தரவுப் படியே இவை நடந்ததாக நினைக்கின்றேன். அவர்கள் கே.பி. நன்மதிப்புப் பெறுவதை விரும்பவில்லை. இந்தச் சம்பவம் ஒன்றே புலிகள் இயக்கத்தில் தவறுகள் எவ்வாறு நிகழ்ந்துள்ளன என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். தனிப்பட்ட சிலரின் பொறாமைக் குணங்களும் ஐக்கியமின்மையும் இயக்கத்தின் நன்மதிப்பையும் போராட்டத்தையும்

நினைத்தேன். ஆகவேதான் பாதுகாப்புக் கருதி அவர்கள் தொடர்புகளைத் துண்டித்து விட்டதாக நினைத்தேன். இதன் காரணமாகவே எமது ஆயுதங்களை மௌனமாக்குவது தொடர்பான அறிக்கையை வெளியிட்டேன். சூசையுடன் ஆலோசித்த பின்னரே இந்த அறிக்கையை நான் வெளியிட்டேன். நடேசன், புலித்தேவன் ஆகியோர் இன்னொரு பக்கத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

பிரபாகரன் அம்புலன்ஸ் வண்டியில் தப்பியோட முயற்சி செய்தபோது கொல்லப்பட்டதாக வெளிவந்த தகவல் தவறானது. அவர் இராணுவ முற்றுகையை முறியடிக்கும் முயற்சியைக் கைவிட்டு திரும்பிச் சென்றுள்ளதாக பின்னர் அறிந்தேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு பிரபாகரனின் உடலைத் தொலைக்காட்சியில் பார்த்தேன். எல்லாம் முடிந்துவிட்டதை என்னால் உணர முடிந்தது.

மேலும் பிரபாகரன் சரணடைந்த பிறகு சுட்டுக் கொல்லப்பட்டதாக வெளிவந்த செய்திகள் பொய்யானவை. பிரபாகரனைப் பற்றி நான் நன்கறிவேன். அவர் ஒரு போதுமே சரணடைந்திருக்கமாட்டார். தலைவர் பிரபாகரன் ஒரு போதும் சரண் அடைந்திருக்கமாட்டார். அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அவர் சரண் அடைந்ததாகக் கதைகள் பரப்பப்பட்டதை நான் அறிவேன். சிலர் இதனை வேண்டுமென்றே பரப்பி உள் ளனர். ஏனைய சிலர் மற்றவர்கள் கூறி

## புலிகளின் துணிச்சல் தமது மனதில் ஆழமாகப் பதிந்ததாக இராணுவத் தரப்பினர் தெரிவிப்பு

உண்மையிலேயே பித்துப் பிடித்தவன் போலானேன். பின்னர் கூலிக்கு வேலை செய்யும் விமான மோட்டிகளை ஹெலிகொப்டரை ஒட்டுவதற்காக அணுகினேன். ஆனால் தேவையான நிதிவளம் இன்மையால் இதுவும் சாத்தியப்பட வில்லை.

மே மாத நடுப்பகுதியில் இலங்கை இராணுவம் வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பகுதிகளை முற்றுகையிட்டு மும்முனைத் தாக்குதலை ஆரம்பித்தது. இதற்குப் பிறகு ஹெலி கொப்ரர் மூலமான விடுவிக்கும் முயற்சி காலம் தாழ்ந்ததாகத் தோன்றியது. ஆகவே மிகுந்த மனவேதனையுடன் இந்தத் திட்டத்தை நான் கைவிட்டேன். நெடியவன் மற்றும் கஸ்ரோ ஆகிய இருவர் குறித்தும் ஆத்திரப்பட்டேன் ஆனால் உதவிகளின்றி எதுவும் செய் வதற்கு என்னால் முடியவில்லை. இறுதியில் அந்த முழுக் குடும்பமுமே மரணத் தைத் தழுவ வேண்டிய தாயிற்று.

இதில் பாலச்சந்திரனின் மரணம் எனக்கு மிகுந்த மன வேதனையைக் கொடுத்தது. அவனுக்கு 12 வயதுதான் அப்போது. நான் அவனை ஒருபோதும் பார்த்ததில்லை. நான் பிரபாகரனுடன் தொலைபேசியில் உரையாடும்போது இந்தப் பையன் அவரது மடியில் அமர்ந்திருப்பா னென நினைக்கின்றேன். ஏனென் றால் பிரபாகரன் என்னுடன் கதைக் கும்போது இடையில் தொலை பேசியை இந்தப் பையனிடம் கொடுத்து 'இந்தா கே.பி மாமாவோட கதை' என்று கூறுவார். நானும் அவனுடன் உரையாடுவேன். பிற்பாடு இந்தப் பையனுடன் தொடர்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவனது நினைவுகளை நான் எப்போதுமே மனதில் வைத்திருந் தேன்.

பின்னர் போர் தீவிரமடைந்து ஷெல் வீச்சுக்கள் மோசமாகிய வேளையில் பாலச்சந்திரன் மிகவும் பயத்துடன் காணப்பட்டதாக அறிந்தேன். சாள்ஸும் வான்வழி மூலமாகத் தப்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு என்னைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். இளம் பாலச்சந்திரன்

பாதித்துள்ளது.

சில புலம்பெயர் தமிழர் பிரிவுகளும் தமிழ்நாடு அரசியல் வாதிகளும் பிரபாகரனும் அவரது மனைவி மதிவதனியும் உயிருடன் இருப்பதாக கதைகளைப் பரப்பி வருகிறார்கள்.

சிலர் இத்தகைய புனைகதைகளைத் தமது சொந்த நலனுக்காக வெளியிடுகின்றனர். மேலும் இவர்கள் இந்தச் சம்பவங்களை உணர்வுப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளவும் தயாராகவில்லை.

நான் இறுதிக் கட்டம் வரை சூசையுடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளேன். மேலும் இந்த விடயங்கள் தொடர்பாக உத்தியோகபூர்வமாகவும் அறிந்தேன். மேலும் பிரபாகரனின் உடலை தொலைக்காட்சியில் பார்த்தவுடன் இது பிரபாகரன்தான் என்பதைப் புரிந்து கொண்டேன். மிகுந்த மனக்குழப்பம் அடைந்தேன். ஏனையவர்களின் தொடர்புகளைத் துண்டித்து தனிமையில் இருந்து அழுதேன்.

நான் பிரபாகரனின் மரணம் தொடர்பான செய்திகள் வந்தவுடன் அதனை மறுத்தது உண்மைதான். நான் எவரையும் தவறாக வழி நடத்துவதற்கு எண்ணவில்லை. உண்மையில் என்ன நடந்ததென்பதைக் கூறுகின்றேன். பிரபாகரன், பொட்டு அம்மான் மற்றும் சிலர் இராணுவ முற்றுகையை

யதை விழுங்கி, நம்பி, அடுத்தவர் களுக்குத் தெரிவித்தனர்.

ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மூத்த தலைவர்களில் ஒருவர் கூட, தலைவர் பிரபாகரன் சரண் அடைந்ததாகவும், அவர் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா முன்னிலை யில் நிறுத்தப்பட்டதாகவும் அவர் முழங்காலில் நிற்குமாறு உத்தரவிட்டுச் சுட்டுக்கொன்றார் என்றும் கூறியதாக எனக்கு நம்பகமாகத் தெரியவந்தது. பிரபா உயிரோடு இருந்த வேளை அவருக்கு தலைசாய்த்துத் செயற்பட்ட தலைவர் ஒருவர் ஏன் இவ்வாறு கூறித்திரிந்தார் என்று என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆனால்-

பிரபாவைத் தோற்கடித்து இராணுவத்தினர் பிரபா எப்படி இறந்தார் என்பது குறித்துப் பெரிதாகப் பேசுகிறார்கள். பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் -

விடுதலைப் புலிகள் இயகத்தினர் இறுதி நேரத்திலும் சரண் அடையாது எந்தளவு துணிச்சலுடனும் உறுதி யுடனும் போராடினார்கள் என்பது குறித்து தமது மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதாக என்னிடம் தெரிவித் தார். ஆனால் எமது மக்களில் சிலர் பிரபாகரனைப் பற்றி இகழ்ச்சியாகப் பேசுகிறார்கள். எனது தலைவர் இறுதி

### கே.பி. தனது செவ்வியில் விவரிப்பு

முறியடித்தவாறு பரவைக் கடலை நோக்கி நகர்ந்துள்ளார்கள். வேறு இரு பிரிவினரும் வேறு திசையில் நகர்ந்துள்ளனர்.

இவர்களின் நோக்கம் காட்டினுள் பத்திரமாகச் சென்றடைவதாக இருந்தது. நான் கடற்புலிகளின் தளபதியான சூசையுடன் தொடர்புகொண்ட போது முதலில் அவர் பிரபா மற்றும் பொட்டு ஆகியோர் இராணுவ முற்றுகையை முறியடித்து முன்னே நகர்ந்ததாகக் கூறினார். இதன் பின்னர் அவருடன் தொடர்பேதும் கிடைக்கவில்லை. நானும் தலைவர் பாதுகாப்பான ஒரு இடத்தை அடைந்துவிட்டதாக

வரை போராடி வீரமரணம் அடைந்தார் என்பதனை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பிரபாகரனின் மனைவி மதிவதனி யும், மகள் துவாரகாவும் இறுதி யுத்தத் தின் போது ஷெல் வீச்சுக்களில் அகப் பட்டு இறந்துவிட்டதாக அறிந்தேன். சாள்ஸ் அன்ரனி யுத்தத்தின் போது காயமுற்று மரணமடைந்துள்ளார். ஆனால் இளைய மகனான பாலச்சந்திரன் பற்றிய உண்மையான தகவல்களைப் பெறமுடியவில்லை என்று கூறியிருக்கிறார் கே.பி. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புத்தூதர் இலங்கை செல்வதால் என்ன உண்மை தெரியப்போகிறது?



## எதுவும் நடக்காது என்கிறார் பழ.நெடுமாறன்

நாகர்கோவில், ஓக. 23

இந்தியாவிலிருந்து சிறப்புத் தூதரை இலங்கைக்கு அனுப்பி வைப்பதால் அவர் மூலம் என்ன உண்மை வெளியுலகுக்குத் தெரிந்து விடப் போகிறது - என்று உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கேள்வியெழுப்பியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிறந்தநாள் விழா ஒன்றில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை நாடாளுமன்றத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 5 எம்.பிக்கள் டில்லிக்கு வந்து பிரதமரைச் சந்தித்து, இலங்கைத் தமிழர்கள் நிலைமை குறித்து விளக்கியுள்ளனர். சென்னைக்கு வந்து முதல்வர் கருணாநிதியையும் சந்தித்துப் பேசியுள்ளனர். தமிழர் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம் வேகமாக நடைபெறுகிறது. ஒரு லட்சம் சிங்கள இராணுவத்தினர் தமிழர் பகுதிகளில் முகாமிட்டுள்ளனர். அவர்களது குடும்பத்தினரை அங்கு நிரந்தரமாகக் குடியேற்றம் செய்ய வீடுகள் கட்டும் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன என்று அந்த எம்.பிக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், இங்கிருந்து சிறப்புத் தூதரை அனுப்பி என்ன உண்மை தெரிய வரும். ஐ.நா. குழுவுக்கு அனுமதி வழங்காத இலங்கை அரசு இந்திய அரசின் தூதரை வரவேற்கிறது என்றால் அதன் பொருள் என்ன?

இந்தியத் தூதர் வெளியிடும் அறிக்கை, ஐ.நா. குழுவை அனுமதிக்க மறுத்ததற்குப் பதிலாகக் காட்டப்படும். வேறு எதுவும் நடக்காது.

- இப்படி அவர் கூறினார்.

# இந்தியாவில் 26 கோடி பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழ்!

சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளை கடந்து விட்ட நிலையிலும் உலகில் அதிக ஏழைகள் உள்ள நாடாகவே இந்தியா இது வரை இருந்து வருகிறது.

இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில், 26 கோடியே 3 லட்சம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர். இவர்களில் கிராமப்புறங்களில் 19 கோடியே 32 லட்சம் பேரும், நகரங்களில் 6 கோடியே 71 லட்சம் பேரும் வசிக்கின்றனர். 75 சதவீத ஏழைகள் கிராமங்களில் வாழ்கின்றனர்.

இந்தியாவில் கிட்டத்தட்ட 38 சதவீதம் மக்கள் ஏழ்மை நிலையில் உள்ளனர் என்று மத்திய அரசு அமைத்த குழு மதிப்பிட்டுள்ளது. கடந்த 2004 - 2005 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு டெண்டுல்கர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினர், உடல் நலம், கல்வி, சுகாதாரம், சத்துணவு, வருமானம் ஆகியவற்றை அளவீடாகக் கொண்டு மதிப்பிட்டுள்ளனர்.

# காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்கக்கோரி இந்தியா முழுவதும் 'மக்கள் இயக்கம்'

## பா.ஜ.க. தேசிய செயலர் பேட்டி

சென்னை, ஓக. 23

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க வலியுறுத்தி இந்தியா முழுவதும் மக்கள் இயக்கம் நடத்தப்படும் - என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயலர் முரளிதர் ராவ் கூறினார்.

இதுகுறித்து சென்னையில் பேட்டியளித்த அவர் மேலும் கூறியவை வருமாறு-

காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை காஷ்மீரில் உள்ள தலைவர்களும் டில்லியில் உள்ள தலைவர்களும் எப்படி கையாளப் போகிறார்கள் என்பதை அந்த மாநிலம் மட்டுமின்றி இந்த நாடே உற்றுநோக்குகிறது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் 10 சதவீத பகுதியான பள்ளத்தாக்கில் மட்டுமே இந்தப் பிரச்சினை நிலவுகிறது.

அந்தப் பகுதியிலுள்ள முஸ்லிம் பழைமை வாதிகளும், பிரிவினைவாதிகளும் தான் பிரச்சினையை ஏற்படுத்துகிறார்கள். அங்கு சிறுபான்மையினராக உள்ள குஜ்ஜார், ஷியா முஸ்லிம், சீக்கியர்கள், காஷ்மீர் இந்துக்கள் பிரிவினையை விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையை அந்த மாநில அரசு கையாளத் தெரியாத நிலையில் இருக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகளைச் சமாளிக்கும் அனுபவமோ, தெளிவான சிந்தனையோ அந்த மாநில அரசுக்கு இல்லை.

காஷ்மீருக்கு சுயாட்சி அந்தஸ்து வழங்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்திருப்பது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலளிக்க பிரிவினைவாதிகளுக்கு இன்னும் உத்வேகம் அளிப்பதாகவே உள்ளது. இதன்மூலம் இந்திய ஒருமைப்பாடும் மதநல்லிணக்கமும் பாதிக்கப்படும். காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க வலியுறுத்தி பா.ஜ.க. இந்தியா முழுவதும் மக்கள் இயக்கமாக நடத்துகிறது. ஆங்காங்கே பொதுக்கூட்டங்களும் நடத்தவுள்ளோம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# தி.மு.க.-அ.தி.மு.க. அல்லாத அணிக்கு தே.மு.தி.க. தலைமை தாங்கத் தயார்!

## விஜயகாந்த் அதிரடி

சென்னை, ஓக. 23

வரும் சட்டசபைத் தேர்தலில் கூட்டணிக்குத் தயார். ஆனால், தி.மு.க. - அ.தி.மு.க. அல்லாத கூட்டணிக்குத் தலைமை ஏற்கத் தயார் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

மதுராந்தகம் அருகே உள்ள மாமண்டூரில் தே.மு.தி.க். சார்பில் கப்டன் விஜயகாந்த் திருமண மண்டபம் என்ற இலவசத் திருமண மண்டபம் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழாவும் 6 ஜோடிகளுக்கு இலவசத் திருமண விழாவும் நேற்றுக் காலை நடந்தது.

தே.மு.தி.க. தலைவர் நடிகர் விஜயகாந்த் தலைமை தாங்கி திருமண மண்டபத்தை திறந்து வைத்தார். பின்னர் 6 ஜோடிகளுக்கு இலவசத் திருமணத்தை நடத்தி வைத்தார்.

அப்போது அவர், ஏழை-எளிய மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக இலவசத் திருமண மண்டபம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

வரும் சட்டசபைத் தேர்தலில் கூட்டணிக்குத் தயார். ஆனால், தி.மு.க. - அ.தி.மு.க. அல்லாத கூட்டணிக்குத் தலைமை ஏற்கத் தயார் என்றும் தெரிவித்தார்.

மேலும், தே.மு.தி.கவின் ஆதரவு இல்லாமல் தமிழகத்தில் இனி ஆட்சி அமையாது என்றும் அவர் தெரிவித்தார்.

**இந்தியச் செய்திகள்**

# எல்லை தாண்டும் மீனவரைச் சுடக்கூடாது இலங்கை, தமிழக மீனவர்கள் பரிந்துரைப்பு




சென்னை, ஓக. 23

எல்லை தாண்டும் தமிழக மீனவர்களைச் சுடக்கூடாது - என்று இலங்கை, தமிழக மீனவர்கள் குழுவினர் பரிந்துரைத்துள்ளனர்.

இருநாட்டு மீனவர்களிடையே உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான இருதரப்பு மீனவர்களின் பேச்சு சென்னையில் நடைபெற்றது. இதில் எல்லை தாண்டும் தமிழக மீனவர்களை சுடக்கூடாது என்பது உள்பட பல்வேறு பரிந்துரைகளை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து இலங்கை மீனவர் குழுவின் தலைவர் சூரியகுமாரன் கூறியவை வருமாறு -

இலங்கையில் கடல் வளத்தை அழிக்கும் எந்தவிதமான தொழிலையும் நாங்கள் செய்வதில்லை என்று முடிவெடுத்து சில மாற்று முறைகளில் மீன்பிடித்து வருகிறோம். தமிழக மீனவர்களின் விசைப்படகும், அதில் பயன்படுத்தும் வலைகளும் கடல் வளத்தை அழிக்கக் கூடியவை. எனவே இந்தப் பேச்சில் எங்கள் பகுதியில் தடை செய்யப்பட்ட தொழில்கள் எவை? அதை எப்படித் தடுப்பது? மேலும் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து பேச இருக்கிறோம்.

இந்தப் பேச்சின் முடிவில் இதன் மூலம் எடுக்கப்படவுள்ள பரிந்துரைகளை இரு நாட்டு அரசுக்கும் தெரிவிக்க இருக்கிறோம். இரு நாட்டு அரசுகளும் எடுக்கின்ற முடிவில் தான் எங்கள் முடிவும் சார்ந்திருக்கிறது. அதற்கு முன் எங்களால் எந்த முடிவும் எடுக்க முடியாது.

கடல் எல்லையை இலங்கை அரசு நிர்ணயம் செய்துள்ளது. எல்லை தாண்டி மீன் பிடிப்பதை நாம் தடுக்க முடியாது. அதை தடுப்பது இலங்கை அரசுதான். கடல் தான் எங்களைப் பிரிக்கிறது, எங்கள் உறவு முறையில் பிரிவு இல்லை. எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களைச் சுடு வதை நிறுத்துங்கள், அவர்களை சட்ட ரீதியாக நீதிமன்றம் முன் நிறுத்துங்கள் என்றும் நாங்கள் பரிந்துரைக்க முடிவு செய்துள்ளோம்.

கச்சதீவு முன்பு இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்பு ஏற்பட்ட ஒரு ஒப்பந்தம் மூலம் கொடுத்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் பயன்படுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. கச்சதீவில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கவும், வலைகளை காயவைக்கவும், ஓய்வு எடுக்கவும் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் அதை அரசுகள் தான் முடிவு செய்ய வேண்டும்.

இந்திய மீனவர்களை எல்லை தாண்டி வாருங்கள் என்று நாங்கள் அழைக்க முடியாது. ஆனாலும் அவர்கள் மீன் பிடிப்பதில் மீனவர்களான எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. மீன் பிடிக்கும் முறைதான், குறிப்பாக விசைப்படகும், அவர்கள் பயன்படுத்தும் வலைகளும்தான் முறையற்றவை. அதற்கு இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது.

- இப்படி அவர் கூறினார்.

# வீட்டுக்குள் புகுந்து அரிவாள் முனையில் மாணவியைச் சிறைவைத்தார் இளைஞர்

## 6 மணிநேரப் போராட்டத்தின் பின் பொலிஸாரால் மீட்பு

கோபிசெட்டிபாளையம், ஓக. 23

இளைஞர் ஒருவர் அரிவாள், பெற்றோலுடன் வீடு புகுந்து கல்லூரி மாணவியைச் சிறை வைத்து கொலை மிரட்டல் விடுத்தார். தகவலறிந்து அங்கு விரைந்த பொலிஸார் 6 மணிநேரம் போராடி அந்த மாணவியைப் பத்திரமாக மீட்டனர். அந்த இளைஞரும் கைதுசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு-

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையத்தைச் சேர்ந்தவர் சின்ன பழனிச்சாமி இவருடைய மனைவி பத்மாவதி. இவர்களுடைய மகள் தேவகி (வயது - 23) கல்லூரியில் படித்து வருகிறார்.

7 ஆண்டுகளுக்கு முன்பு அதே பகுதியைச் சேர்ந்த் கற்பூர வியாபாரி மகாதேவனிடம், சின்ன பழனிச்சாமி நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளார். இதில் இருவருக்கும் பாதைப் பிரச்சினை காரணமாக தகராறு ஏற்பட்டது.



இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணி அளவில் சின்ன பழனிச்சாமியும், அவருடைய மனைவி பத்மாவதியும் வெளியே சென்றிருந்தனர். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் அரிவாள் மற்றும் ஒரு கானில் பெற்றோல் ஆகியவற்றுடன் அங்கு வந்த மகாதேவன் திடீரென்று சின்ன பழனிச்சாமியின் வீட்டுக்குள் புகுந்து கதவை பூட்டிக் கொண்டார்.

அப்போது வீட்டினுள் தூங்கிக் கொண்டு இருந்த தேவகி சத்தம் கேட்டு எழுந்தார். தனது அறைக்குள் மகாதேவனைப் பார்த்ததும் அவர் அதிர்ச் சியில் உறைந்து செய்வது அறியாது திகைத்தார். உடனே மகாதேவன், அரிவாளைக் காட்டி 'சத்தம் போட்டால் வெட்டி விடுவேன்' என்று சொல்லி தேவகியை மிரட்டினார். இதை சற்றும் எதிர்பார்க்காத தேவகி பயத்தில் சத்தம் போட்டு அலறினார். தேவகியின் அலறல் சத்தம் கேட்டு வெளியே சென்று இருந்த தந்தை சின்ன பழனிச்சாமி ஓடிவந்து பார்த்தார். வீட்டுக்குள் இருந்தபடி சின்ன பழனிச்சாமியைப் பார்த்த மகாதேவன், 'என்னை நெருங்கினால் தேவகியைக் கொன்று விடுவேன்' என்று அவரை மிரட்டினார்.

இதனால் அப்படியே நின்று விட்ட சின்ன பழனிச்சாமி, ''என் மகளை விட்டு விடு. என்ன வேண்டுமானாலும் தருகிறேன்'' என்று கெஞ்சினார். அதற்கு மகாதேவன், என்னிடம் வாங்கிய இடத்தை எனக்கு தந்து விடு. இல்லை என்றால் உன் மகள் மீதும் என்மீதும் பெற்றோலை ஊற்றி தீ வைத்துக்கொள்வேன் என்று மகாதேவன் எச்சரித்தார்.

இதற்குள் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அங்கு ஓடி வந்தார்கள். அவர்களும், தேவகியை விட்டு விடுமாறு மகாதேவனிடம் கெஞ்சினார்கள்.

இந்தச் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் கோபிசெட்டிபாளையம் பொலிஸார் அங்கு விரைந்து வந்து மின் இணைப்பை துண்டித்தனர்.

இதற்கிடையே, மகாதேவனின் உறவினர்களும் அவருடன் சமரச பேச்சில் ஈடுபட்டனர். அப்போது மகாதேவன், பொலிஸார் தன்னை அடிக்கக் கூடாது, தன் மீது வழக்கு போடக்கூடாது என்று கேட்டுக்கொண்டார். அதற்கு அனைவரும் சம்மதம் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து மகாதேவன் தனது பிடியில் இருந்த தேவகியை வெளியே அனுப்பி வைத்தார். தேவகியை வெளியே அனுப்பிவிட்டு சிறிதுநேரத்தில் மகாதேவனும் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தார். உடனே பொலிஸார் மகாதேவனைக் கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மண்ணில் பிறந்து வெளிநாடுகளில் பணிபுரிந்துவரும் டாக்டர்கள் திரும்பி வந்து இங்கு சேவையாற்ற வேண்டும்

## யாழ். அரச அதிபரின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 23

இந்நாட்டில் பிறந்து, இந்த நாட்டில் கல்வி பயின்று வெளிநாடுகளில் பணி புரியும் டாக்டர்கள் இங்கு திரும்பிவர வேண்டும். எமது மக்களுக்கு அவர்கள் சேவையாற்ற வேண்டும்.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

திருநெல்வேலியில் ''நொதேர்ண் சென்ரல் ஹொஸ்பிற்றல்'' கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியவை வருமாறு :-

அரசாங்கத்தால் வைத்தியசாலை நடத்தப்பட்டால் என்ன, தனியார் துறையினரால் வைத்தியசாலை நடத்தப்பட்டால் என்ன பயன்பெறுவது மக்களே. உயிர் கொடுக்கின்ற உத்தமமான சேவை இந்த வைத்திய சேவை. இந்த நாட்டில் பிறந்து, இங்கு கல்வி கற்ற பலர் வெளிநாடுகளில் வைத்தியத் தொழில் புரிகின்றார்கள். அவர்கள் இங்கு வரவேண்டும். இங்கு வந்து எம் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் - என்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறிதரன் அங்கு பேசுகையில் கூறியவை வருமாறு:-

வன்னி மாவட்டத்தில் யுத்தத்துக்கு முன்னர் பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை சிறப்பாக இயங்கியது. அதேபோன்று இன்று இங்கு அடிக்கல் நடப்படும் வைத்தியசாலையும் செயற்பட வேண்டும். அதைத் தொடர்ந்து வன்னியிலும் இத்தகைய வைத்தியசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

40 ஆயிரம் தமிழ் மறவர்களையும் 2 இலட்சம் வரையான மக்களையும் நாம் இழந்து நிற்கின்றோம். தோற்றுப் போன சமூகமாகியுள்ளது எமது சமூகம். அதிலிருந்து நாம் மீண்டெழவேண்டும்.

இங்கு இன்று கட்டியெழுப்பப்படும் வைத்தியசாலை போன்று வன்னி மக்களுக்காகவும் வைத்தியசாலைகள் கட்டியெழுப்பப்பட வேண்டும் - என்றார்.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இந்நிகழ்வில் உரையாற்றுகையில்;

இவ்வாறான வைத்தியசாலைகள் அமைப்பதன் மூலம் குடாநாட்டு மக்களுக்கு மாத்திரம் சேவைகளை வழங்குவதுடன் நின்றுவிடாது வடமாகாண மக்கள் அனைவருக்கும் சேவைகளை வழங்கத் தயாராக வேண்டும் - என்றார். (ஒ-ஐ-319)

(நிகழ்வின் படம் 5ஆம் பக்கத்தின்)

## அரசுடன் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை குறித்து பேசுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தயார்

கொழும்பு, ஓக. 23

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் 2005ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நடத்தத் தயாராகவுள்ளதாகவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளும், 2005ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளும் தொடர்புடையனவாக உள்ளதால் 2005ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தாம் தயாராக உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வர்த்தகத்துறை பிரதிநிதி றொசான் லீமன் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, 2005ஆம் ஆண்டு ஜி.எஸ்.பி. வரிச் சலுகை வழங்கும்போது ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகவுள்ளதாகக் கூறியிருக்கின்றார். (ஒ-க)

## வட்டக்கச்சி வாசி விபத்தில் மரணம்

கிளிநொச்சி, வட்டக்கச்சி, கட்சன் வீதியில் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்த ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கட்சன் வீதி, வட்டக்கச்சியைச் சேர்ந்த சிவானந்த குரூஸ் மரியதாசன் என்பவர் ஆவார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் வீதியில் நடந்துசென்றவேளை இந்த விபத்து நடைபெற்றது.

காயமடைந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் நேற்று மரணமானார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10-405)

## தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன் மு.காங். சாட்சியம் அளிக்காது

கொழும்பு, ஓக. 23

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கப்போவதில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

''புலிகளுக்கும் அரசுக்குமிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் அதாவது 2002முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிச் சம்பவங்கள் தொடர்பாகவே ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்கின்றது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டது, காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள், எல்லைக்கிராமங்களிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டது போன்ற கொடூர சம்பவங்கள் இடம்பெற்ற காலப்பகுதி இந்த காலவரையறைக்குள் சேர்க்கப்படவில்லை. இவற்றுக்கு காரணமானவர்கள் இன்றைய அரசின் உயர் பதவிகளிலுள்ளனர். முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அவலங்கள் ஆணைக்குழுவின் காலவரையறைக்குள் சேர்க்கப்படவில்லை. எனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த ஆணைக்குழு முன்னால் சாட்சியமளிப்பதால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை'' - என ஸ்ரீல.மு.கா. பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.



## கையில் சூடம் கொளுத்தியதால் காயமுற்ற மாணவன் பரீட்சை எழுத முடியவில்லை!

### பூசாரியும், பெற்றோரும் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஓக. 23

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவனது கையில் சூடத்தைக் கொளுத்திய பூசாரி ரத்தோட்ட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பரீட்சையில் உயர் பெறுபேறு கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பெற்றோர் இம்மாணவனை பூசாரியிடம் அழைத்துச் சென்றிருந்தனர்.

ரத்தோட்ட சுதுகங்கவத்த என்ற தோட்டத்தைச் சேர்ந்த தேவசந்திரன் துஷ்யந்தன் என்ற மாணவனே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் ஆவார். கையில் தீக்காயம் ஏற்பட்டதால் இந்த மாணவன் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவரது கையில் சூடம் கொளுத்த உதவி புரிந்த பெற்றோரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மாத்தளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இம் மூவரும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரம் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று ரத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

## சன் சீ கப்பல் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக கனடாவில் ஆர்ப்பாட்டம்

வான்கூவர், ஓக. 23

'சன் சீ' கப்பல் தமிழ் அகதிகளை ஆதரிக்கும் வகையில் கடந்த சனிக்கிழமை கனடாவில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

கனடா விக்டோரியாவிலுள்ள இனவாதத்துக்கு எதிரான வலையமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 40 கனேடியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கோஷங்களை எழுப்பினர்.

இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள் கனடாவிலுள்ள டொரண்டோ, வான்கூவர் போன்ற நகரங்களிலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என இந்த அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

விக்டோரியா சென் டேனியல் சதுரங்கத் தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது வாகனங்களை நிறுத்திவிட்டு கோஷங்களை எழுப்பினர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதிகள் தமது உரிமைகளுக்காக வாதிடுவதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கௌரவமாகவும், மரியாதையாகவும் நடத்தப்பட வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இனவாதத்துக்கு எதிரான வலையமைப்பைச் சேர்ந்த றோய் ஹென்றி என்பவர் தெரிவித்தார்.

இதேவேளை, 'சன் சீ' கப்பலில் சென்ற 490 அகதிகளுக்கு பல்வேறு உதவிகளை வழங்கவும், சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவும் கனடாவிலுள்ள புலம்பெயர் தமிழ் சமூக அமைப்புகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. (ஒ-சி)

### ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரின்

## தற்கொலைச் சம்பவம் குறித்து பொலிஸாரிடம் சஜித் வாக்குமூலம்

கொழும்பு, ஓக. 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த முன்பாக கடந்த மாதம் ரியன்சி அல்கம என்பவர் தீ மூட்டி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் மிரிஹான பொலிஸார் அக்கட்சியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவிடம் நேற்றுக் காலை வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்தனர்.

இத் தீக்குளிப்பு சம்பவத்துக்கு சிறிது நேரத்துக்கு முன்னர் ரியன்சி அல்கம தன்னுடன் பேசினாரா என்று பொலிஸார் கேட்டனர் என்றும் தான் இல்லையென மறுத்துவிட்டார் என்றும் சஜித் ஊடகங்களுக்கு நேற்றுக் கூறினார்.

தீக்குளிப்பு செய்தி கூட சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் தாமதமாகவே தமக்குத் தெரியவந்தது என்று தான் பொலிஸாரிடம் கூறினார் என்றும் சஜித் சொன்னார்.

இச்சம்பவம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்னவிடமும் பொலிஸார் இன்று வாக்குமூலத்தைப் பதிவுசெய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 29 வருடகால முழு நேர செயற்பாட்டாளரான ரியன்சி அல்கம (வயது - 60) அக்கட்சியின் மறுசீரமைப்பு யோசனைகளை உடனடியாக வெளியிடுமாறு கோரியே கடந்த மாதம் சிறிகொத்த முன்பாக மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டார்.

எரிகாயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அல்கம சிகிச்சை வெற்றியளிக்காது உயிரிழந்தார். (ஒ-சி)

## பறித்துச்சென்ற துப்பாக்கியை மீட்கும்வரை மட்டக்களப்பு நகரில் வீதிச்சோதனைகள்

### தொடரும் என்கிறார் இராணுவ அதிகாரி

மட்டக்களப்பு, ஓக. 23

மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக பொலிஸ் சார்ஜன்டிடம் பறித்துச் செல்லப்பட்ட துப்பாக்கி இதுவரை மீட்கப்படவில்லை. இதனைக் கண்டு பிடிக்கும்வரை மட்டு.நகரில் வீதிச் சோதனைகள் இடம்பெறும் என்றும் சந்தேகத்துக்கிடமான இடங்கள், வீடுகள் யாவும் சோதனையிடப்படும் என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரப் பிரதேசத்தில் அரசியல் கட்சி அலுவலகங்களை வைத்திருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது. மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கி பறிப்புச் சம்பவம் குறித்து இதன்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

23 - 3ஆவது இராணுவ படைப்பிரிவுத் தலைமையகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் டெலோ, தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள், ஈ.பி.டி.பி., புளொட், ஈரோஸ் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தற்போதைய பாதுகாப்பு நிலைமை, அதனைத் தொடர்ந்து பேணுதல், அதற்காக தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுதல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன என இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பொதுச் செயலாளர் எட்வின் சில்வா கைலேஸ்வரராஜா இச்சந்திப்பு தொடர்பாகத் தெரிவிக்கையில், ''கடந்த வெள்ளிக்கிழமை இரவு மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் துப்பாக்கி அடையாளம் தெரியாத நபர்களால் பறித்துச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இங்கு பேசப்பட்டு தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளின் கருத்துகள் கேட்டறியப்பட்டன. கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய எவராவது திட்டமிட்ட நடவடிக்கைகளுக்காக இதனைப் பறித்துச் சென்றிருக்கலாம் என்பதைத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர் -என்றார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலிப் படிப்பகம் மாநகர சபை, யாழ்ப்பாணம்

# விமானப்படைக்கு நவீன கண்காணிப்பு கருவிகளை வழங்கியது அமெரிக்கா

கொழும்பு, ஒக. 23

இலங்கை விமானப்படைக்கு அதி நவீன கண்காணிப்புக் கருவித் தொகுதிகளை அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இரத்மலானை விமானப்படைத் தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இந்தக் கண்காணிப்புக் கருவித் தொகுதிகளை அமெரிக்காவின் பிரதித் தூதுவர் வலெரி பௌலர் அம்மையார், விமானப்படைத் தளபதி எயார் மார்சல் றொசான் குணதிலகவிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் அமெரிக்க விமானப் படையின் ஒரு பிரிவான ஹவாய் தீவிலுள்ள தேசிய வான்பாதுகாப்புப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் டரில் வொங் மற்றும் இருநாட்டு விமானப்படை உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பேணப்படும் இராணுவக் கண்காணிப்புத் தகவல் பரிமாற்றத்தில் இந்தக் கருவிகள் முக்கியமான இடத்தை வகிக்கும் என்று இந்த நிகழ்வில் பேசிய இலங்கை விமானப் படைத் தளபதி எயர் மார்சல் றொசான் குணதிலக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய அமெரிக்காவின் பிரதித்தூதுவர் வலெரி பௌலர் அம்மையார், இலங்கை விமானப்படைக்கும் அமெரிக்கத் தூதரகத்துக்கும் இடையில் பேணப்படும் நெருக்கமான உறவு குறித்து புகழ்ந்துரைத்தார்.

அத்துடன் வெற்றி நாள் அணிவகுப்பு, அண்மையில் இடம்பெற்ற அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நீர் நிரப்பும் நிகழ்வு போன்ற தேசிய நிகழ்வுகளை நேரலையாகக் காண்பதற்கும் இந்தக் கருவிகள் உதவும் என்றும் மேஜர் ஜெனரல் வொங் மேலும் தெரிவித்தார்.

## குப்பை கொட்டிய 780 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 23

சூழல் பாதிப்படையும் வகையில் குப்பைகளைப் பொது இடங்களில் வீசிய 780 பேர் நாட்டின் பல பகுதிகளிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த் ஜெயகொடி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக அந்தந்தப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

டெங்கு ஒழிப்பு வாரத்துக்குள் இவர்கள் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் சூழல் மாசடையும் வகையில் குப்பைகளைக் கொட்டுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம் மூலமே யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பதிகாரி மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறாமல் வெளிநாட்டவர்கள் தரைவழியாகப் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஏ - 9 வீதி வழியாக பொதுமக்கள் மட்டுமே பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் வசிக்கும் - இரட்டைக் குடியுரிமை பெற்ற இலங்கையைச் சேர்ந்தவர்களும் பாதுகாப்பு அமைச்சிடம் முன் அனுமதி பெற வேண்டும். வடபகுதிக்குச் செல்லும் உள்ளூர் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கு தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் ஊடாக விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

## இணைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பு குறித்து ஜே.வி.பி. தவிர ஏனைய எதிர்க்கட்சிகள் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இருப்பினும், அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு ஒரு பலமான கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று அக்கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கூடிக் கலந்தாலோசித்து வருகின்றனர் என்றும் அக்கட்சி வட்டாரம் தெரிவித்தது.

## 'பேஸ்புக்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல தமிழ்ப் பாடசாலை ஒன்றில் குறித்த மாணவி 11 ஆம் தரத்தில் கல்வி கற்று வந்தார் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமான 19 வயது இளைஞர் ஒருவருடன் இணையம் ஊடாக காதல் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட குறித்த மாணவி இறுதியில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

காதல் தோல்வியில் ஏற்பட்ட விரக்தி நிலைமையே இந்தத் தற்கொலைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறு மாதங்களாக 'பேஸ்புக்' மூலம் இருவரும் தொடர்புகளைப் பேணி வந்துள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி குறித்த லண்டன் வாழ் இளைஞர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் எனவும் அப்போது மாணவின் வீட்டுக்கும் அவர் சென்றிருந்தார் எனவும் சொல்லப்படுகிறது.

இலங்கையிலிருந்து லண்டன் திரும்பியது முதல் குறித்த மாணவியை அந்த இளைஞர் நிராகரிக்கத் தொடங்கினார் எனவும், இதனால் உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட மாணவி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

# விமானப் படைத் தளபதியின் வீட்டு நிர்மாணப் பணியை நிறுத்த உத்தரவு

## மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிரடி

கண்டி, நக்கிள்ஸ் மலைப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட மரபுரிமைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வந்த இலங்கை விமானப்படைத் தளபதி றொசான் குணதிலகவின் வீட்டு நிர்மாண வேலைகளை உடனடியாக நிறுத்துமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் உலகத்தின் முக்கிய இடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நக்கிள்ஸ் மலைப்பகுதியில் இந்த ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்காக இலங்கையின் விமானப் படைத் தளபதி எயார் மார்சல் றொசான் குணதிலக்க 51 ஏக்கர் காணியை கொள்வனவு செய்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆடம்பர மாளிகையை அமைப்பதற்காக அவர் 6 கோடி ரூபாவை செலவிட்டுள்ளார் என அறியவந்துள்ளது. (அ-சி)

## அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிட்டவை 'ஜி.எஸ்.பி.'வரிச்சலுகை நீக்கத்தால் பெரும் ஆபத்தை நோக்கியுள்ளன.

சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களின் செயல்களால் மாணவர்கள் மரணிக்கின்றனர். ஊடக நிறுவனங்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. சர்வதேச நிறுவனங்கள் முற்றுகையிடப்படுகின்றன.

வாழ்க்கைச் செலவினம் தினமும் உயர்ந்து செல்கின்றது. இந்த நாட்டு மக்களுக்கு நம்பகமான மாற்றுவழி குறைவாக உள்ளதால் இந்த ஆட்சியின் பாவங்களைத் தாங்கிக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**ஓரணியில் திரள வேண்டிய காலமிது**

ஆகவேதான் இச்சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சிகளாகிய நாம் அரசியல் வேறுபாடுகள், இன வேறுபாடுகள் அனைத்தையும் களைந்து இந்நாட்டின் எதிர்காலத்துக்காக ஓரணியில் திரளவேண்டும். இதற்காக நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

இது ஐக்கிய தேசியக் கட்சியினதோ, ஜே.வி.பியினதோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதோ நிகழ்ச்சி நிரல் அல்ல. இது இந்நாட்டின் நிகழ்ச்சி நிரலாகும்.

நாம் ஒரு பலமிக்க ஐக்கிய எதிர்க்கட்சிக் கூட்டணி ஒன்றை அமைப்பதற்காக எதிர்க்கட்சிகளின் தலைவர்களான சோமவன்ஸ அமரசிங்க, சரத் பொன்சேகா, ஆர். சம்பந்தன், ரவூப் ஹக்கீம், விக்கிரமபாகு கருணாரட்ண மற்றும் அரசில் உள்ள அரசின் கொடுங்கோலாட்சிக்கு எதிரானவர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

நாம் இவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட்டால் இந்நாட்டு மக்கள் எம்மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைப்பார்கள். நாம் எமது நாட்டின் மனித உரிமைகளுக்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும் பாடுபடுவோம்." - எனக் குறிப்பிட்டுள்ளார். (ஒ-சி)

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்துல ஜயசேகர விடுமுறையில் சென்றுள்ளார் என்றும், வெளிவிவகார அமைச்சின் பிரசாரப் பிரிவின் பணிப்பாளராக பந்துல ஜயசேகர நியமிக்கப்படலாம் என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஏ-சி)

## போர் நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்படிக்கையின் மூலப் பிரதி அரச ஆவணங்கள் காப்பகத்திற்கும் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மூலமான அனுபவங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின்முன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோர் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் சாட்சியமளித்திருந்தனர்.

எவ்வாறாயினும் போர் நிறுத்த உடன்படிக்கை காணாமல் போயுள்ளமை குறித்து எந்தவொரு அரச அதிகாரியும் பொறுப்பேற்கவில்லை என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

# மரண அறிவித்தல்கள்

## ஐயம்பிள்ளை சத்தியமூர்த்தி

**(மலோடியஸ் மியூசிக், Speed Call Service உரிமையாளர்)**



ஜெயந்திநகர், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் 105, சந்தனமாதா கோயில் வீதி, புங்கன் குளம், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சத்தியமூர்த்தி நேற்றுமுன்தினம் (21.08.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - தவமணி தம்பதியினரின் மகனும், பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் சுபாசினியின் அன்புக் கணவரும் கரிபிரசாத் (லண்டன்), கார்த்திக், அனுசியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனஞ்சயன், கணேசபாலன் (கேபிள் கணேஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வனிதா (சிவாஜினி), தவச்செல்வி (ஈசா) ஆகியோரின் பாசமிகு மைத்துநரும் காலஞ்சென்ற சண்முகநாதன் சரஸ்வதியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2010) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

105, சந்தனமாதா கோயில் வீதி,
அரியாலை.
T.P. : 0773464358
0214590265

தகவல் : குடும்பத்தினர்.

(102342)

## வேலன் கந்தசாமி



வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தசாமி நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக்கணவரும், குணரட்ணம் (குணம் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்), நவரட்ணம் (டென்மார்க்), விஜயரட்ணம் (தேசிய நீர் வழங்கல் சபை, வவுனியா), காலஞ்சென்ற புஸ்பரட்ணம் (முன்னாள் அதிபர், வரணி வடக்கு அ.த.க. பாடசாலை) மற்றும் சண்முகநாதன் (தேசிய நீர் வழங்கல் சபை, யாழ்ப்பாணம்), தமயந்திசெல்வி (ஹொலண்ட்), வேந்தன் (ஹொலண்ட்), மனோகரன் (மனோ ஸ்ரோர்ஸ், வடவரணி), சுதாகரன் (கஜன் - லண்டன்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.08.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வரணி வடக்கு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி வடக்கு,
வரணி.

தகவல்: க.குணரட்ணம் (மகன்).
தொ.பே. : 0213212430


NALIN INFORMATION TECHNOLOGIES Pvt Ltd

Intel 2.7 Ghz Dual Core
Intel G31 Asus M Board
320GB Samsung Hard disk
1GB Ram Kingston(800)
DVD Writer Samsung,
ATX Power Logic Casing
16" AOC/ AOPEN LCD Monitor
Power III UPS, MM Keyboard
Mouse, Speaker
47,000/=

Intel 2.93 Ghz Core 2 Dou
Intel G31 Asus M Board
320GB Samsung Hard disk
1GB Ram Kingston(800)
DVD Writer, ATX Casing
19" LG/ Acer LCD Moniter
Power III UPS, MM Keyboard
Mouse,Speaker
55,500/=

LAPTOP HP COMPAQ CQ42 84,000/=
LAPTOP HP COMPAQ CPQ420 69,000/=
ADSL D-Link RouterGLB-802C 4,800/=
TP-LINK TD-8817 4,200/=
HSDPA Modem HUAWEI E1750 (7.2Mbps) 6,750/=
Kingston 2GB - 975/=, 4GB - 1350/=, 8GB - 2500/=

அனைத்து கணனிகளுக்கும் 3 வருட உத்தரவாதத்துடன்
அனைத்து கணனி கொள்வனவாளர்களுக்கும் GIFT வழங்கப்படும்.

195/4, PARAMESWARA JUNCTION,
TP: 021 2221166, 0777667974

NALIN information Technologies Pvt Ltd



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தொடரும் கற்றலுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- அதிபர் -

The Express Institute
Irupalai, Kopay.



ESPECIALLY DESIGNED COURSE FOR KIDS
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கணினிப்பயிற்சி நெறிகள்
LEVEL 1 TO 4
புதிய பிரிவுகள் ஆரம்பம்
1ஆம் பிரிவு 25/08/2010 at 9.30 a.m.
2ஆம் பிரிவு 28/08/2010 at 3.30 p.m.
3ஆம் பிரிவு 01/09/2010 at 9.30 a.m.
DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel. 021 222 4403


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.